Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 12/00
දිනමුරසු වාරමලර் பெப்.14—20,1999

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 296

## முற்றுகைக்குள் சந்திரிக்கா!

## திட்டத்தை மாற்றிய புலிகள்



## உங்கள் பிரபலம் எப்படி

## யாரை நேசிக்கிறேன்

## டில்லியில் தப்பிய ராஜீவ்?

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## ஓநாய்கள் ஜாக்கிரதை!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இலங்கை அரசு
விரும்பினால்
மத்தியஸ்தம் வகிக்கத்
தயாராக இருப்பதாக
அமெரிக்கா கூறியிருக்கிறது!

இதனை நல்லெண்ணம்
என்று நாம்
கருதிவிடக்கூடாது!

ஆடு நனைகிறது
என்று ஓநாய்
அழுவது ஏன் என்பது
நாமறியாதது அல்லவே!

தென்னாசியப் பிராந்தியத்தில்
தன் மேலாதிக்க ஆசையை
நிறைவேற்றத் துடிக்கிறது
அமெரிக்க அரசு!

இலங்கைத்தீவில்
தொடரும் போருக்கு
பயிற்சிகளும் உதவிகளும்
தாராளமாகத் தருகிறது!

குட்டை குழம்பினால்தான்
மீன் பிடிக்க வசதி!

தென்னாசியப் பிராந்திய
நாடுகள் இடையேயும்
நாடுகளுக்குள்ளும்
பூசல்கள், பிணக்குகள்
இருந்தால் தான்
அவற்றைச் சாக்காக்கி
தலை நீட்ட வசதி!

"இலங்கை இனப்பிரச்சனைக்கு
மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தம் தேவையா,
என்பதை அரசுதான்
தீர்மானிக்க வேண்டும்!"
என்று சில மாதங்களுக்கு
முன்னர் கூறியது அமெரிக்கா!

இப்போது என்ன
கூறுகிறது!
"நாம் தயார்...!
அழைத்தால் குதிப்போம்;
மத்தியஸ்தம் வகிப்போம்!"
என்று கூறியுள்ளது!

இந்த மாற்றத்திற்கு
காரணம் என்ன?

சோழியன் குடுமி
சும்மாவா ஆடும்?

மத்தியஸ்த கோரிக்கை
வலுப்பெற்று வருகிறது!

தென்னாபிரிக்கா
போன்ற நாடுகள்–
மத்தியஸ்தம் செய்ய
அழைப்பு விடுத்தால்
ஏற்கக் காத்திருக்கின்றன!

அந்த நாடுகள்
மத்தியஸ்தம் செய்தால்
இங்கு தன்பிடி
தளர்ந்து போகுமே...
என்று நினைக்கிறது
அமெரிக்கா!

ஆகவே, மத்தியஸ்தம்
அவசியம் என்றநிலை
உருவாகுமானால்
அந்த மத்தியஸ்தராக
தாம் இருக்கவேண்டும்
என்பதே நோக்கம்!

அதற்காகத்தான்
இப்போதே தன்
விருப்பத்தை வெளியிட்டுள்ளது!

அமெரிக்காவின்
மத்தியஸ்தம் என்பது
ஒருபோதும் ஏற்கவியலாதது!

பிள்ளையையும் கிள்ளி
தொட்டிலையும்
ஆட்டிவிடுவது போன்று,
போருக்கும் உதவியபடி
பிரச்சனைதீர
மத்தியஸ்தம் வகிக்க
விருப்பமும் தெரிவித்து
நாடகமாடுகிறது!

அமெரிக்காவின்
இந்த இரட்டைவேட
நிலை குறித்து
தமிழ்பேசும் தரப்பு
விழிப்பாக
இருந்தாக வேண்டும்!

பாலஸ்தீனப் பிரச்சனையிலும்
இஸ்ரேலுக்கு மறைமுக
சாதகமாகவே
அமெரிக்க மத்தியஸ்தம்
வஞ்சகம் செய்கிறது!

ஒப்புக்காக–எப்போதாவது
இஸ்ரேலை
கண்டிப்பது போல
நாடகமாடுகிறது!

இதனை உணர்ந்தே
அரபாத் சீறினார்.
காலக்கெடு விதித்தார்!

இங்கும் அமெரிக்கா
மத்தியஸ்தம் வகித்தால்
ஒரு தலைப்பட்சமாகவே
நடந்து கொள்ளும்!

விடுதலைப் புலிகளை
பயங்கரவாத அமைப்பாக
பிரகடனப்படுத்தியது
அமெரிக்காதான்!
அதே அமெரிக்கா
இன்று மத்தியஸ்தம்
பற்றிப் பேசுகிறது!

இந்த அறிவிப்பு
ஆபத்தானது!
உள்நோக்கம் கொண்டது!

இங்கு மத்தியஸ்தம்
வகிக்க அமெரிக்காவை
அனுமதிப்பது–
இப் பிராந்திய
நலனுக்கும் ஏற்புடையதல்ல!

மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தம்
நாடி நிற்கும்
தமிழ் பேசும் தரப்பு
அமெரிக்காவிடயத்தில்
உஷாராக இருக்க வேண்டும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஓங்காரத்தின் உண்மை!

அண்டசராசரம் அனைத்தும் நிறைந்திருப்பது ஓங்காரம் எனும் நாதம். இந்த நாதம் என்றும் ஒலிப்பது. ஓய்வெதுவு மில்லாமல் ஆதியிலிருந்து நிலையாக ஒரே சுருதியுடன் ஒலித்தவண்ணம் இருப்பது. உயிர் வாழும் பிராணிகள், உயிரற்ற ஜடப்பொருட்கள் அனைத்திலும் ஓங்காரம் வியாபித்திருக்கிறது.

காற்றிலும் கடலின் அலையிலும், பெய்யும் மழையிலும், பெருவெளியான ஆகாயத்திலும் ஓங்கார நாதத்தை நாம் உணரமுடிகிறது. இயங்கும் இயந்திரங்களிலும் ஊர்ந்து செல்லும் வாகனங்களிலும் இவ்வொலி வெளிப்படுவதை நாம் கேட்கலாம்.

மனிதர்களாகிய எம்மிடம் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் இந்த ஓங்காரத்தை நாம் அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும் இருக்கின்றோம்.

ஓங்காரம் இறைசக்தியின் இயக்கத்தின் வெளிப்பாடு- நிலையான சிவத்தின் இயக்கம்தான் ஓங்காரமாக- சக்தியாக வெளிப்படுகிறது.

ஓங்காரத்தின் வடிவத்தினை சாதாரண மனிதனுக்குப் புலப்படுத்தவே பிரணவமான விநாயகன்-கணபதி-பிள்ளையார் என்ற உருவத்தை ஆன்றோர் படைத்தனர்.

சைவர்கள் எக்காரியத்தைத் தொடங்கும்போதும் ஓங்கார வடிவமான விநாயகனுக்கு முதல் வணக்கம் செலுத்துகின்றனர். சிவத்தை ஒரு சிறு புள்ளியாகவும் அதிலிருந்து வலதுபுறம் நீளும் ஒரு கோட்டினை வரைந்து 'உ' என்ற 'பிள்ளையார் சுழி'யாகவும், எவ்வாசகத்தை எழுதும் முன்பாகக் காகிதத்தில் வரைகிறோம்.

எமது ஐம்புலன்களையும் ஒருநிலைப்படுத்தி தியானத்திலிருக்கும்போது ஓங்கார நாதத்தை எம் முன்னேயே கேட்டு அனுபவிக்கலாம். இந்நிலையில் கிடைக்கும் ஆனந்தத்துக்கு ஈடுமில்லை; இணையுமில்லை.

இத்தகைய உணர்வினைப் பெறுவது மிக மிகச் சுலபமானதுபோல் தோன்றலாம். ஆனால் நாம் நினைப்பது போல் அவ்வளவு சுலபமானதல்ல. இருப்பினும் முயற்சியுடையார் அம்முக்தியினை அடையலாம்.

ஞானேந்திரன்.



## மூஸா கூறிய மொழியின் விளக்கம்

ஹஸரத் மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் பறவைகள், மிருகங்கள் தமக்குள் பேசும் மொழிகளை புரிந்து கொள்வதற்கு கற்றுக்கொடுத்தார்.

இதனை அறிந்த ஒருவர் மூஸாவிடம் வந்து தமக்கும் அம் மொழிகளைக் கற்றுத் தருமாறு கேட்டார். அதற்கு மூஸா (அலை) "அம் மொழிகளை நீர் கற்பதால் உமக்குத் தீமையாகவே அது முடியும்!" என்றார்கள். ஆனால் அவர் விடவில்லை. அதனால் அவருக்கு அம் மொழிகளைக் கற்றுக்கொடுத்தார் மூஸா.

ஒருநாள் அவருக்குச் சொந்தமான குதிரை ஒன்று சாகப்போகும் அல்லாஹ்வின் அறிவிப்பை அவர் வளர்த்த சேவல் தன் குரலால் தெரிவித்தது. இதனை விளங்கிக் கொண்ட அவர் தமக்கு இதனால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய முற்கூட்டியே அக் குதிரையைச் சந்தையில் விற்றுப் பணமாக்கிக் கொண்டார். பின்னொரு நாள் திடீரென்று அவர் முகம் வெளுத்து உடல் எல்லாம் நடுங்கியது. காரணம்- இன்னும் சில தினங்களில் அவர் மௌத்தாகும் செய்தியை அச் சேவல் அன்று கூறியதே.

உடனே மூஸா(அலை) அவர்களை நோக்கி அவர் ஓடினார். "எனது மௌத்துடைய நாளை என்னுடைய சேவல் மூலம் அறிந்துகொண்டேன். அதிலிருந்து நான் விடுபட ஓர் ஆலோசனை கூறுங்கள்!" என்றார். இதைக் கேட்ட மூஸா (அலை) அவர்கள் சாகப்போகும் பிராணியை நீர் எவ்வாறு "சந்தைப்படுத்தினீரோ அதேபோல் உன்னையும் விற்று பணமாக்கிக்கொள்? வேண்டாத மொழியைக் கற்று இழப்பை ஈடு செய்த நீ இறப்பை விரும்பாததேன்?" என்றார்கள்.

எம்.சீ.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.293

### பரிசுக்குரிய கவிதை



### அவர் வருவாரே!

பசலை படர்ந்துடல்
நலிந்து கைவளை
நழுவ முன் நாயகன்
நாடுவானென
நவின்றதுவோ தொலைபேசி!

க. சுவர்ணேஸ்வரன்–
மா.பி.கோயில் வீதி, செங்கலடி.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### திருவிழா

காதல் மொழி
பேசுமிவள்
கருவிழியும்
திருவிழாவா...?
"வாழ்தல் இனிக் கூடும்
மோதல் இனி மாழும்!"
என வசனமிடும் புன்னகையா?

வி.எஸ்.ஏ. ரவிஷங்கர்- ஆசிரியர்
கலாசாலை, மட்டக்களப்பு.

### பூ!

யார் வரவை
பார்த்து நீ
பூக்கிறாய்!

கயல் வண்ணன்-
வவுனியா.

### பெண்ணே உன்

ரெலிஃபோன் மணியோசையிலே
அலைபோல் மனம் அசைந்தவளே....!
எதிரொலியின் குரல் ஒலியில்
உன் எழில்மேனி புன்னகையில்!

தெ. லோஜனா- கொழும்பு-15.

### நேர்த்திக்கடன்

லண்டனுக்கு நலமாக வந்தேன்!
இன்டர்வியூ இனிதே முடிந்தது!
வரன் பிடித்தது, வரித்துக் கொண்டேன்!
வரணி வைரவருக்கு வடைமாலை-சார்த்துக!

செ. வல்லிபுரம், சென் பெனடிக்ட் மா.வ.,
கொழும்பு-13.

### நின்மதி அன்பே!

உலகப் பொலிஸ் என்று
உன்மத்தம் கொண்டலையும்
நாசகார மனிதரின்
நீசமான குண்டுவீச்சில்
நீங்கள் பிழைத்தது
நின்மதி அன்பே! .

சாமீஷ் யோகேந்திரன்-
ஆரையம்பதி-02.

### இலவசத் தொடர்பு....?

கடமை மறந்த
காதல் சல்லாபம்
அரசாங்கச் செலவில்!

அ. சந்தியாகோ- அசோகா
வித்தியாலயம், கண்டி.

### திங்கள்

பூமியினைச் சுற்றுவது
புளித்துப் போனதென்று
திங்களது ஓடிவந்து
தினமுரசில் குந்தியதோ!

ரேணுகா றிபாய்தீன்-
ஏறாவூர்-2.

### கவனம் தேவை

தொலைபேசிப் பெண்ணே!
வலைவீசி உன்னை
விலை பேசி விற்று
கொலை செய்வார் கவனம்!

களுவாஞ்சி நாதன்-
கல்லடி-உப்போடை, மட்டுநகர்.

### பொறி

காலழகி காதோடு பேசி,
காதல் வலை பின்னுகிறாள்....
பில் கிளிண்டன் மாட்டுவாரா....?

எஸ்.ஞானராஜா, கல்குடா.

## கவிதைப் போட்டி இல.296



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 20.02.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.296
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



### நாசகார மனிதர் 98

அன்பின் முரசே! சர்வதேசப் பயங்கரவாதியை தலைகீழாய் பிரசுரித்து அசத்திய நீ அதே மனிதரை 98ன் நாசகார மனிதராகவும் தெரிவு செய்து அகௌரவித்தாய்! வாசக நெஞ்சங்களின் கண்டனத்தையும் தெரிவித்துவிட்டாய்! பணி தொடர வாழ்த்துக்கள்.

வடிவேல் சுரேஸ்கண்ணா-
இருதயபுரம், மட்டக்களப்பு.

வாரத்தில் ஒருநாள் வலம் வந்து எம் இதயத்தில் இடம் பிடித்த என் இதய முரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். மற்றும் 'டிசம்பர் பௌர்ணமி' தொடர், 'உதட்டில் ஓர் மச்சம்' தொடர், ஈராக் அதிபர் 'சதாம் உசேனின்' உண்மைக் கதைத் தொடர் அருமையிலும் அருமை.

செல்வி மா.ஜெயந்தி-
அன்பு வழிபுரம், திருகோணமலை.

அன்பின் முரசே,

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சூப்பர். அதிலும் நடிகை அர்ச்சனாவின் பேட்டி சிறப்பானது. எந்த நடிகையும் கூறாத உண்மைகளை கூறி எம்மைத் திகைப்பில் ஆழ்த்திய அவருக்கு எனது பாராட்டுக்கள்.

க.குகநந்தினி-உக்குவளை.

### எரிச்சல்தான்

அன்பு முரசே!

வாராவாரம் எம் அத்தியாவசியத் தேவையாகவே மாறிவிட்டாய். ஒருவாரம் பார்க்காவிட்டாலே எதையோ பறிகொடுத்தது போல் இருக்கிறது. உன் அரசியல் கருத்துக்கள் மூலமே பல உண்மைகளைப் புரிந்து கொள்கிறோம். தமிழ்க் கட்சிகளுக்கும் அவற்றின் ஆதரவாளர்களுக்கும் முரசு என்றால் எரிச்சல்தான். அதனால் முரசைத் தாக்கிவருகின்றனர். முரசு இன்று இல்லையானால் பல உண்மைகள் வெளிவந்திருக்காது. முரசே! வாசகர்களாகிய நாம் உன்னோடு. நீ எங்களோடு!

சி.ரவிச்சந்திரன், கொழும்பு-15.

### பனிப்போர்

'சந்திக்கு வரும் சங்கதிகளில்' நக்கீரன் அமைச்சர்கள் பௌசிக்கும், அஷ்ரப்புக்கும் இடையே பனிப்போர் என்று கூறியிருந்தார். இதுபற்றி எம் பகுதியில் பிரசாரத்திற்கு வந்த பொ.ஐ.முன்னணி முஸ்லிம் பிரமுகர் ஒருவரிடம் கேட்டேன். 'முரசு' தவறான ஊகம் கூறியுள்ளது என்றார். ஆனால் இப்போது உண்மை பகிரங்கமாகிவிட்டது. அமைச்சர் அஷ்ரப்மீது நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார் அமைச்சர் பௌசி. நக்கீரன் கூறியது உண்மையாகிவிட்டது.

எம்.நிசாம், புத்தளம்.

வாரா வாரம் எப்பொழுது முரசு வரும் என்று எதிர்பார்த்திருக்கும் வாசகர்களில் நானும் ஒருத்தி. வாரம் வரும் 'டிசம்பர் பௌர்ணமி' தொடரை நான் விரும்பிப்படிப்பேன். வெகு விரைவில் முடிவை எதிர்பார்க்கிறேன். கதையை எழுதிய ராஜேஸ்குமாருக்கு என் நன்றி.

நாகராஜா சுபாசினி, திருகோணமலை.

### நேர் நின்று...

'அரசியல் பயங்கரவாதம்' பற்றிய முரசின் ஆசிரியர் தலையங்கம் மிகச் சிறப்பு. இன்றையச் சூழலில் முரசு நேர்நின்று கூறும் விமர்சனங்கள் காலத்தின் தேவை. மிக நேர்த்தியாக தன் பணியை அலட்டல் இல்லாமல் முரசு செய்து வருகிறது. பாராட்டுக்கள்.

இ.ஈஸ்வரநாதன், இலண்டன்.

### பொறாமையில் கல்லெறிவர்

முரசே! இப்போது எங்கும் முரசு பற்றியே பேச்சு. முரசுப் பாணியில் எழுதிக் கொண்டு, முரசின் கருத்துக்களையே தாமும் திரும்ப எழுதிக்கொண்டு முரசை திட்டித் தீர்க்கும் கற்றுக்குட்டி எழுத்தாளர்களும் உள்ளனர். முரசின் இன்றையப் பங்களிப்பை மனதாரப் பாராட்ட அவர்களது பொறாமையும், கற்றுக்குட்டித்தனமும் இடம்தராது. காய்க்கும் மரத்துக்கே கல்லெறி விழும் என்று முரசு கூறியது சரியே. முரசைத் திட்டித் தீர்க்கும் வேலை தவிர உருப்படியான எந்த விமர்சனமும் செய்யத்தெரியாது. அதுதான் வயிற்றெரிச்சல். அவர்களுக்கு 'முரசு' பதில் கூறினால் முரசின் தரம்தான் தாழ்ந்துபோகும்.

வீ.காரிவாசம், கனடா.

### வசையில்லை

முரசே! 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்பார்கள். தட்டிக் கொடுக்க வேண்டிய நேரத்தில் தமிழ்க் கட்சிகளைக்கூட முரசு தட்டிக்கொடுக்கத் தவறுவதில்லை. முரசின் விமர்சனங்கள் நெத்தியடியாக இருந்தாலும், திட்டித் தீர்ப்பதாக இருப்பதில்லை என்பது எம்மைக் கவருகிறது. பாராட்டுக்கள்.

ஜி.ராகவன், அவுஸ்திரேலியா.

அன்புள்ள மலரே...!

இடி அமீனின் கதையால் இதயம் இடிந்து விழப்பார்கிறது. அதைத் தைரியமாக்க் காப்பாற்றுகிறார் உலக கதாநாயகன் (தற்போதைய) சதாம் உசேன். சிறுகதைகள் தேன் துளிகள். இனிப்பாய் கலக்கித் தருகிறார் இலக்கிய நயத்தை ரசிகன்.

வி.எஸ்.ஏ.ரவிஷங்கர்-
ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.

### சோக வாக்குமூலம்

நில், கவனி, முன்னேறு புதிய வடிவில் மறுபடி வருவது நன்று. டயானாவின் கதையும், இடி அமீனும் அருமையாய் போகின்றன. நடிகை அர்ச்சனாவின் பேட்டி சோகம் கலந்த வாக்குமூலம்.

எம்.ரிஸ்வான், புத்தளம்.

### மௌனம்

வடமேல் மாகாண சபைத் தேர்தல் நடந்து முடியும்வரை, அங்கு நடந்துவந்த முறை கேடுகள் குறித்து பல விமர்சகர்கள் மௌனம் சாதித்தனர். எல்லாம் நடந்து முடிந்த பின்னரே விமர்சனம் செய்கிறார்கள். முரசில் இராஜதந்திரியும், அதிரடி அய்யாத்துரையும் தேர்தல் நடக்க முன்பே தில்லுமுல்லு பற்றி எடுத்துக் கூறிவிட்டனர். அதுதான் முரசு!

எஸ்.தவலிங்கம், நீர்கொழும்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):– 074-513266

# புளொட் – ரெலோ பழிக்குப் பழி மோதல்!

## குருமன்காட்டில் புளொட் கெரில்லா தாக்குதல்

வவுனியாவில் வரிவசூலிப்பு விவகாரத்தில் ரெலோ, புளொட் இடையே ஏற்பட்ட முறுகல் நிலை மோதலில் முடிந்திருக்கிறது. இதுபற்றி முரசுக்குக் கிடைத்துள்ள தகவல்கள் வருமாறு:

வவுனியாவில் லொறிப் பார்க்கில் ஏற்பட்ட பிரச்சனை ஒன்றில், ரெலோ இயக்கத்தினர் புளொட் உறுப்பினர் ஒருவரைச் சுட்டுள்ளனர். அங்கு மோதல் எதுவும் நடக்கவில்லை. 03.02.99 இரவு இச்சூட்டுச் சம்பவம் நடந்தது. லொறிப் பார்க்-புளொட் அமைப்பினரால் நடத்தப்பட்டு வருகிறது. லொறி ஒவ்வொன்றுக்கும் மாதாந்தம் தலா ஐயாயிரம் ரூபா புளொட்டால் அறவிடப்படுகிறது.

தமது உறுப்பினரைச் சுட்டதால் மறுநாள் காலையில் ரெலோ உறுப்பினர் ஒருவரை புளொட் பிடித்து வைத்துக்கொண்டது.

இதனை அறிந்த ரெலோ உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் புளொட்டின் வைரவப் பெரியகுளம் முகாம் நோக்கிச் சென்றனர். அவர்கள் தம் முகாம் நோக்கி வருவதைக் கண்ட புளொட் உறுப்பினர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர். ரெலோவினரும் பதிலுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ரெலோ உறுப்பினரான ஏ.கே.ரவி என்பவர் இச்சண்டையில் படுகாயமடைந்தார்.

இதனையடுத்து வவுனியா இராணுவ பிரிகேடியர் இரு அமைப்புக்களது பிரதிநிதிகளையும் அழைத்து சமரசம் செய்து வைத்தார். எச்சரிக்கை விடுக்கும் தொனியிலேயே பிரிகேடியர் இருதரப்புக்கும் அறிவுறுத்தல்களையும் கூறியிருந்தார்.

தாம் தொடர்ந்து "வரி அறவிடுவோம்!" என்று பிரிகேடியரிடம் ரெலோவினர் நேரடியாகவே கூறினராம்.

பிரிகேடியரது மாநாடு முடிந்த பின்னரும் முறுகல் நிலை தொடர்ந்தது. இரு அமைப்புக்களதும் ஆதரவாளர்கள் இடையேயும் மோதல் நிலை ஏற்பட்டது.

5.02.99 வெள்ளிக்கிழமையன்று இரவு வவுனியா ஸ்ரீநகரில் இரு இயக்கங்களதும் ஆதரவாளர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர்.

### கடத்தல்

5.02.99இல் புளொட் மாணவர் அணி உறுப்பினரான ரூபன் என்றழைக்கப்படும் கனகரத்தினம் கிரிஷாந்தன் (16) ரெலோவினரால் கடத்திச் செல்லப்பட்டார்.

கடத்திச்சென்று அவரைத் தாக்கிய ரெலோவினர், அவரது தலையில் சுட்டுவிட்டு

(நமது நிருபர்)

குற்றுயிராகக் கொண்டுவந்து வைரவப் புளியகுளம் பகுதியில்-வவுனியா புகையிரத வீதியில் போட்டுவிட்டுப் போய்விட்டனர்.

குற்றுயிராகக் கிடந்து துடித்தவரை யாரும் நெருங்கவோ, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவோ முன்வரவில்லை. பின்னர் இரவு 9.30 அளவில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரே அவரை மருத்துவமனைக்குத் தூக்கிச்சென்றனர். ஆனாலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

### தாக்குதல்

இதற்குப் பதிலடியாக ரெலோ மாணவர் அமைப்பினரை புளொட் தேடித்திரிந்தது.

8.02.99 அன்று இரவு புளொட் உறுப்பினர்கள் குருமன்காட்டுச் சந்தியில் பதுங்கி இருந்தனர்.

தெருவின் குறுக்கே லாண்ட் மாஸ்டர் ஒன்றை நிறுத்திவிட்டே பதுங்கி இருந்தனர்.

ரெலோ இயக்கத்தினர் அவ்வழியே சென்று வருவது வழ்க்கம் என்பதால், தாக்குதல் நடத்தும் திட்டத்தோடு காத்திருந்தனர்.

இரவு 7 மணியளவில் ரெலோ உறுப்பினர்கள் குருமன்காட்டுச் சந்திப்பக்கமாக வாகனத்தில் வந்தனர். லாண்ட் மாஸ்டர் குறுக்கே நின்றதால் தமது வாகனத்தை நிறுத்தினர்.

வாகனம் நிறுத்தப்பட்டதும் புளொட் உறுப்பினர்கள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ரெலோ உறுப்பினர்கள் திருப்பித் தாக்குவதற்கு போதிய சந்தர்ப்பம் இருக்கவில்லை. மூன்று ரெலோ உறுப்பினர்கள் பலியாகினர். ஒருவர் காயமடைந்தார். சூசை ரவி, கேதீஸ், ரமேஷ் கண்ணா ஆகியோரே பலியானவர்களாவர். பிறேம் என்பவர் காயமடைந்தார்.

அந்த நேரம் பார்த்து அப்பக்கமாக வந்த ராஜ்குமார் (30) என்னும் ஆசிரியரும் சூடுபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுப் பலியானார். இவர் கரவெட்டியைச் சேர்ந்தவர். உறவினர்கள் கரவெட்டியில் இருக்கின்றனர்.

### மறிப்பு

ரெலோ உறுப்பினர்களைத் தாக்கிவிட்டு வேன் ஒன்றில் மன்னார் பிரதான சாலைப் பக்கமாக புளொட் உறுப்பினர்கள் சென்றுள்ளனர். வவுனியா நகருக்குச் சென்றால் அடையாளம் காணப்படலாம் என்பதாலேயே மன்னார் நோக்கிச்சென்றனர்.

மன்னார் பிரதான வீதியில் உள்ள சோதனை அரணில் வேன் மறிக்கப்பட்டது. தம்மை புளொட் என்று அவர்கள் இனம் காட்டியும், இராணுவ சிப்பாய்கள் அவர்களைக் கைது செய்தனர்.

அவர்களிடம் இரண்டு துப்பாக்கிகள் இருந்தன. இரண்டும் அப்போதுதான் பாவிக்கப்பட்டதின் அடையாளமாக சூடாக இருந்தன. ஒரு துப்பாக்கியில் 30 ரவைகளும், மற்றையத் துப்பாக்கியில் 14 ரவைகளும் தீர்க்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து அவர்கள் நான்கு பேரையும் இராணுவத்தினர் பொலிசாரிடம் ஒப்படைத்தனர். நந்தன், குலசிங்கம், மயில்வாகனம், மின்னிக்கண்ணா ஆகியோரே கைதான புளொட் உறுப்பினர்களாவர்.

மோதல் நடந்த குருமன்காட்டுச் சந்திக்கு இராணுவத்தினர் உடனே விரைந்தனர். அங்கு கூடி நின்றவர்களை அடித்து விரட்டினர். மோதல் நடந்த இடத்திலிருந்து 100-150 யார் தூரத்திலேயே புளொட், ரெலோ முகாம்கள் உள்ளன.

புளொட் அமைப்பே தமது உறுப்பினர்களைப் படுகொலை செய்தது என்று குற்றம் சாட்டியுள்ளது ரெலோ. "பழிக்குப் பழி வாங்கியே தீருவோம்!" என்று ரெலோ வட்டாரங்கள் சூளுரைத்துள்ளன.

தற்காலிக சமரசங்கள் ஏற்பட்டாலும் முறுகல் நிலை இனித் தணியாது போலவே தென்படுகிறது.

---

# அமைச்சர் ஆள் மாறாட்டம் செய்தாரா?

## பத்திரிகையாளர் மாநாட்டில் கேள்வி

நடந்து முடிந்த வட மேல் மாகாண சபைத் தேர்தல் ஒழுங்கீனங்களையிட்டு அமைச்சரவை உறுப்பினர்கள் இருவரே பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளை, வடமேல் மாகாண சபைத் தேர்தலில் பல முறைகேடான சம்பவங்கள் இடம் பெற்றமையினால், சபையைக் கலைத்துவிட்டு மறுதேர்தல் வைப்பதே நலமெனக் கருதுவதாகத் தெரிகிறது.

இதே அபிப்பிராயத்தை சில பிரதி அமைச்சர்களும் கொண்டிருக்கிறார்களாம்.

அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரபும் தேர்தல் நடந்த முறையினை வன்மையாகக் கண்டித்து அறிக்கை விடுத்துள்ளார்.

இதனால் ஆளும் கட்சி உயர் மட்டத்தில் பெரும் அதிருப்தி நிலவுவதாக நம்பப்படுகிறது.

அமைச்சர் மங்கள சமரவீர, மேற்படி இரு அமைச்சர்களும், அமைச்சரவையின் கருத்துக்கு முரணாக நடந்து கொள்வது கட்சியின் மதிப்புக்கே இழுக்கை ஏற்படுத்துகிறது என்று கூறியிருக்கிறார்.

அமைச்சர் பெர்னாண்டோபிள்ளை, வடமேல் மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்த கையோடு பங்களாதேஷுக்குச் சென்றிருக்கிறார்.

அந்நாட்டில் உருளைக்கிழங்கு சாகுபடி மிகச் சிறந்த நிலையில் இலாபகரமாக இருப்பதன் காரணத்தைக் கண்டறிந்துவரச் சென்ற ஏழுபேர் கொண்ட குழுவுக்கு அமைச்சர் பெர்னாண்டோ பிள்ளை தலைமை தாங்கிச் சென்றிருந்தார்.

இக் குழுவினரைக் கண்ட அந்நாட்டின் செய்தியாளர்கள் இவர்களிடம் கேட்ட முதல் கேள்வியே இவர்களைத் திணறடித்துவிட்டதாம்.

"உங்கள் நாட்டில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலின் போது உங்கள் அரசாங்க அமைச்சர் ஒருவரே ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டதாமே! உண்மைதானா?" என்பதுதான் ஒரு பத்திரிகையாளர் அமைச்சர் பெர்னாண்டோ பிள்ளையிடம் கேட்ட கேள்வி.

இந்நாட்டைப் பற்றி பிறநாடொன்றின் செய்தியாளர் இவ்வாறு மோசமான எண்ணத்தைக் கொண்டிருப்பது அமைச்சரின் உள்ளத்தில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது?

---

# 'தாக்கியவர் அவரே'

## புளொட் குற்றச்சாட்டு

புளொட் அமைப்பின் மாணவர் அமைப்பான தமிழீழ மாணவர் பேரவையால் 09.02.99 அன்று அஞ்சலிப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தமது மாணவர் அமைப்பைச் சேர்ந்த ரூபன் (கிரிஷாந்தன்) படுகொலைக்கு கண்ணீர் அஞ்சலி தெரிவித்தே அப்பிரசுரம் வெளியாகியுள்ளது. அப்பிரசுரத்தில் ரூபனை ரெலோ மாணவர் அமைப்பின் தலைவரான ரமேஷ் கண்ணா உட்பட சிலரே தாக்கிக் கொன்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரெலோ மாணவர் அமைப்பின் செயலாளரான ரமேஷ் கண்ணா குருமன்காட்டுச் சந்தியில் புளொட் தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னரே மேற்படி பிரசுரம் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. தாம் பழிக்குப் பழி வாங்கிவிட்டதை மறைமுகமாக தெரிவிக்கவே மேற்படி பிரசுரத்தை புளொட் தமது மாணவர் அமைப்பு ஊடாக வெளியிட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

---

# கதிர்காமர் அழைப்பு!

## நூல் வெளியீட்டு தடுப்பு

அவுஸ்திரேலியா சென்ற வெளிநாட்டமைச்சர் கதிர்காமர், கைத்தொழில் அமைச்சர் ஆகியோர் அங்குள்ள முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கைக்கு வந்து முதலீடு செய்யுங்கள். உங்களை வரவேற்கிறோம்!" என்று அழைப்பு விடுத்தனர். இதனையடுத்து அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தமிழர்களால் நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

'இலங்கையில் முதலீடு' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள அந்த நூலில், இலங்கையில் மனித உரிமைகளது நிலை பற்றி விரிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நூல் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிர்ச்சியடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

---

# புலிகளால் கடத்தல்!

(மட்டு. நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமான புதிய உழவு இயந்திரமொன்றை புலிகள் மட்டக்களப்பிலேயே வைத்து 02.02.99 அன்று காலை 10 மணியளவில் கடத்திச் சென்றனர்.

மட்டக்களப்பு-ஊறணியில் வீதி செப்பனிடுவதற்காக கிறவல் மண் ஏற்றிக்கொண்டிருந்த போது பட்டப்பகலிலேயே அங்கு வந்த புலிகள் உழவு இயந்திர சாரதியையும் மற்றும் அவ்விடத்தில் நின்றிருந்த மூவரையும் உழவு இயந்திரத்துடன் சேர்த்து அழைத்துச் சென்றனர். தமது கட்டுப்பாட்டுப் பகுதியை அடைந்ததும் கூட்டிச் சென்றவர்களை விடுவித்துள்ளனர்.

---

# தெ.ஆ. பத்திரிகையாளர் குழு!

## அரசுக்கு ஆதரவாகப் பிரசாரம்?

தென்னாபிரிக்காவில் இருந்து இலங்கை வந்திருந்த பத்திரிகையாளர்கள் பலர் அரசின் சார்பான போக்கையே கொண்டுள்ளனர்.

இலங்கை அரசின் வெளிநாட்டமைச்சு தென்னாபிரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக குறிப்பிட்ட சில பத்திரிகையாளர்களை தெரிவு செய்து தமது செலவில் அழைத்துள்ளது. தென்னாபிரிக்காவில் இலங்கை அரசுக்குச் சாதகமான பிரசாரம் ஒன்றை நடத்தவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

யாழ்ப்பாணம் சென்ற இந்தப் பத்திரிகையாளர்கள் இராணுவப் பாதுகாப்புடன் சுற்றுலா நடத்தினர். மக்களை சந்திப்பதிலும் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை என்று கூறப்படுகிறது.

முன்னர் தென்னாபிரிக்க பாராளுமன்றத் தூதுக்குழு இலங்கை வந்தபோது உண்மைகளைக் கண்டறிய காட்டிய ஆர்வத்தில் ஒரு பங்கைக்கூட இப் பத்திரிகையாளர்கள் காண்பிக்கவில்லை.

"இனப்பிரச்சனைக்கு தாயகக் கோட்பாட்டு அடிப்படையில் தீர்வு காணமுடியாது!" என்று இப்பத்திரிகையாளர் குழுவில் உள்ள சிலர் தமிழ்க் கட்சிகளிடமே கருத்துத் தெரிவித்தனராம்.

தமிழ்க் கட்சிகளது பிரதிநிதிகளுடனும் ஏனோதானோ போக்கிலேயே கருத்துக்கள் அறிந்தனராம்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை உட்பட முக்கிய அரசுப் பிரமுகர்களை இவர்கள் சந்தித்துள்ளனர்.

---

# சுதந்திர தினத்தில் ஜனாதிபதி உரை!

## பீதியைக் கிளப்பிய அபாய ஒலி !

சுதந்திரதின விழாவையொட்டி புலிகள் தலைநகரில் தாக்குதல் நடத்தக்கூடும் என்று போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்டிருந்தனர். ஆனால் எதுவிதமானச் அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை.

இருப்பினும் அபாயகரமான விளைவுகளைப் பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த அபாய சமிக்ஞை ஒன்று திடீரென அலறியிருக்கிறது. இதனால் பாதுகாப்புத் தலைமையகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இறுதியில் இந்த அபாய அறிவிப்பு தவறுதலாக ஒலித்தது என்று தெரியவந்தது.

இருப்பினும் இத்தகைய அறிவிப்பு ஏற்பட்டமைக்கான காரணம் என்ன என்பதை விசாரித்தறியத் தொடங்கியுள்ளனர்.

சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற விழாவை பாதுகாப்பு அதிகாரிகளும் உளவுத்துறையினரும் அரசு உளவுத்துறைத் தலைமை நிலயத்தில், பெரிய அளவிலான வீடியோத் திரையில் அவதானித்துக்கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி உரையாற்றத் தொடங்கியதும் அபாய அறிவிப்பு அலறியிருக்கிறது. இதனை வேண்டுமென்றே எவரோ இயங்க வைத்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

---

# அகதிமுகாம்களில் 147 பேர் தற்கொலை!

## 300 பேருக்கு நஷ்டஈடில்லை

(காரைதீவு நிருபர்)

திருக்கோவில் பிரதேச அகதி முகாம்களிலிருந்து 147 பேர் கடந்த 11 வருட காலங்களில் தற்கொலை செய்துள்ளனர். இன்றுகூட கள்ளியந்தீவு அகதி முகாம் பாரிய பிரச்சனைகளுக்கு மத்தியில் இயங்கி வருகிறது. உலருணவுக்குப் பதிலாக முத்திரை வழங்கப்படுகிறது. இது பலத்த அநீதி. முகாமில் போஷாக்கின்மை (Malnutrition) நிலவுகிறது. இந்நிலையில் மேலும் பலர் இறக்கலாம் அல்லது தற்கொலை செய்யலாம்.

இவ்வாறு கூறும் அறிக்கையை மனித உரிமைகள் இல்லம் எனும் அமைப்பு வெளியிட்டுள்ளது. மேலும் அதில் 1986 இலிருந்து அம்பாறை மாவட்டத்தில் அடுத்தடுத்து வந்த இனவன்முறை, படையினரின் அச்சுறுத்தல் போன்ற பல காரணங்களினாலும் இடம் பெயர்ந்து முகாம்களிலும், வெளியிடங்களில் இருக்கும் 300 பேருக்கு இன்னும் இறப்பு/இழப்புக்கான நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

இவர்களுக்குரிய நஷ்டஈடுக்கான கோவைகளை ஆலையடிவேம்பு, திருக்கோவில் பிரதேச செயலாளர்கள் அம்பாறைக் கச்சேரியில் ஒப்படைத்தனர். இன்று அங்கு அக்கோவைகள் இல்லை எனக் கூறப்படுகிறது. எடுக்கக்கூடிய ஆவணங்களை எடுத்தாலும் பொலிஸ் அறிக்கை எடுக்க முடியாது. 1989இல் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதனால் பதிவுகள் அழிந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் அந்த 300 பேருக்கான நஷ்டஈடு கேள்விக்குறியாகியுள்ளது. இவர்களில் அநேகம் பேர் விதவைகள். இப்பிரச்சனைகள் எதிர்வரும் 20ம் திகதி அம்பாறையில் நடைபெறவிருக்கும் ஆளுநர் நடமாடும் சேவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

---

# புலிகள் வரம் கொடுத்தும் 'பூசாரிகள்' மின் தரவில்லை!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மின் விநியோகத்தை மீண்டும் வழங்க புலிகள் அனுமதித்ததை அடுத்து பெரும்பாலான பகுதிகளுக்கு மின்சாரம் மீண்டும் கிடைத்துள்ளது. ஆயினும் ஏற்கனவே மின்சார வசதியுடனிருந்த ஏறாவூரிலிருந்து கிரான் வரையான எட்டு மைல் தூரம் உள்ள உள்ளூர்பகுதிக்கு இன்னமும் மின்சார விநியோகம் மீண்டும் வழங்கப்படவில்லை. இதனால் நூற்றுக் கணக்கான மின்சாரப் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

காட்டுப் பகுதிக்கூடாகச் செல்லும் உயர் வலுக்கொண்ட மின் கம்பங்களை பிரதான நெடுஞ்சாலைக் கூடாக மாற்றியமைக்கும் வேலைகள் தொடங்கப்பட்டதாலேயே இந் நிலை தோன்றியுள்ளது. இந்த வேலைகள் முடிவடைய மாதக் கணக்கில் செல்லும் என்று தெரிகிறது.

அதுவரையில் தற்காலிக ஏற்பாடுகளை மேற்கொண்டு மின்சாரம் வழங்கக்கூடியதாக இருந்தும் அதுபற்றிக் கருத்திலெடுக்காது குறித்த சில பகுதிகள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளதாக குறைகூறப்படுகிறது.

மின்சாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மின்மானி வாடகை மாதாமாதம் செலுத்த வேண்டியுள்ளது. மட்டக்களப்பில் மின்சாரம் இல்லாதிருந்த மூன்று மாதங்களுக்கும் இந்த வாடகை அறவிடப்படுகிறது.

இதனிடையே அக்கரைப்பற்றில் ஓரிரவிலேயே ஏழு மின்மாற்றிகள் முன்னர் புலிகளால் தகர்க்கப்பட்டமை தெரிந்ததே. அவ்வாறு தகர்க்கப்பட்ட இடங்கள் இன்றுவரை தொடர்ந்து இருளிலேயே மூழ்கியுள்ளன. அப்பகுதியில் மின் விநியோகத்தை மீண்டும் சீர் செய்ய இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மின்மாற்றிகளை மீண்டும் பொருத்துவதற்கு பாதுகாப்பு அனுமதி கிடைக்காதவரை மின்விநியோகம் சீரடைவது சாத்தியமில்லை என்று அக்கரைப்பற்று மின்சார சபை அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

---

# சயனைட் விழுங்கினர் புலிகள்

## கரும்புலித் தாக்குதலுக்கு வந்தனராம்!

வவுனியாவில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கைதானார். அவரிடம் விசாரணை மேற்கொண்டபோது, கொழும்பில் தங்கியிருந்த புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் பற்றித் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து கொழும்பு புறக் கோட்டை-டாம் வீதியில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரைக் கைது செய்ய பொலிசார் முயன்றனர்.

அந்த இளைஞர் தன்னிடமிருந்த சயனைட் குப்பியைக் கடித்துப் பலியானார். இத்தகவலை கொழும்பு ஆங்கில வார இதழ் வெளியிட்டுள்ளது.

வவுனியாவில் சுதந்திர தின வைபவத்தில் தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டிருந்ததாகவும் கைதான புலிகள் இயக்க உறுப்பினர் கூறியுள்ளாராம்.

வவுனியாவில் சுதந்திர தின விழாவுக்கு வரும் இராணுவ உயர் அதிகாரிகள்மீது கரும்புலித் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டது.

அதற்காக வவுனியா வந்த கரும்புலி ஒருவரும், சந்தேகத்தில் கைதானபோது சயனைட் உட்கொண்டு பலியானார் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

---

# தொழிலாளர்களுக்கு முன்னுரிமை!

## புலிகள் வழங்கிய வாய்ப்பு

கிழக்கில் புலிகளின் வசமுள்ள பகுதியிலேயே அதிகளவு செங்கல் உற்பத்தி செய்யப்படுகிறது. புலிகளும் செங்கல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்கள்.

காலாகாலமாக முதலாளிமாரே தொழிலாளிகளை வேலைக்கமர்த்தி செங்கல் உற்பத்தியில் ஈடுபட்டு வருவது வழக்கமாகும். அப்படியிருப்பினும் இம்முறை வழக்கமாக உள்ளது போன்று முதலாளிமாரே மூலதனமிட்டு செங்கல் உற்பத்தி செய்ய முடியாதென்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மாறாக தொழிலாளர்களே முழுமையாக செங்கல் உற்பத்தியில் ஈடுபடும் நிலையை அமுல் படுத்தவுள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

செங்கல் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள், தேவையாயின் முதலாளிமாரிடமிருந்து உழவு இயந்திரங்களையும் மற்றும் வாகன வசதிகளையும் கூலிக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் பகுதியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் செங்கற்கள் நகருக்குக் கொண்டு வரப்படும்போது எல்லைப் பகுதியில் நிலை கொண்டுள்ள புளொட் இயக்கத்தினர் கூடுதலான வரிப்பணம் பெற்று வருகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பிரச்சனை சென்ற ஆண்டு பூதாகாரமாக வெடித்து பொது மக்கள் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

# ஆங்கிலம் கலக்கும் அறிவிப்பாளர்கள்

## கொச்சைத் தமிழும் கொஞ்சம் ஆங்கிலமும்

தனியார் தொலைக் காட்சி, வானொலிகள் பல தமிழில் இங்கு தோன்றியிருப்பது வரவேற்கத்தக்கதே.

புதிய தமிழ் அறிவிப்பாளர்களும், அறிவிப்பாளரணிகளும் நன்கு பிரகாசிக்கிறார்கள். குறிப்பிட்ட சிலரே ஆதிக்கம் செய்யாமல் புதியவர்கள் வருவது முன்னேற்றமே.

ஆயினும் சன்.ரி.வி அறிவிப்பாளர்களை பார்த்து, தாமும் அவர்கள் போன்று ஆங்கிலம் கலந்த தமிழ் பேசி வெறுப்பூட்டுகிறார்கள் சில அறிவிப்பாளர்கள்.

'சன்.ரி.வி' எனப்படும் தமிழக தனியார் தொலைக்காட்சி தமிழ் நாட்டிலேயே பலரது விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளது. தமிழை கொச்சையாக உச்சரிப்பது, தேவையற்ற ஆங்கில சொற்பதங்களை புகுத்தி பேசுவது என்பன கண்டனத்திற்கு உள்ளாகி வருகின்றன.

மோசமான முன் உதாரணத்தை இங்குள்ள தமிழ் பேசும் ஆண், பெண் அறிவிப்பாளர்கள் சிலர் ஏன் பின்பற்றித் தொலைக்க வேண்டும்?

முன்னர் இலங்கை வானொலி தமிழ்ச் சேவையை அதன் அறிவிப்பாளர்களது தமிழ் உச்சரிப்புக்காகவே இந்தியாவிலும் விரும்பிக் கேட்பார்கள். இன்றுகூட அப்துல் ஹமீத் போன்ற நம்மவர்களுக்கு தமிழ் நாட்டு மக்களிடம் மதிப்பும், மரியாதையும் இருக்கிறது.

ஆனால், இன்றோ, தமிழையே திருத்தமாக உச்சரிக்கத் தெரியாத இங்குள்ள சில ஆண் பெண் அறிவிப்பாளர்கள் ஆங்கிலப் புலமையை(?) காட்டுகிறார்கள்.

தாய் மொழியையும், தனித்துவங்களையும் காக்க போராடும் மக்களிடம் இருந்து இத்தகைய மொழிப் பற்றில்லாதவர்கள் வருவது துரதிஷ்டம். இத்தகையோருக்கு சந்தர்ப்பம் வழங்கும் வானொலி, தொலைக் காட்சிகளும் தமிழ் மொழி சிதைவதை மறைமுகமாக ஊக்குவிக்கின்றனவா?

சமீபத்தில் சக்தி தொலைக்காட்சியில் தேவாவின் இசை விருந்து பற்றிய நிகழ்ச்சியில், தமிழை கொச்சையாக ளகர லகர வித்தியாசம் தெரியாமல் உச்சரித்த ஒரு பெண்மணி, இடைக்கிடையே தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தையும் செருகி வெறுப்பூட்டினார். சக்தி தொலைக்காட்சி தரமான நிகழ்ச்சிகளையும் தருகிறது. அதனை மறப்பதற்கில்லை. தமிழுக்கு அதிக நேரம் ஒதுக்கியும் உள்ளனர்.

அப்படிப்பட்ட தொலைக் காட்சியில் சிறந்த தமிழ் அறிவிப்பாளர்களுக்கா பஞ்சம்? எழில்வேந்தன் போன்றோர் முயன்று புதிய அறிவிப்பாளர்களை தமிழில் மட்டும் திருத்தமாக அறிவிக்க பயிற்றுவிக்கலாமே.

ஏனைய தனியார் வானொலி, தொலைக் காட்சிகளுக்கும் இது பொருந்தும். அரச தொலைக்காட்சி, வானொலி பற்றி நாம் கூறவில்லை. ஏனெனில் அவை திருத்த முடியாதவை.

எம்.பாக்கியராசா, கொழும்பு-08.

# அடிக்கல் மட்டும்!

(புத்தளம் நிருபர்)

புத்தளம் மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகள் சிலவற்றுக்கு புத்தளம் நகரபிதா கே.எம்.பாயிஸ் அவர்களினால் அடிக்கல் மட்டும் நாட்டப் பட்டது. ஆனால் இன்றுவரை கட்டட வேலைகள் ஆரம்பமாகவில்லை.

அடிக்கல் மட்டும் நாட்டினால் போதுமா? கட்டடம் கட்டும் எண்ணமே இல்லையா? நகரசபைத் தலைவர் நடவடிக்கை எடுப்பாரா?

# துறவிகளின் சீற்றம்!

இலங்கையில் ஏற்பட்டுள்ள அமைதியின்மைக்கான காரணம் என்ன? அதற்கான தீர்வு என்ன? என்று விளக்கமளித்த துறவிகள் இருவர் முரண்பாடான கருத்துக்களால் சீற்றமடைந்தனர்.

ஒரு புத்த துறவி உரையாற்றுகையில் "அமைதியின்மைக்கான காரணம் மக்கள் சரியான அரசியல் தலைவர்களையும், பாராளுமன்றப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்கவில்லை. அரசியல் வாதிகளின் போக்கே இனப்பாகுபாடுகளையும் அடக்கு முறைகளையும் தோற்றுவித்தது!" என்றார்.

இதனைச் செவிமடுத்துக் கொண்டிருந்த இந்துத் துறவி எழுந்து, "துறவிகளானவர்கள் பற்றற்ற நிலையை வளர்க்க வேண்டும். ஆனால் அவர்களே அரசியலுக்குள் புகுந்து நாட்டைச் சுடுகாடாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் சின்னாபின்னப்பட்டு அமைதியிழந்து நிற்பதற்கான காரணகர்த்தாக்களில் துறவிகளில் ஒரு சாராரே முன்னிற்கிறார்கள்," என்று தனது சீற்றத்தை வெளிப்படுத்தினார்.

"சமாதானம் தனக்குள்ளிருந்தும், தனது வீட்டிலிருந்தும்தான் உருவாகவேண்டும்" என்றார் சட்டத்தரணி ஒருவர். இல்லை "சமாதானம் நாட்டுக்குள்ளிருந்தே உருவாக வேண்டும்!" என்றார் தொண்டர் நிறுவனப் பிரதிநிதி ஒருவர். மட்டக்களப்பில் சமீபத்தில் நடந்த சமாதானக் கருத்தரங்கொன்றிலேயே மேற்படி முன்னுக்குப்பின் முரணான கருத்துப் பரிமாற்றம் நடந்தது.

# அதிர்ஷ்டசாலி தேடப்படுகிறார்

சமீபத்தில் இடம்பெற்ற அதிர்ஷ்ட சீட்டிழுப்பொன்றில் ரூபா முப்பது இலட்சம் மட்டக்களப்பு-செங்கலடியைச் சேர்ந்தவருக்குக் கிட்டியுள்ளது என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் வெளியானதும் அந்த அதிர்ஷ்டசாலி யார் என அறிந்து கொள்வதில் போட்டி போடுகின்றனராம், அங்கு சீருடையினருடன் சேர்ந்து செயற்படும் தமிழ்க்குழுக்கள்.

இருப்போரிடமும், இல்லாதாரிடமும் முடிந்தளவு 'கறந்து' கொள்வதில் ஆர்வமாக இருக்கும் இந்தத் தமிழ்க்குழுக்கள் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதில் பங்கெடுக்கிறார்களே என்பது மிகுந்த வேதனையளிக்கும் விடயம் என்கிறார்கள் சமூகப் பற்றுள்ள பொதுமக்கள்.

# பிரதேச செயலாளர் முறைப்பாடு!

மட்டக்களப்பு-வழைச்சேனை காகித ஆலையில் இயங்கும் பிராந்திய படைத் தலைமையகத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த பிரிகேடியர் சில்வா இடம் மாற்றலாகிச் சென்றுள்ளார்.

அவரின் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார் கேர்ணல் அல்விஸ். புதிதாக நியமனம் பெற்ற அல்விஸைச் சந்தித்து வாழைச்சேனைப் பகுதிப் பொதுமக்கள் அனுபவிக்கும் பாதுகாப்புக் கெடுபிடிகளையும் வேறு பல நெருக்கடிகளையும் எடுத்துக் கூறினார் வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் திரு.கே.கதிர்காமநாதன்.

பொதுமக்கள் அச்சுறுத்தப்படுவதுடன் பலவிடயங்களில் சீருடையினர் தலையிட்டு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு நெருக்கடி கொடுக்கிறார்கள். இவ்விடயங்களில் கரிசனை எடுக்குமாறு பிரதேச செயலாளர் கேர்ணல் அல்விஸிடம் வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் தடை செய்யப்பட்டிருக்கும் நாசிவன் தீவுப் படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க அனுமதியளித்து, அப்பகுதிப் பொதுமக்கள் எதிர்நோக்கும் போக்கு வரத்துப் பிரச்சினையைத் தீர்க்க உதவுமாறும் பிரதேச செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.

# ஆசிரியர்கள் பற்றாக்குறை

(புத்தளம் நிருபர்)

புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இவ்வாசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? என இப்பகுதி பெற்றோர்கள் கேட்கின்றார்கள்.


சித்தர் மாந்திரீகம் உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடன் தீர்வு காண்பதற்கு ஏழாவது தலைமுறை வாரிசு. மணி மாந்திரீக சித்தர் "சக்திசரவணா"வை தொடர்பு கொள்ளுங்கள்.


SHAKTHY SARAVANA
30/16, MLLIKA LANE, COLOMBO-06. T.P: 500067

வியாழன் விடுமுறை





மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



மனோதத்துவ வைத்தியம்
வவுனியா விலாசம் மாற்றப்பட்டுள்ளது

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

கொழும்பில் பெப்ரவரி 21 முதல் 28 வரை

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338165, 338166, 338164 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

வவுனியாவில் பெப்ரவரி 13,14,15 திகதிகளில்

முன்கூட்டியே பதிவு செய்யவும் HOTEL VASANTHAM,
40, கண்டி வீதி, வவுனியா. T.P.024-22615, 024-22607, 024-22366

கல்முனையில் மார்ச் 6,7,8ம் திகதிகளில்

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.



கலைநிலா எஸ்.எம்.உவைஸ் ஷெரீப்
சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை நிதிக்காக
தென்னிந்திய இசையமைப்பாளரும் பாடகருமாகிய
தேனிசைத் தென்றல் 'தேவா' கலந்து சிறப்பிக்கும்

தேனிசை இரவு
இன்னிசை நிகழ்ச்சி

14.02.99
ஞாயிறு மாலை



6.30 க்கு சுகததாஸ உள்ளரங்கில்

டிக்கட்களுக்கு முந்துங்கள்
விபரங்களுக்கு: T.P. 436331



SPOKEN ENGLISH

BY K. M. N. NALRAVI

யாருக்காக?

- ★ தொழில் புரிபவர்களுக்காக.
- ★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
- ★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
- ★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும்.
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத்தெரியாதவர்கள் கூட சரளமாகப் பேசப்பயிற்சி. • அடிப்படையிலிருந்து இலக்கணம். • இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள். • Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்குப் பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 3 அல்லது 6 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: • பழைய மாணவர்களுக்கு Diploma வகுப்புகள் ஆரம்பம்.
• அலுவலக நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை
• புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்.

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatte,
Colombo - 6. (Hotel Ceylon Innsக்கு அருகில்)

GRAYON



RAMY CDS RAMY CDS RAMY CDS RAMY CDS RAMY CDS

உலகப் பிரசித்தி பெற்ற
உயர்தர (ரமி) இசைத்தட்டுகள்

ஆங்கிலோ–இந்திய கூட்டுத் தயாரிப்பாளர்கள் EMI-RPG அமைப்புடன் RAMIY இணைந்து பழைய–புதிய பாடல்களை சர்வதேசத் தரத்தில் (CD's) இசைத்தட்டுக்களாகவெளியிட்டுள்ளனர்.
இவற்றை இலங்கையில் அறிமுகப்படுத்துவதில்

ஏ.கே.வி. எம்போரியம் பெருமைப்படுகிறது.

நாடெங்கும் விற்பனை முகவர்கள் தேவை.

நியாய விலையில்–சர்வதேசத் தரத்தில்–RAMIY CDS.

எமது விசேட வெளியீடு
மன்னார் மடு மாதா மீதான கிறிஸ்தவ கீதங்கள்

A.K.V. EMPORIUM
F 119, PEOPLES PARK,
COLOMBO-11.
Phone:435744, 472129

சுவிற்ஸர்லாந்தில் —
RAMIY RECORDS
GMBH
KOCHLI STR-028
8004-ZURICH.
Phone: 004181252525013



இலவச, சலுகை அடிப்படையில்
Computer கல்வி பயில

DCS
DATA CONNECTION SYSTEMS (PRIVATE) LIMITED

College of Computer Technology
(British ACP Recognized Training Centre)

7வது முறையாக வழங்கப்படும்

1000 புலமைப்பரிசில் திட்டம் 1999/2000

1. DIPLOMA IN ELECTRONIC DATA PROCESSING
(8 MONTHS)

2. DIPLOMA IN COMPUTER TECHNOLOGY (SOFTWARE)
(12 MONTHS)

மேலதிக விபரங்களிற்கு

Branches

| |
|---|
| DCS<br>No. 399 1/1 Galle Road, Colombo-4, TP :-589899 |
| DCS<br>No. 171, Trinco Road, Batticaloa TP :- 065-23990 |
| EDMS<br>No. 156, Green Road, Trincomalee TP- 026- 21805 |
| DCS<br>M.P.C.S Sinhala Divison, Station Rd Vavuniya |
| DCS<br>No. 124/2 Palaly Road, Thirunelvely, Jaffna |
| DCS<br>No 89, Main Street, Kinniya - 02. |

விண்ணப்ப முடிவுத் திகதி 21.02.99

Member of ACTOS

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தொடரப் போகும் தாக்குதல்கள்

## அதிகாலை நேரக் குண்டுகள்

50வது சுதந்திர தினம் தலதா மாளிகை குண்டு வெடிப்போடு சென்ற ஆண்டு இலங்கை அரசால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த ஆண்டு பாரிய குண்டுத் தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை. பாதுகாப்பு தரப்பின் கண்காணிப்பும், கடும் சோதனைகளுமே குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறாதிருக்க காரணம் என்று மார் தட்ட முடியாது.

எந்தப் பாதுகாப்பு மத்தியிலும் தாம் நினைத்தால் தலைநகரின் இதயப் பகுதியிலேயே குண்டு வெடிப்பை நடத்த முடியும் என்று புலிகள் கோடிட்டு காட்டிவிட்டனர்.

பெப்ரவரி 04ம் திகதி அதிகாலையில் கொழும்பு மருதானைப் பகுதியில் மின்மாற்றி ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

அதற்கு சில தினங்களுக்கு முன்னர், வடமேல் மாகாணசபை வாக்களிப்பு தினத்துக்கு முன்னர் கொழும்பு நகரில் மூன்று மின்மாற்றிகள் ஒரே நாளில், ஒரே நேரத்தில் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன.

அதனையடுத்து கொழும்பு புறக்கோட்டை, கொட்டாஞ்சேனைப் பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டைகள் நடத்தப்பட்டன. பெருமளவான கைதுகள் நடந்தன. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, மின்மாற்றிகள் கண்காணிக்கப்பட்டன.

வடமேல் மாகாண சபை தேர்தல் நேரத்தில் நடந்ததால், இது வேறு சக்திகளது கைவரிசையாக இருக்குமோ? என்ற சந்தேகமும் சிலருக்கு எழுந்தது.

புலிகள் தவிர்ந்த வேறுயாரால் செய்ய முடியும் என்று சந்தேகப்பட்டியலை விரித்தால் அரசு, எதிர்க்கட்சி இரண்டையும் பட்டியலில் சேர்க்கலாம்.

மாகாணசபை தேர்தல் வாக்களிப்பு நடந்த சூட்டோடு குண்டுகள் வெடித்திருந்தால், தேர்தல் முறைகேடுபற்றிய செய்திகளை திசை திருப்பும் நோக்கமாக இருக்குமோ என்று சந்தேகம் எழுவது நியாயம்.

தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் குண்டு வெடித்தால் ஆளும் தரப்புக் குத்தான் பாதகம். எதிர்க்கட்சிக்கு பிரசார சாதகம். ஆகவே சந்தேகப் பட்டியலில் இருந்து பொது ஜன முன்னணி தரப்பை நீக்கிவிடலாம்.

ஆளும் தரப்பின் வன்முறையை முகம் கொடுக்கும் தொண்டர் படை வலிமையைக் கூட ஐ.தே.க.இழந்து நிற்கிறது. அதனிடம் முன்பிருந்த குண்டர் பலம் இப்போதில்லை.

தவிர, இவ்வாறான வேலைகளைச் செய்து மாட்டிக் கொண்டால் கட்சியையே இழுத்து மூட வேண்டியதுதான். எனவே எதிர்கட்சி செய்திருக்குமோ என்ற சந்தேகத்திற்கும் இடமில்லை.

புலிகள்தான் மின்மாற்றிகளை தகர்த்தனர் என்று அரச பிரசார சாதனங்கள்கூட பெரிதாக கூறவில்லை. ஏனெனில் பெரிதாகக் கூறுவதால் அரசுக்கும், அதன் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குமே அவமானம்.

தலை நகரில் குண்டு வெடிப்பதால் முதலீட்டாளர்கள்கூட அரசில் நம்பிக்கை இழக்கின்றனர். தலைநகரிலும் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை என்பது பகிரங்கமாகிறது.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் எப்படியாவது வென்றாக வேண்டும் என்று ஆளும் தரப்பு துடித்ததுக்கு பல காரணங்கள். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை கொடுப்பதும் அதில் ஒரு காரணம்.

ஸ்திரமான அரசாங்கம் இருந்தால்தான் முதலீட்டாளர்கள் வரத்துணிவர். அதுபோல பாதுகாப்பு உத்தரவாதமும் அவசியம்.

எனவே, அரச சார்பு சக்திகள் தங்கள் தலையிலேயே தாங்கள் மண் அள்ளிப் போடமாட்டா. அடிப்படையே இல்லாத சந்தேகங்கள் எழுவது இது முதற் தடவையல்ல.

யால காட்டுப்பகுதியிலும் கதிர்காமம் பஸ் நிலையத்திலும், புலிகள் தாக்குதல் நடத்திய போது அது படையினரின் வேலை என்று சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டன. அரசுகூட புலிகள் தாக்கியதாகக் கூறுவதற்கு தயங்கியது.

அவ்வாறு கூறினால் உல்லாசப் பயணிகள் அங்கு செல்ல அஞ்சுவர், வருமானம் வீழ்ச்சியடையும் என்று அரசு தயங்கியது.

ஆனால் பின்னர் உண்மை வெளியானது. யால காட்டுப்பகுதியில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல் சம்பவங்களும் நடந்துள்ளன.

புலிகள் சில நடவடிக்கைகளுக்கு உரிமை கோராமல் இருப்பதுண்டு. ஆனால் தாம் செய்யாத ஒரு காரியத்தை தம்மீது சுமத்தி வேறு சக்திகள் தப்பிக் கொள்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கவும் மாட்டார்கள்.

கொழும்பில் மிகப் பாதுகாப்பான பகுதிகளுக்குள் தொடர் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றுள்ளன என்று புலிகளின் குரல் செய்தி கூறியிருந்தது.

இதுவரை புலிகளால் கிழக்கு மாகாணத்திலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மின்மாற்றிகளும், தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலைகளும் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம் பல மாதங்களாக இருளில் மூழ்கியது. மட்டக்களப்பு தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக அரசும், படையினரும் கூறினாலும், புலிகளின் மின் விநியோக சீர்குலைவு நடவடிக்கையை தடுத்து நிறுத்த முடியாமல் போனது.

பின்னர் புலிகளாக முன்வந்து அனுமதி கொடுத்த பின்னரே மட்டக்களப்பில் மின் ஒளி வந்தது.

தாம் நினைத்தால் மட்டக்களப்பு முழுவதையும் இருளில் வைத்திருக்கலாம் என்பதை திட்டவட்டமாக நிரூபித்த பின்னரே மறுபடி மின்சாரம் வழங்க அனுமதித்தனர்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகள், அரச கட்டுப்பாடற்ற பகுதிகள் என்று இரண்டாக பிரிப்பது. தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள மக்களுக்கு மின்சாரம் தொலைபேசி போன்ற வசதிகளை வழங்குவது.

'புலிகள் இல்லையானால் உங்களுக்கும் இவை கிடைக்கும்' என்று புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள மக்களுக்கு ஆசை காட்டுவது இதுவே அரசினதும், படைத்தரப்பினதும் தந்திரமாக இருந்தது.

ஆனால் அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கும் தாம் அனுமதித்தால்தான் மின்சாரம்கூட விநியோகிக்க முடியும் என்பதை அப்பகுதியில் உள்ள மக்களுக்கும், தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள மக்களுக்கும் புலிகள் புரியவைத்திருக்கின்றனர்.

மட்டக்களப்பில் புலிகளால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மின்தடை நடவடிக்கை, புலிகளை தனிமைப்படுத்தும் அரசின் தந்திரத்துக்கு புலிகள் கொடுத்த அடியேதான்.

எனினும் இத்தகைய வெற்றிகரமான மின்தடை நடவடிக்கையைக்கூட இன்றுவரை புலிகள் பகிரங்கமாக உரிமை கோரவில்லை.

மலையகப் பகுதியில் பதுளையில் முதல் மின்மாற்றி தகர்க்கப்பட்டபோது, அது புலிகளின் வேலையல்ல என்று பொலிசாரே கூறினார்கள். பின்னர் மலையகத்தில் பல பகுதிகளில் மின்மாற்றிகள் தகர்ந்தன. தேயிலை தொழிற்சாலையிலும் குண்டு வெடித்தது.

இவற்றுக்கும் புலிகள் உரிமை கோரவில்லை. 'குண்டு வெடிப்புக்களது எல்லைகள் விரிவாகியுள்ளன. குண்டுகள் எங்கும் வெடிக்கின்றன' என்று மட்டுமே சூசகமாக கருத்துத் தெரிவித்தனர் புலிகள்.

குண்டுவாகனத்தை கொண்டு செல்வதும் ஒன்றுதான், மின் மாற்றிகளில் பொருத்த குண்டுகளைக் காவிச் செல்வதும் ஒன்றுதான். இரண்டுமே கடினமான காரியம்.

அதுவும் அதிகாலை நேரத்தில் வெடிக்கக் கூடியதாக நேரக் குண்டு பொருத்துவதாக இருந்தால், நள்ளிரவின் பின்னரே பொருத்த வேண்டும். முன்னரே பொருத்தினால் ரோந்து செல்லும் பொலிசாரது கண்ணில் பட்டுவிடும்.

சென்ற ஆண்டில் தலதா மாளிகை குண்டு வெடிப்புக்கூட அதிகாலையில் சன நடமாட்டமில்லாத நேரமாகப் பார்த்தே நடத்தப்பட்டது.

அதிகாலை நேரத்தில் பல லொறிகளோ, வாகனங்களோ நெரிசலாக செல்லமாட்டா. எனவே அந்த நேரத்தில் ஒரு லொறி வீதியில் சென்றால் தடை அரணில் நிச்சயமாக மறிக்கப்படும். வாகனங்களோடு வாகனமாக நழுவ முடியாது.

அப்படியொரு சிரமம் இருப்பது தெரிந்தும் அதிகாலை நேரத்தை தெரிவு செய்தே புலிகள் குண்டு லொறியுடன் சென்று தாக்கினர்.

எனவே, பொது மக்களை இலக்காக கொண்ட குண்டுத்தாக்குதல்களை நிறுத்துவதற்கு புலிகள் முடிவு செய்திருக்காது விட்டால், சுதந்திரதினம் உட்பட பல முக்கிய தினங்களில் கொழும்பில் பாரிய அழிவுகள் நேர்ந்திருக்கும். பாதுகாப்பு ஏற்பாடுகளால் அவற்றை தடுத்திருக்க முடியாது.

முன்பைவிட நுட்பமாக நடமாடி குண்டுகளைக் காவிச் செல்லும் திறனுடன் கொழும்பில் புலிகள் இருக்கின்றனர்.

பாரிய தேடுதல் வேட்டைகள் மத்தியிலும் வெடி பொருட்களை மறைத்து வைத்து நேரக் குண்டு தயார் செய்து பொருத்தியுள்ளனர்.

குண்டு பொருத்திய வாகனத்தை ஓரிடத்தில் கொண்டு சென்று நிறுத்திவிட்டு நைசாக நழுவுவது சுலபம். அதேபோல குண்டுப் பார்சலை ஓரிடத்தில் கூட்டத்தோடு கூட்டமாக வைத்துவிட்டு நகர்வதும் சுலபம். ஆனால் நகரின் மையப்பகுதியில் மின்மாற்றிக்கு அருகில் அமர்ந்திருந்து குழி தோண்டி குண்டை பொருத்துவது சிரமமான காரியம்.

யாராவது பார்த்துவிடலாம். திடீரென்று ரோந்துப் பொலிசாரோ, படையினரோ அப்பக்கமாக வரவும் கூடும்.

எனவே மின்மாற்றிகளுக்கு குண்டு பொருத்துவது என்பது சுலபமான காரியமல்ல.

1987இல் மருதானைப் பகுதியில் புலிகளது கார்க் குண்டு வெடித்தது. காரை விட்டுவிட்டு புலிகள் சென்றுவிட்டனர். அதற்கு முன்னர் புறக்கோட்டையிலும் கார்க் குண்டு வெடிப்பு ஒன்றை புலிகள் நடத்தினார்கள்.

நூற்றுக்கணக்கான மனித உயிர்களை அக் குண்டுவெடிப்புக்கள் காவுகொண்டன.

ஆனால் தற்போது புலிகள் பொதுமக்களை இலக்காக வைத்து தாக்குவதை நிறுத்தி விட்டனர்.

ஒரு முடிவு எடுத்தால் அதற்காக சிரமங்களையும், சவால்களையும் சந்திப்பதற்கு புலிகள் தயங்குவதில்லை.

கொழும்பில் பெரும் பொருளாதார கேந்திர நிலைகளை புலிகளின் குண்டு வாகனங்கள் நெருங்குவதை பாதுகாப்பு ஏற்பாடுகள் தடுத்துள்ளன. வீதிகளை மூடியும், தடை அரண்களை நிறுவியும் பாதுகாப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால், மக்கள் நடமாட்டமுள்ள பகுதிகளில், கூட்டத்தோடு கூட்டமாக சென்று குண்டுப் பொதிகளை வைப்பதோ, குண்டு வாகனங்களை நிறுத்திவிட்டுப் போவதையோ பாதுகாப்பு ஏற்பாடுகளால் தடுக்க முடியாது.

நவீன தொழில் நுட்பரீதியான பாதுகாப்பு ஏற்பாடுகள் கொண்டுள்ள அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்குள்ளேயே குண்டுகள் வெடிக்கின்றன.

மருதானையில் மின்மாற்றித் தகர்ப்புடன் மேலும் சில பகுதிகளிலும் மின்மாற்றிகளை தகர்க்க திட்டமிட்டது. எனினும் குண்டு வெடிப்பதற்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன.

சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு அடையாள எதிர்ப்பைத் தெரிவிப்பது போன்றதே மின்மாற்றிகள் மீதான தாக்குதல்கள்.

இதுவரை புலிகள் மேற்கொண்ட மின்மாற்றி, தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலைய தாக்குதல்களால் பல கோடி ரூபாய்கள் நஷ்டமேற்பட்டுள்ளன.

கொழும்பு நகரில் மட்டும் 1400 மின்மாற்றிகள் இருப்பதாக கூறப்படுகிறது.

அத்தனை மின்மாற்றிகளுக்கும் பொலிசாரோ, இராணுவத்தினரோ பாதுகாப்பு கொடுப்பது முடியாத காரியம்.

விழிப்புக் குழுக்களை நிறுவி பாதுகாக்கலாம் என்று பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார்.

ஆனால், விழிப்புக் குழுக்களால் மின்மாற்றிகளை காக்க முடியாது. தலைநகரில் மின்மாற்றித் தகர்ப்புக்கள் தொடரத்தான் போகின்றன.

அதற்குரிய வெடிபொருட்களுடன் புலிகள் தலைநகரில் காத்திருக்கின்றனர்.

நேரக்குண்டுகளை தயாரித்து தருவதில் கைதேர்ந்த புலிகளது வெடிகுண்டு நிபுணர்கள் சிலரும் கொழும்பிலேயே தங்கி உள்ளனர். அதனால்தான் வெடிவிபத்து எதுவும் நேராமல் நேரக்குண்டுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மக்கள் என்னும் கடலில் வாழும் மீன்கள்தான் கெரில்லாக்கள் என்று மா ஓ கூறியிருக்கிறார்.

புலிகளைப் பொறுத்தவரை தற்போது கொழும்பும் கடல்தான். பாதுகாப்பு தரப்பினர் வீசும் வலைகளில் மீன்கள் மாட்டுவது அபூர்வமாகவே இருக்கிறது.

மட்டக்களப்பிலும் கடந்த ஒரு மாத காலப் பகுதியில் நகருக்குள் ஐந்து தொலைத் தொடர்பு பரிவர்த்தனைப் பெட்டிகள் தகர்த்தெறியப்பட்டுள்ளன. மேலும் சில குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுமார் பத்து இலட்ச ரூபாய்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மின் விநியோகத்தை நகருக்குள் தடுக்க மாட்டோம் என்று புலிகள் உத்தரவாதம் கொடுத்த பின்னர், தொலைத்தொடர்பு மீது புலிகளது கவனம் திரும்பியுள்ளது.

ஆனால் அரச வானொலி செய்தியில், ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்துடன் ஒப்பந்த வேலை செய்யும் நிறுவனம் ஒன்றின்மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

SIERRA என்னும் நிறுவனமே ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்துடன் ஒப்பந்த வேலை செய்கிறது.

பரிவர்த்தனைப் பெட்டிகளை தகர்த்து விட்டு, மீண்டும் அவற்றை அமைத்துக் கொடுத்து பணம் பண்ணுகிறார்கள் என்று சந்தேகமாம்.

நல்ல சந்தேகம்தான். ஆனால் இச் சந்தேகம் உண்மையானால் குறிப்பிட்ட நிறுவனத்தையே கூண்டோடு கொண்டுபோய் படையினர் விசாரித்து உண்மைகளை கக்க வைத்திருப்பார்கள்.

மட்டக்களப்பு நகர் தமது பொறுப்பில் பூரண கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று கூறிக் கொள்ளும் சில சீருடை அதிகாரிகள் மறைமுகமாக கிளப்பிய சந்தேகம்தான் அது.

குறிப்பிட்ட நிறுவனம் இலாபம் சம்பாதிப்பதற்காக புலிகள் செய்வது போல குண்டுகளை வைத்தால், படையினர் விட்டு வைத்தால்கூட, புலிகள் விட மாட்டார்கள்.

அள்ளிக் கொண்டு போய் இருப்பார்கள்.

குறிப்பிட்ட நிறுவனத்திற்குக் கூட அத்தகைய துணிச்சல் நிச்சயம் ஏற்பட்டிருக்காது.

ஐம்பது பரிவர்த்தனைப் பெட்டிகளை திருத்தி அமைத்தாலும் ஐந்து இலட்சம் ரூபாய்கூட இலாபமாகத் தேறாது. புலிகளுடன் விளையாடினால் தலைக்கே ஆபத்து. நகரில் அதன் ஊழியர்கள் நடமாடவே முடியாது.


06.02.99 அன்று தனது பகல் செய்தியறிக்கையில் (12.45) குறிப்பிட்ட நிறுவனம் மீது அரச வானொலி சந்தேகம் தெரிவித்தது. பின்னர் இரவு 9 மணிச் செய்தியில் அதே வானொலி புலிகளை குற்றம் சாட்டியது.

அரச வானொலி செய்தியறிக்கைகளது பொறுப்பற்ற அண்டப் புழுகுகள், அபாண்டங்களுக்கு இதுவும் ஒரு உதாரணம்.

'அரச நிருவாகத்தை சீர்குலைத்தல்' என்ற புலிகளது இலக்கில் வடக்கு-கிழக்கில் மட்டுமன்றி, அதன் வெளியே நடைபெறும் மின்மாற்றித் தகர்ப்புகள், தொலைபேசி பரிவர்த்தனை நிலைய தகர்ப்புக்களும் அடக்கம். ஆகவே இவை தொடரத்தான் போகின்றன.

நாரதர்

### கள வாழ்க்கை





வன்னிப் போர் முனையில் புலிகளுக்கும் படையினருக்கும் போரே வாழ்க்கை. வாழ்க்கையே போர். உணவு உண்ணவோ, மாற்று உடை அணியவோகூட நேரமிருக்காது. காவல் பணியில் நேரம் கரையும். கிடைக்கும் நேரத்தில் முகச் சவரம் செய்கிறார் ஒரு புலி. இன்னொரு புலி கடிதம் எழுதுகிறார்.

## அதிரடி அய்யாத்துரை



**யாழ்ப்பாணத்தில் காணாமல்** போனோருக்கான உண்ணாவிரதம் நடத்திய தமிழ்க் கட்சிகளில் ஒன்றுதான், இப்போது காணாமல் போகச் செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. சீருடையினர் கண்டும் காணாமல் இருப்பதோடு, இனிமேல் காணாமல் போனோர் விவகாரத்துக்கு இவை பக்கம் கை காட்டிவிடலாம் என்றும் சந்தோசத்தில் இருக்கினமாம்.

**இனப்பிரச்சனைத் தீர்வெல்லாம்** கிடக்கட்டும். அடுத்த உலகக் கிண்ணம் கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற சிந்தனைதான் தென்னிலங்கையில் சீறிக்கொண்டு எழுந்திருக்குது. ஜெயசூர்யா கையில் அடிபட்டதைப் பார்த்து பலர் கலங்கிப் போய்க் கண்ணீர்விட்டவை. நல்ல விளையாட்டு வீரர் ஒருத்தருக்காக வருத்தப்படுவதில் தப்பில்லை. ஆனால் தீராத பிரச்சனையால் களத்தில் விழுந்து கொண்டிருக்கிற உயிர்களையும் எண்ணிப் பார்த்து- ஆளுவோரைப் பார்த்து- குரல் கொடுத்தால் மேலும் மெச்சலாமல்லோ. ஒரு பொதுமகன் அக்கம் பக்கம் பார்த்துவிட்டுச் சொன்னாராம்: "அன்றாடப் பிரச்சனையே இப்ப அவர்களால்தானே!"

**திருவானமலை** நகரின் மூர்த்திக்கு ஆளவந்தாருடன் சந்தை விடயத்தில் மோதினால் நியாயம். சுருட்டலுக்கு விளக்கம் கேட்கும் விவகாரத்தில் ஆளவந்தாருக்கு அவர் நன்றிதான் கூறவேண்டும். நேரடியாக நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருந்தும் அப்படிச் செய்யாமல் விளக்கம் கேட்டுள்ளார் ஆளவந்தார். சில பத்திரிகையாளர்களை கைக்குள் போட்டு தன் டமார செய்திகளை அள்ளிவிட்டுக்கொண்டிருக்கிறார் நகரத்தின் மூர்த்தி.

**"ரெண்டு எழுத்தாருடன்** சேர்ந்தாவது அதிகாரத் தரப்பாரை எதிர்க்க வேண்டும்" என்று பச்சை அணி இளைஞர்கள் கடுப்பில் இருக்கிறார்களாம். இதனை ஒரு செந்தமிழ் பேசுபவர் கூறியிருந்தால் என்னாகியிருக்கும்? பச்சை அணி பிரமுகர் கூறியதால் சீருடைத் தரப்பு பாய்ந்து செல்லவில்லை.

**குமாரர் கொஞ்சம்** சலிப்பாக இருப்பதாகத் தெரிகிறது. முன்பிருந்த சுறுசுறுப்பைக் காணவில்லை. அவர் சேவையும் இக் கட்டத்திற்கு தேவையல்லோ?

**கழக மாணவர்** அணியைச் சேர்ந்தவரை 'லோ' இயக்கத்தினர் மண்டையில் போட்டிருக்கினம். ரெண்டு எழுத்தார் பாணியில் கழகமும் அவரது உடலைப் பொறுப்பேற்க முன்னர் 'லோ' இயக்க மூவரை போட்டிருக்கினம். பழிக்குப் பழி. இரத்தத்திற்கு இரத்தம்!

**'வரி, வட்டி,** திறை, கிஸ்தி, வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, ஆமி காவலுக்கு நிற்கிறது உங்களுக்கேன் கொடுக்க வேண்டும் வரி?' என்று கேட்க வவுனியா வியாபாரிகளுக்கு ஆசைதான். கேட்டால் துவக்குப் பதில் சொல்லும். ஆகவே கப்சிப்!

**அன்னபூரணி கப்பலைப்** பற்றி எழுதியவர் ராஜகோபால். 'முரசு' வாசகர்களது அபிமானம் பெற்றவர். இலண்டனில் இருந்து 'ஈழகேசரி' வெளியிட்டார். இடையே தடங்கல். இப்போது மறுபடி ஆரம்பித்திருக்கிறார். தடையின்றி வெளிவர வாழ்த்துவோம். ஆயிரம் பூக்கள் மலரட்டும்!

**தனியார் விமானப்** போக்குவரத்துக்கு அனுமதித்தால், 'ரெண்டு எழுத்தார் கடத்திப் போய்விடுவர்' என்று நினைக்கினமாம். அதனால்தான் அனுமதி மறுப்பாம். பொது சன போக்குவரத்தை தாமே நடத்தினால் தமது பொருட்கள், ஆட்களையும் கொண்டு செல்லலாம் என்று நினைக்கினமோ?

**ரெண்டு எழுத்தார்** இல்லையானால் டமில் கட்சிகள் தங்களுக்குள்ளேயே அடிபட்டு, சீருடையினராலும் பிடிபட்டு காணாமல் போயிருப்பினம். ரெண்டு எழுத்தார் இருப்பதால் இவை தேவை என்று அதிகாரத்தரப்பு சகித்துக் கொண்டிருக்குது. ஆயுதங்களை பறிக்காமல் விட்டு வைச்சிருக்குது. இல்லையானால் இவை சண்டை போடும் சாக்கை வைத்தே ஆயுதங்களை ஒன்றுவிடாமல் வாங்கியிருப்பினம். மொத்தத்தில் இன்று டமில் கட்சிகளுக்கு உயிர் இருக்க காரணமே ரெண்டு எழுத்தார்தான்!

**தேர்தல் வன்முறைக்கு** பச்சைக் கட்சிதான் காரணமாம். முன்னணியின் ஜெயமான செயலாளர் கூறியிருக்கிறார். வருந்தவும் இல்லை. திருந்தவும் யோசனை இல்லை என்பது தெரிகிறதல்லோ?

**தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர்** குழு இலங்கை வந்தது. அது ஒன்றும் அங்குள்ள பிரபலமான பத்திரிகையாளர்களைக் கொண்ட குழுவல்ல. இதிலே என்ன வேடிக்கை தெரியுமோ? இதுவரை அரசாங்கத் தலைவர்களைச் சந்தித்துவிட்டுத்தான் டமில் கட்சித் தலைவர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டுவந்தனர். இப்போது ஒருபடி முன்னேறி, பத்திரிகையாளர்களைச் சந்தித்துவிட்டே பத்திரிகையாளர்களுக்கு அறிக்கை கொடுத்திருக்கினம். விளம்பர ஆசைக்கு எல்லையே...யே...யே கிடையாதய்யா!

**இவ்வாரப் பொன்மொழி:**

**"மறக்க வேண்டியவைகளை மறக்காமல் நினைத்திருப்பதும் மறக்க வேண்டாதவைகளை மறந்துவிடுவதும்தான் இந்த உலகத்தின் இன்றைய துன்பங்களுக்கு காரணம்!"**

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

புதுடில்லியில் வைத்து ராஜீவ் காந்தியை தீர்த்துக் கட்டினால் புலிகள்மீது சந்தேகம் ஏற்பட்டிருக்காது.

சீக்கிய தீவிரவாதிகளின் கொலைப் பட்டியலில் இந்திரா காந்தியின் குடும்பத்தில் உள்ள அனைவரது பெயரும் இருந்தது.


இந்திரா காந்தியை சீக்கிய இராணுவ சிப்பாய் சுட்டுக்கொன்றான். அதற்கடுத்து ராஜீவ் காந்தியையும் சீக்கியர்கள் குறிவைத்திருந்தனர்.

அதன் காரணமாகவே ராஜீவுக்கு பலத்த பாதுகாப்பும், துப்பாக்கிக் குண்டு துளைக்காத ஆடையும் வழங்கப்பட்டிருந்தது. கறுப்புப் பூனைகள் என்று அழைக்கப்படும் சிறப்பு பாதுகாப்பு பிரிவினரே ராஜீவுக்கு பாதுகாப்பு வழங்கினார்கள்.

புதுடில்லி சென்ற சிவராசன் அங்கு ராஜீவ்காந்தியை குறிவைத்துத் தாக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் அரிதாக இருந்ததால், அத் திட்டத்தை கைவிடும் முடிவுக்கு வந்தார்.

சென்னை திரும்பிய சிவராசன் 1991 மார்ச் மாதம் 21ம் திகதி அங்கிருந்தபடியே இரகசிய வானொலி மூலம் பொட்டம்மானுடன் தொடர்பு கொண்டார்.

'புதுடில்லியில் வைத்து திட்டத்தை செயற்படுத்த கால அவகாசமும், பெரு முயற்சியும் தேவை. சென்னைக்கும் வருகிறார்' என்று சிவராசன் பொட்டம்மானிடம் கூறியிருக்கிறார்.



பாதுகாப்புக்குள்

## சென்னையில் ராஜீவ்

மார்ச் மாதம் தேர்தல் பிரசாரத்திற்காக ராஜீவ் காந்தி சென்னை வருகிறார் என்று தமிழ்நாட்டு பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன.

அதனைப் பார்த்துவிட்டே சென்னைக்கு ராஜீவ் வரும் தகவலை பொட்டம்மானிடம் சிவராசன் கூறியிருக்கிறார்.

புதுடில்லியில் தாக்குதல் நடத்துவதானால், பத்திரிகையாளர்கள் போன்றே அங்கு சென்று தங்கியிருக்க வேண்டும்.

அதனால் பிரபலமான சில ஆங்கிலப் பத்திரிகை நிருபர்கள் போன்று போலியான அடையாள அட்டைகள் சிவராசனால் தயார் செய்யப்பட்டன.

ராஜீவ்காந்தி பிரதமராகிவிட்டால் அவரை நெருங்குவதே கஷ்டமாக இருக்கும். அதனால் அதற்கு முன்னர் எப்படியாவது தீர்த்துக் கட்ட வேண்டும்.

ஆகவே புது டில்லியில் வைத்து குறி பார்த்துக் கொண்டிருந்தால் காலம் கடந்துவிடும்.

புதுடில்லி பரிச்சயமான இடமல்ல. அதனால் திட்டத்தை நிறைவேற்ற கடும் முயற்சி தேவைப்படும். இடையே மாட்டிக் கொள்ளவும் சந்தர்ப்பம் இருக்கிறது.

மேற்கண்ட எல்லாவற்றையும் நன்கு யோசித்தே, புதுடில்லியைவிட சென்னையே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார் சிவராசன்.

# யாழில் இருந்து புறப்பட்ட தாக்குதல் அணி



யாழில் இந்தியப் படை

திட்டங்கள் தீட்டி அதற்கான ஏற்பாடுகள் செய்வதில் சிவராசன் அனுபவம் உள்ளவர்.

அதனால் சிவராசனின் யோசனைப் படியே சென்னையில் வைத்து ராஜீவை தீர்த்துக்கட்ட முடிவு செய்யப்பட்டது.

## இரகசிய ஏற்பாடு

ராஜீவ்காந்தியை தீர்த்துக் கட்டப் போகும் திட்டம் பற்றி தமிழகத்தில் இருந்த மிக முக்கியமான ஆதரவாளர்களுக்கு மட்டுமே கூறப்பட்டது.

இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியப்




படை செய்த கொடுமைக்கு மூல காரணமாக இருந்தவர் ராஜீவ் காந்தி. எனவே அவரை தீர்த்துக் கட்ட வேண்டும் என்பது அவர்களது கருத்தாக இருந்தது.

தனித் தமிழ் இயக்கத்தைச் சேர்ந்தவர் பாவலேறு பெருஞ் சித்திரனார். இந்தியப்படை அட்டூழியத்தையும், ராஜீவையும் கண்டித்து, சாபமிடுவதுபோல கவிதை எழுதினார்.

ராஜீவ் காந்தி கொல்லப்பட வேண்டியவரே என்றும், தமிழர்களது எதிரி என்றும் அந்தக் கவிதையில் மிகக் கடும் வார்த்தைப் பிரயோகங்கள் அடங்கியிருந்தன.

பெருஞ் சித்திரனார் முதலில் புளொட் அமைப்பின் ஆதரவாளராக இருந்தவர். பின்னர் புலிகளை ஆதரித்தார்.

உலகத் தமிழர்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தவர் அமரர் பெருஞ் சித்திரனார்.

அவரது மகன் பேரறிவாளனும் தமிழ் நாடு தனி நாடாக வேண்டும் என்னும் எண்ணத்தோடு செயற்பட்டவர். புலிகளுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தவர்.

இன்னொருவர் இரும்பொறை. இவரும் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வந்தவர். தமிழ் நாட்டில் இருந்து இந்தி ஆட்சியாளரை விரட்ட வேண்டும் என்ற கொள்கை யுடையவர்.



நளினி

இவரும் புலிகளுடன் நெருக்கமாகி நம்பிக்கைக் குரிய ஒருவராக இருந்தார். இவ்வாறான ஒரு சிலர் தவிர, தமிழ் நாட்டிலிருந்த ஏனைய தமது ஆதரவாளர்களுக்கு இரகசியத்தை வெளியிடவில்லை.

தமிழ் நாட்டிலிருந்த புலிகளுக்கும்கூட ராஜீவ் காந்தியைத் தீர்த்துக் கட்ட ஏற்பாடுகள் நடப்பது தெரிந்திருக்கவில்லை.

குறிப்பிட்ட நடவடிக்கையை செயற்படுத்த யார் யாருக்கு தகவல் தெரிய வேண்டுமோ அவர்களுக்கு மட்டுமே தகவல்கள் தெரியப்படுத்தப்படும்.

இரகசிய வேலைத் திட்டங்களை அதற்குரிய கண்டிப்பான விதிகளுடன் புலிகள் செயற்படுத்துவதால், அவை முன்கூட்டியே கசிவதும் மிக அரிது.

தமிழ் நாட்டில் இருந்த காங்கிரஸ் கட்சியினர் சிலருடன் தமது தமிழக ஆதரவாளர்கள் மூலம் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார் சிவராசன்.

முத்துராஜாவுக்கு சங்கரி என்றொரு அக்கா இருந்தார். அவரது சென்னை வீட்டில் தான் புலிகள் இயக்க பிரமுகரான பேபி சுப்பிரமணியம் தனது உடமைகளை வைத்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியிருந்தார்.

ராஜீவ் கொலைக்கு முன்பாகவே சென்னையில் இருந்து புறப்பட்டுவிட்டார் பேபி சுப்பிரமணியம். அவருக்கும் ராஜீவ் கொலைத் திட்டம் தெரிந்திருக்கவில்லை. பிரபாகரனின் அழைப்பின் பேரிலேயே சென்னையை விட்டு புறப்பட்டார் பேபி.

பேபி சுப்பிரமணியம் புறப்படும்போது லதா கண்ணன் என்பவர் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவான பெண்மணி.

அவருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். ராஜீவ் காந்தி வரும்போது தாம் மாலையணிவிக்க விரும்புவதாகவும், கடந்த காலத்தில் நடந்ததை மறந்து ராஜீவுடன் நட்பை ஏற்படுத்த விரும்புவதாகவும் லதா கண்ணனுக்கு சிவராசன் கூறியிருக்கிறார்.

லதா கண்ணனுக்கு சந்தேகம் வரவில்லை. அவரும் மகிழ்ச்சியுடன் உதவ முன்வந்தார். லதா கண்ணனுக்கு கோகிலா என்றொரு மகளும் இருந்தார்.

## பத்திரிகையாளர்களாக

கூட்டத்திற்கு பத்திரிகையாளர்கள் போன்றே செல்வது என்பதுதான் திட்டம். தம்மோடு புகைப்படப்பிடிப்பாளர் ஒருவரையும் அழைத்துச் செல்ல சிவராசன் முடிவு செய்தார்.

சென்னையில் சுபா ஸ்ரூடியோ என்னும் நிறுவனத்தை நடத்தியவர் சுபா சுந்தரம்.

சுபா சுந்தரத்துக்கும் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருந்தது.

மதுரையில் உணவு விடுதி ஒன்றில் பணிபுரிந்தவர் முத்துராஜா. இவர் திராவிடர் கழக ஆதரவாளர். அந்த உணவு விடுதிக்கு சென்று புலிகள் சாப்பிடுவது வழக்கம்.

அப்போது ஏற்பட்ட பழக்கத்தால் முத்து ராஜாவுக்கு நல்ல வேலை ஒன்றை பெற்றுக் கொடுக்க விரும்பிய புலிகள், சென்னையில் உள்ள சுபா சுந்தரத்திடம் அவரை வேலைக்கு சேர்த்தனர்.

சுபா சுந்தரத்தின் மனைவி சென்னையிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது தாதியான பத்மா என்பவர் அவரை நன்கு கவனித்தார். அதனால் பழக்கம் ஏற்பட்டது.

இதன் காரணமாக பத்மாவின் மகனான பாக்கிய நாதனுக்கும் சுபா சுந்தரத்தின் ஸ்ரூடியோவில் வேலை கிடைத்தது.

அந்த பாக்கியநாதன் ஹரி பாபு என்பவரையும் தன்னுடன் வேலைக்குச் சேர்த்தார்.

பாக்கியநாதன், ஹரிபாபு ஆகியோருக்கு முத்துராஜா ஊடாகவும், சுபா சுந்தரம் மூலமாகவும் புலிகளுடன் அறிமுகம் ஏற்பட்டது.

சென்னையில் இருந்த தமது அச்சகத்தை பாக்கிய நாதனிடம் ஒப்படைத்திருந்தார்.

அதனால் பாக்கிய நாதன் சுபா ஸ்ரூடியோவுக்கு வேலைக்கு செல்வதை நிறுத்திக் கொண்டார்.


பாக்கியநாதன் வீட்டுக்கு சிவராசனும் சென்று வந்தபோது, அவரது தங்கையான நளினி அறிமுகமானார்.

## ஒத்திகை

சென்னைக்கு மார்ச் மாதம் ராஜீவ் காந்தி வரவில்லை. அவரது பயணத் திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது.

மார்ச் மாதம் ராஜீவ் காந்தி வந்திருந்தால் கூட அவரை தீர்த்துக்கட்ட புலிகள் தயாராக இருக்கவில்லை.

ராஜீவ் கலந்து கொள்ளும் கூட்டத்தில் அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை அவதானித்து ஒரு ஒத்திகை நடத்துவது பின்னர் மறு முறை வரும்போது திட்டத்தை நிறைவேற்றுவது என்பதே சிவராசனின் எண்ணமாக இருந்தது.





பேரறிவாளன்

காங்கிரசுக்கு தமிழ்நாடு முக்கியமான மாநிலம். ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்ந்து அங்கு போட்டியிட்டது.

தேர்தல் பிரசாரத்திற்காக குறைந்தது இரண்டு தடவையாவது ராஜீவ் வருவார் என்று புலிகள் எதிர்பார்த்தனர்.

அதனால் மார்ச்சில் ஒத்திகை, அடுத்த கூட்டத்தில் குறி என்று தீர்மானிக்கப்பட்டது.

ராஜீவின் பயணத் திட்டத்தில் மாற்றம் ஏற்பட்டதால், ஒத்திகைக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது.

இன்னொரு முன்னாள் பிரதமர் வி.பி.சிங் தமிழகத்திற்கு வரப்போவதாக செய்தி வெளியானது. தி.மு.க. அணிக்காக பிரசாரம் செய்வதற்காகவே வி.பி.சிங் சென்னை வரவிருந்தார்.

வி.பி. சிங்கின் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்தால், ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகளை சமாளிப்பது பற்றிய அறிவு பெறலாம். முன்னாள் பிரதமர்களுக்கு ஒரே விதமான பாதுகாப்புத்தானே தரப்படும். அதனால் வி.பி. சிங் கலந்து கொள்ளும் கூட்டத்தில் ஒத்திகை பார்க்க சிவராசன் தீர்மானித்தார்.

அதற்கு முன்பாக தமது திட்டம் பற்றி பொட்டம்மானுடன் நேரடியாக விவாதித்து ஒப்புதல் பெறவேண்டியிருந்தது.

அதற்காக யாழ்ப்பாணத்திற்கு படகு மூலம் சென்றார் சிவராசன். இறுதி ஒப்புதல் பெற்ற பின்னர் தாக்குதல் அணியுடன் புறப்பட்டார் சிவராசன்.

மே முதலாம் திகதியன்று சிவராசன், தாணு, சுபா உட்பட ஆறுபேருடன் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டது தாக்குதல் அணி.

தாக்குதல் அணியையும் கரும்புலித் தாக்குதலுக்கு தெரிவான தாணு, சுபா ஆகியோரையும் கையசைத்து வழியனுப்பி வைத்தார் பொட்டம்மான்.

தமிழகம் சென்றபோது கரையில் அவர்களை சாந்தன் வரவேற்றார். சாந்தன் தான் அப்போது புலிகளது தமிழகப் பொறுப்பாளராக இருந்தார்.

சென்னையில் விஜயன் என்பவர் வாடகைக்கு பிடித்துக்கொடுத்த வீட்டில் தாக்குதல் அணி தங்கியிருந்தது.

மே மாதம் ஏழாம் திகதி சென்னை தேனாம்பேட்டையில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டார்.

அக் கூட்டத்திற்கு தாணுவையும், சுபாவை யும் அழைத்துச் செல்ல வேண்டும்.

அங்குதான் ஒத்திகை பார்க்க வேண்டும்.

அனைவருமே இலங்கைத் தமிழர்களாக இருந்தால் சந்தேகம் வரும். அதனால் நளினி யையும் தம்மோடு அழைத்துச் சென்றார் சிவராசன்.

தேனாம் பேட்டைக் கூட்டத்தில் கொலை ஒன்றுக்கான ஒத்திகை நடந்து கொண்டிருக்க, அதனை பற்றியே அறியாத வி.பி. சிங் உற்சாகமாக உரையாற்றிவிட்டுப் போனார்.

எனினும் நளினிக்குக்கூட அங்கு சென்றது கொலைக்கான ஒத்திகைக்கு என்பது தெரிந்திருக்கவில்லை.

தமிழகம் வரும் தலைவர்களுக்கு வரவேற்பு கொடுக்கிறோம். ஆட்சிக்கு வரும் கட்சியுடன் நட்பு ஏற்படுத்த இப்படி செய்ய வேண்டியிருக்கிறது என்றே நளினிக்கு கூறப்பட்டது.

மே மாத மத்தியில் ராஜீவ் காந்தி சென்னைக்கு வருவார் என்று லதா கண்ணன் மூலம் சிவராசன் அறிந்து கொண்டார்.

கூட்டம் எங்கெங்கு நடக்கிறது என்பதை அறிவதற்கு காங்கிரஸ் தொடர்புள்ள தமது ஆதர வாளர்களை சிவராசன் பயன் படுத்தினார்.

## தளர்வு

ராஜீவ் காந்தியின் பாதுகாப்பை அதிகப் படுத்துமாறும், அவருக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாகவும் இந்திய புலனாய்வு பிரிவு (ஐ.பி) இந்திய அரசுக்கு அறிவித்தது.

ராஜீவ் காந்தியின் பாதுகாப்பை வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது குறைத்திருந்தார்.

முன்னாள் பிரதமருக்கு அதிக பாதுகாப்பு தேவையில்லை. தேவையற்ற செலவுகளை குறைக்கவே அந்த நடவடிக்கை என்று வி.பி.சிங் அரசு கூறியிருந்தது.

குறைக்கப்பட்ட பாதுகாப்பை மீண்டும் வழங்குமாறு ஐ.பி.சிபாரிசு செய்தது.

அதனை ராஜீவ் உட்பட யாருமே பெரிதுபடுத்தவில்லை.

அதுதவிர பாதுகாப்பு வியூகங்களை மீறி மக்களை நெருங்கி சந்திக்கத் தொடங்கினார் ராஜீவ்.

"தமிழகத்திற்கு ராஜீவ் எப்போது வருகிறார்?" கூட்ட ஒழுங்குகளை செய்வதற்காக தலைமைப் பீடத்திடம் தமிழக காங்கிரஸ் கேட்டது.

காங்கிரசுக்குள் பலத்த கோஷ்டி மோதல்.

ராஜீவை தமிழகம் அழைத்து வருவது யார்? என்றும் அந்தக் கோஷ்டிகள் இடையே போட்டி.

இறுதியாக தமிழக காங்கிரசுக்கு ஃபக்ஸ் செய்தி வந்தது.

'மே 21ம் திகதி ராஜீவ் காந்தி சென்னை வருகிறார்!'

இத் தகவல் சிவராசனின் காதுக்கும் எட்டியது.

தாக்குதல் அணி தயாரானது. தற்கொலை அங்கியும் தயாரானது.

(தொடர்ந்து வரும்)

அலசுவது– இராஜதந்திரி

# சோபையிழந்த சுதந்திர தினம்

## கைவிட முடியாத நிலைப்பாடுகள்

பெப்ரவரி 04ம் திகதி சுதந்திர தின வைபவங்கள் ஆரவாரம் இன்றி அவசரமாக முடித்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து இலங்கையின் பெரும்பான்மை இன ஆளும் வர்க்கத்திடம் ஆட்சி அதிகாரம் கைமாற்றிக் கொடுக்கப்பட்ட தினமே பெப்ரவரி 04ம் திகதியாகும்.

எனினும் ஆட்சி அதிகாரம் கிடைத்து 51 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் சிங்கள மக்களுக்குக்கூட பொருளாதார நிறைவோ, குறிப்பிடத்தக்க முன்னேற்றமோ இன்றுவரை ஏற்பட்டுவிடவில்லை.

அதன் காரணமாகவே கடந்த 51 வருடத்தில் இரண்டு தடவைகள் சிங்கள இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய பாரிய கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

அக் கிளர்ச்சிகள் தோல்வியில் முடிவடைந்திருந்தாலும், அவை பல உண்மைகளை உணர்த்தத் தவறவில்லை.

சிங்கள பௌத்த உணர்வுகளை தூண்டி, அவற்றில் குளிர்காய்வதிலேயே சிங்கள இன பிரதான கட்சிகள் குறியாக இருந்தன.

சாதாரண சிங்கள மக்களது அடிப்படையான தேவைகளை நிறைவேற்ற அக் கட்சிகளால் முடியவில்லை.

வேலை இல்லாத் திண்டாட்டம் முதற்கொண்டு, பல்வேறு பொருளாதார பிரச்சனைகளுக்கு சிங்கள மக்களும் முகம் கொடுத்து வந்தனர்.

தம்மை மறந்துவிட்ட சமூக அமைப்புமீதும், அதனை பாதுகாக்கும் ஆட்சியதிகாரம்மீதும் சிங்கள இளைஞர்கள் கொண்டிருந்த கோபமும், கொதிப்புமே ஜே.வி.பி. கிளர்ச்சி வடிவில் இரண்டு தடவைகள் வெடித்திருந்தன.

சிங்கள மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத அரசியல் கட்சிகளும், அவ்வப்போது பதவியில் இருந்த ஆட்சியாளர்களும் பேரினவாதத்தை தூண்டி சிங்கள மக்களை திசை திருப்பி வந்தனர்.

தங்களுக்கு எதிராக சிங்கள மக்கள் திரும்பிவிடக்கூடாது என்பதற்காக, அவர்களை தமிழ் பேசும் மக்களுக்கெதிராக திருப்பிவிடும் காரியத்தில் ஈடுபட்டனர்.

தனிச்சிங்கள சட்டம் தேவை என்று பண்டாரநாயக்காவிடமோ, ஜே. ஆர்.ஜெயவர்த்தனாவிடமோ சிங்கள மக்கள் தாமாகச் சென்று மனுக்கொடுக்கவில்லை. மன்றாடவும் இல்லை.

தாம் பதவிக்கு வருவதற்காக சிங்கள மக்களின் இன உணர்வுகளைத் தூண்டிவிட்டு, அவர்களது காவலர்களாக தம்மைக் காண்பிக்கவே தனிச் சிங்கள சட்டம் பற்றி பண்டாரநாயக்கா, ஜே. ஆர்.போன்றோர் பிரஸ்தாபித்தனர்.

24 மணி நேரத்தில் தனிச் சிங்களத்தை கொண்டுவருவதாக வாக்குறுதி கொடுத்து பதவியைக் கைப்பற்றினார் அமரர் பண்டாரநாயக்கா.

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் சிங்கள மக்களது சிறந்த காவலர்கள் என்ற அபிப்பிராயம் பெறுவதற்காகவே தமக்குள் போட்டி போட்டு வருகின்றன.

புதிய அரசியலமைப்பு சட்டம் முதற்கொண்டு, பொதுஜன முன்னணி அரசின் தீர்வுப் பொதிவரை பேரினவாத சக்திகளை திருப்தி செய்வதையே முக்கிய இலக்காகக் கொண்டிருக்கின்றன.

இன உணர்வு, மத உணர்வு சார்ந்த திருப்திப்படுத்தல்களுக்கு அப்பால் சிங்கள மக்களை பொருளாதார ரீதியாக திருப்திப்படுத்த சிங்கள அரசியல் தலைமைகளால் இயலவில்லை.

வேலைவாய்ப்பு இல்லாமை, கிராமங்கள் அபிவிருத்தி காணாமை, வறுமை ஒழியாமை போன்ற பிரச்சனைகளுக்கு முடிவு கட்டுவதற்கு பதிலாக, 'இலங்கை முழுவதையும் பௌத்த நாடாக்குவோம், பௌத்த மதத்தை அரச மதமாக்கியிருக்கிறோம், தேசியக் கொடியில் சிங்கத்தை இடம் பெறச் செய்திருக்கிறோம் என்றெல்லாம்கூறி சிங்கள மக்களை திருப்தி செய்து வருகின்றனர்.

இன்றுவரை பொருளாதார விடுதலை சிங்கள மக்களுக்கும் கிடைக்கவில்லை. அந்நிய சக்திகளிடம் கையேந்தும் நிலையிலேயே இலங்கையின் பொருளாதார நிலை இருக்கிறது.

எனவே 1948, பெப்ரவரி 04ம் திகதி சிங்கள மக்களுக்கு கிடைத்தது அரசியல் சுதந்திரம் மட்டுமே.' தம்மை யார் ஆள்வது என்பதை தீர்மானிப்பதே அரசியல் சுதந்திரத்தின் அடிப்படையாகும்.

இத்தகைய சுதந்திரமும் தமிழ் பேசும் மக்களுக்கு இன்றுவரை கிட்டவில்லை. தமது தலை விதியை தாமே தீர்மானிக்கும் உரிமை மறுக்கப்பட்டவர்களாகவே தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ் பேசும் மக்களுக்கு எத்தகைய உரிமைகளை, எவ்வாறான வரையறைக்குள் வழங்கவேண்டும் என்பதை பெரும்பான்மை இன ஆட்சியாளரும், அவர்கள்மீது செல்வாக்கு செலுத்துகின்ற பேரினவாத சக்திகளுமே தீர்மானித்து வருகின்றன.

எனவே, தமிழ் பேசும் மக்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது சிங்கள மக்கள் அரசியல் சுதந்திரம் பெற்றவர்களாகவும், தமது இன, மொழி, மத, பிரதேச பாதுகாப்புக்கான உத்தரவாதம் உள்ளவர்களாகவுமே விளங்குகின்றனர்.

ஆனால், அவர்களது அரசியல் சுதந்திரத்திற்கும் அடிக்கடி அச்சுறுத்தல்கள் ஏற்பட்டே வந்துள்ளன.

பெரும்பான்மை இனக் கட்சிகளது அதிகார ஆசைகளே அத்தகைய அச்சுறுத்தல்களுக்கு காரணமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட கால ஆட்சியில் தேர்தல் மோசடிகளது எண்ணிக்கைகள் அதிகமாகி வந்தன.

அரசியல் சுதந்திரத்தில் மக்களுக்குள்ள உரிமைகளுல் ஒன்றான வாக்குரிமையை கேலிக் கூத்தாக்கும் நிகழ்ச்சிகள் அரங்கேறியிருந்தன.

தற்போது பொது ஜன முன்னணி ஆட்சியில் வடமேல் மாகாண சபை தேர்தலில் நடைபெற்றுள்ள தேர்தல் முறைகேடுகள் முன்னைய சாதனைகளையெல்லாம் முறியடித்துள்ளன.

வடமேல் மாகாண மக்களிடம் இருந்த தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமையை குண்டர் படையினர் பறித்தெடுத்து, தம்மிஷ்டப்படி தாமே பிரயோகித்துள்ளனர்.

இலங்கை 51வது சுதந்திர தினத்தை நெருங்கிக்கொண்டிக்கையில், அந்த சுதந்திரத்தையே அர்த்தமிழக்கச் செய்யும் 'ஜனநாயக' கேலிக்கூத்து வடமேல் மாகாணத்தில் அரங்கேறியிருந்தது.

1991ம் ஆண்டில் பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களில் முறைகேடுகள் நடந்தன. அதனையிட்டு அதிருப்தி தெரிவித்த பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாஸ்ரன் இங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

அப்போது அதனை சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் கண்டித்தனர். டேவிட் கிளாஸ்ரனுக்கு தேர்தல் முறைகேடுகள் பற்றிய தகவல்களை சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரே வழங்கியுமிருந்தனர்.

தற்போது வடமேல் மாகாண சபை தேர்தல் மோசடிகள் தொடர்பாக கொழும்பில் உள்ள பெரும்பாலான தூதரகங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

அவ்வாறு அதிருப்தி தெரிவித்தை பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் கண்டித்துள்ளனர்.
பொ. ஜ. முன்னணியினருக்கு தாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நியாயமாகத் தோன்றிய விடயங்கள் யாவும், இப்போது தாமே ஆட்சியில் இருப்பதால் அநியாயமாக தெரிகின்றன.

தேசிய இனப் பிரச்சனை முதற்கொண்டு, தேர்தல் பிரச்சனைவரை தாம் பதவிக்கு வருவதற்கு முன்னர் கூறியவற்றிலிருந்து, முற்றிலும் மாறான கண்ணோட்டத்திலேயே பொ.ஜ.முன்னணி ஆட்சியாளரால் கையாளப்பட்டு வருகிறது.

இவ்வாறான நிலையில் 'சுதந்திர தினத்தை' முன்னிட்டு ஜனாதிபதி ஆற்றிய உரையில் காணப்பட்ட பெருமிதங்களும், சாடல்களும் முக்கியத்துவம் இழந்துவிட்டன.

'கடந்த நாலரை ஆண்டுகளுக்கு முன்னர் அரசியல் அடிமைத்தனத்தில் இருந்து மக்கள் மீட்கப்பட்டுவிட்டனர்' என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

வடமேல் மாகாண சபை தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக இதனை அவர் கூறியிருப்பாரானால், சிங்கள மக்கள் ஓரளவு அதனை ஏற்றிருப்பார்கள்.

பொது ஜன முன்னணியினர் தேர்தல் வன்முறையில் ஐ.தே.கட்சியினரையே மிஞ்சிவிட்டனர் என்னும் அபிப்பிராயத்தின் மத்தியில், ஜனாதிபதியின் சுதந்திரதின உரை சோபிக்காமல் போயிருக்கிறது.

சுதந்திர தின உரையில்கூட தமது எதிர்முகாமான ஐ.தே.கட்சியினரை மறைமுகமாக சாடியிருந்தார் ஜனாதிபதி.

சிங்கள மக்களின் பிரதான கட்சிகளான இரண்டுக்கும் இடையிலான அரசியல் பகை நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வருவதையும் நன்கு அவதானிக்ககூடியதாகவுள்ளது.

தேர்தல் வெற்றிகளையும், அதன்மூலம் ஆட்சியைப் பிடிப்பதையுமே ஒரே ஒரு இலட்சியமாக வரித்துக் கொண்டவையே இருபிரதான கட்சிகளுமாகும்.

எனவே, இக் கட்சிகளிடையே பகைமை வளருமே தவிர, ஒருபோதும் குறையாது என்பது தெளிவானது.

ஐக்கிய தேசியக் கட்சியில் காமினி திசநாயக்கா தலைமை ஏற்றபோது, ரணிலை தன் வாயாலேயே புகழ்ந்திருந்தார் ஜனாதிபதி சந்திரிக்கா. அப்போது ரணிலைவிட காமினியே பொ.ஜ.முன்னணியினருக்கு சவாலாக விளங்கியிருந்தார்.

இப்போது ரணிலையும் கொலைகாரர் என்றே பொது ஜன முன்னணியினர் கூறுகின்றனர். ஜனாதிபதியும் பிரசாரக் கூட்டங்களில் அவரை சாடியிருந்தார்.

ஒருவரைப் புகழ்வதும், இகழ்வதும்கூட உள்நோக்கம் கொண்டதாகவே அமைந்து வருகிறது. அந்தளவுக்கு தமது சொந்த அரசியல் நலன்களையே யாவற்றுக்கும் முதலானதாக இரு அணிகளும் முன்னிறுத்தியுள்ளன.

தமக்கு தேவையானபோது ஜனநாயகக் கோஷங்களையும், இனிப்பான பேச்சுக்களையும் வரைமுறையற்ற விதத்தில் வாரி வழங்குவதும், தமது நலன்கள் கருதி அதே கோஷங்களுக்கு மாறாக செயற்படுவதும் இரு பிரதான அணிகளுக்குமே கைவந்த கலையாகும்.

எனவே, 51வது சுதந்திர தினம் சிங்கள மக்களுக்குக்கூட நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தரக்கூடிய அறிகுறிகளை காண்பிக்கவில்லை.

ஆனந்த சுதந்திரத்தின் பலாபலன் என்று களித்துக் கூத்தாடக்கூடிய முக்கியத்துவமான சாதனைகள் எதனையும் சிங்கள மக்களுக்கும் ஆட்சியாளரால் வழங்க முடியவில்லை.

வடமேல் மாகாண சபை தேர்தல் முறைகேடுகளே 51வது சுதந்திர தின பரிசாக சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தலதாமாளிகை குண்டு வெடிப்புடன் 50வது சுதந்திர தின கொண்டாட்டங்கள் சென்ற ஆண்டில் சோபை இழந்திருந்தன.

இம்முறையும் வடமேல் மாகாண சபை தேர்தல் முறைகேடுகள் பற்றிய செய்திகளால் ஏற்பட்டுள்ள பரந்த அதிருப்திகளால் சுதந்திர தின அனுஷ்டிப்பு சோபிக்கவில்லை.

ஜனாதிபதி சந்திரிக்காமீதும், பொதுஜன முன்னணிமீதும் வைத்திருந்த நம்பிக்கைகள் குலைந்த நிலையிலேயே 51வது சுதந்திர தினத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையை சிங்கள மக்கள் செவிமடுத்திருக்கின்றனர்.

யாழ் குடாநாட்டில் அறுநூறுக்கு மேற்பட்டோர் காணாமல் போனமை, செம்மணி புதை குழிகளை தோண்டாது இழித்தடித்தமை, களுத்துறை சிறைப் படுகொலைகளுக்கு காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமை போன்றவற்றில் ஜனாதிபதியினது இமேஜ் மனித உரிமை அமைப்புக்களிடையே சேதமாகத் தொடங்கியிருந்தது.

எனினும் இவ்விவகாரங்களில் தமிழ் அரசியல் கட்சிகள் மறைமுகமாக ஜனாதிபதிக்கும் அரசுக்கும் உதவியே வந்தன. அரசின் அலட்சியப் போக்குகளை உள்நாட்டிலும், வெளியுலகிலும் அம்பலப்படுத்துவதற்கு பதிலாக, அதே அரசிடமே கோரிக்கை விடுவதும், அரசின் சார்பாக தாமே உத்தரவாதங்களை வழங்குவதுமாக தமிழ்க் கட்சிகள் நாடகமாடி வந்துள்ளன.

அவ்வாறில்லாமல், அம்பலப்படுத்தல்களில் இக் கட்சிகள் ஈடுபட்டிருக்குமானால் சர்வதேச அரங்கில் அரசுக்கு பாரிய அபகீர்த்தி ஏற்பட்டிருப்பதோடு, தமிழ் பேசும் மக்கள் சார்பான அனுதாபமும் மேலும் வளர்ந்திருக்கும்.

ஆனால், தேர்தல் முறைகேடுகள் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமன்றி, தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் போன்றவையும் வெகு நேர்த்தியாக ஆட்சியாளரை அம்பலப்படுத்தியுள்ளன.

வன்முறைகளே நடக்கவில்லை என்றும், சிறு சம்பவங்களை மிகைப்படுத்திவிட்டனர் என்றும் முக்கிய அமைச்சர்களே கூறியிருந்தனர்.

ஆனால் தேர்தல் வன்முறையை ஆராய ஜனாதிபதியே கமிட்டி நியமித்துள்ளார். இக் கமிட்டி நியமிக்கப்பட்டமையானது, தேர்தல் முறைகேடுகளை மூடி மறைக்க முடியாத நிலையில், தம் இமேஜை பாதுகாக்க ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கையேயாகும்.

தேர்தல் வன்முறைக்கு காரணம் என்று கூறப்படும் அரசாங்கமே, அந்த வன்முறையை ஆராயக் கமிட்டி நியமிப்பது தகுந்த பரிகாரமாகாது.
தக்க நடவடிக்கையுமாகாது.

ஆட்சியில் யார் இருந்தாலும் அவர்கள் நியமிக்கும் கமிட்டிகளோ, விசாரணைக் கமிஷன்களோ ஆட்சியில் இருப்பவர்களை குற்றம் சாட்டியதாக இங்கு வரலாறே கிடையாது.

எனினும், வெளியுலக இராஜதந்திரிகளே அதிருப்தி தெரிவிக்கும் அளவுக்கு ஐ.தே.கட்சியும், தேர்தல் காண்காணிப்புக் குழு போன்றவையும் மேற்கொண்ட அம்பலப்படுத்தல்களே, கண்துடைப்பு நடவடிக்கைகளுக்குகென்றாலும் தூண்டியுள்ளன.

ஆனால், அறுநூறுபேர் கைதாகி பலியான பாரிய படுகொலை விடயத்தில் விசாரணைக் கமிஷன் நியமிக்க வைக்கக்கூட தமிழ்க் கட்சிகளால் முடியவில்லை என்பதும் நோக்கத்தக்கதாகும்.

தமிழ்க் கட்சிகளால் செய்ய முடியாத அரசியல் அம்பலப்படுத்தல்களை எதிர்கட்சியே இன்று செய்து வருகிறது.

இதனால் எதிர்க்கட்சி அரசியல் இலாபம் தேடுகிறது. அதேசமயம் தமிழ் பேசும் தரப்புக்கும் தம்மையறியாமல் பலன் தேடித் தருகிறது.

தேர்தல் முறை கேடுகளால் மிகுந்த நற்பெயர் இழப்புக்கு உள்ளாகியுள்ள ஆட்சியாளரால், முன்னர்போல 'சமாதானத்திற்கான யுத்தம்' என்று உரத்துக் கூறுவது இனிமேல் முடியாதுபோகும்.

அவ்வாறு கூறினாலும் முன்னர் போல அக் கோஷத்திற்கு வரவேற்பு இருக்கப்போவதில்லை.

எனினும், தமது சரிந்து போன இமேஜை நிமிர்த்தவும் யுத்த வெற்றிகளையே ஆட்சியாளர்கள் முன்பிலும் அதிகமாக இனி நாடவேண்டியவர்களாகின்றனர்.

எனவே யுத்தம் நிறுத்தப்படும் சந்தர்ப்பம் பொதுத் தேர்தல் வரை கிடையவே கிடையாது என்பதை இப்போதே குறித்து வைத்திருக்கலாம்.

மேலும் மேலும் பேரினவாதத்தை சார்ந்து நிற்பதும், புலிகளை வெல்லுதல் என்ற கோஷத்தால் சிங்கள மக்களது மனங்களை வென்றெடுப்பதுமே பொதுஜன முன்னணியின் எதிர்கால திட்டங்களாக அமைந்திருக்கப்போகிறது.

புலிகளை வெல்லுதல் என்பது பேரினவாதத்தை பொறுத்தவரை தமிழ் மக்களை வெல்லுதலே. எனவே புலிகளுக்கு எதிரான யுத்தம் என்ற கோஷம், தனிச்சிங்களச் சட்டம் போன்ற பகிரங்கமான பேரினவாத நிலைப்பாடுகளது புதிய நாசூக்கான வடிவமாகவும், கோஷமாகவுமே விளங்கி வருகிறது.

இக் கோஷத்தை கைவிட்டால் பொதுஜன முன்னணியை பேரினவாத தரப்பு கைவிட்டுவிடும். அடுத்த பொதுத் தேர்தலுக்குள் அப்படியொரு நிலை தமக்கு ஏற்பட பொதுஜன முன்னணி விரும்பப் போவதில்லை.

ஆகவே, போர் தொடரும். தீர்வு என்பது பேச்சளவில் மட்டுமே இருந்து கொண்டிருக்கும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ற பேச்சுக்குக்கூட ஆட்சியாளர்கள் தற்போது செவிகொடுக்கமாட்டார்கள்.



வாக்குச்சாவடியில்

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

தமிழ்க் கட்சிகள் தமக்குள் மோதுவதால் தமிழினத்துக்கு விடிவு கிடைக்காது என்று வவுனியா இராணுவ பிரிகேடியர் கூறியுள்ளார்.

புளொட், ரெலோ இடையே நடைபெற்ற வரி வசூலிப்பு யுத்தத்தை தீர்த்துவைத்து, இருதரப்புக்கும் இடையே கைகுலுக்கல் நடத்திவைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அவ்வாறு கூறியதை பத்திரிகைகளுக்கும் கூறி மகிழ்ந்துள்ளன அக் கட்சிகள்.

யுத்தம் தொடர்பாக பி.பி.சிக்கு பேட்டியளித்த மாணிக்கதாசன் நேரடி வர்ணனைப் பாணியில், 'எமது முகாமை நோக்கி ரெலோ இயக்கத்தினர் வந்தனர். நாம் சுட்டபோது மூன்று பேர் சூடுபட்டு விழுந்ததைக் கண்டோம்' என்று கூறினார்.

வவுனியாவில் இரண்டு இயக்கமும் சமபல நிலையில் இருக்கின்றன. பிரிகேடியர் சமரசம் செய்தாலும் முறுகல் நிலைக்கு முற்றுப்புள்ளி விழவில்லை.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இந்த இரண்டு அமைப்புக்களும் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டன. தங்கள் ஒற்றுமைக்கு வாக்களிக்குமாறு கேட்டன.

இதுபற்றி வவுனியா குடிமகன் ஒருவர் கூறியது இது:

'தேர்தல் வந்தால் எங்கள் 'வோட்'டை கேட்கிறார்கள். தேர்தல் முடிந்தால் தங்கள் 'வேட்'டைத் தீர்க்கிறார்கள்'.

—★—

யாழ் குடாநாட்டில் வெள்ளை வேனில் ஆட்கடத்தல். கடத்தும்போதே மிரட்டல்.

'இராணுவத்திடமோ, மனித உரிமை ஆணைக்குழுவிடமோ முறையிட்டால் உங்கள் பிள்ளை திரும்பிவராது. ஜாக்கிரதை'.

இதனால் யார் கடத்தியது என்று தெரிந்தும், அவர்களைப் பற்றி புகார் செய்ய பெற்றோர்கள் அஞ்சுகிறார்கள்.

படையினருக்கு யார் கடத்துகிறார்கள், எங்கு வைத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் தெரியும்.

யாழ் குடாநாடு பூரண கட்டுப்பாட்டில் இருக்கிறது என்கின்றனர். அடிக்கடி தேடுதலும் சுற்றி வளைப்பும் நடத்துகின்றனர்.

யாழ் நகரின் மத்தியிலேயே கடத்திச் செல்லப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அது மட்டும் படையினருக்கு எப்படித் தெரியாமல் போகும்.

'ஜனநாயகம்' பற்றிப் பேசும் ஏனைய தமிழ்க் கட்சிகள், இந்த ஆட்கடத்தல்களுக்கு யார் பொறுப்பு என்று தெரிந்தும் ஏன் அதனைக் கூறவில்லை?

### எச்சரிக்கையும் கடத்தலும்

□□□

மொட்டைக் கடிதம் போடுவோர் யாழ் குடாநாட்டில் மறுபடி கொட்டமடிக்க தொடங்கிவிட்டனர்.

தமக்கு பகையாக உள்ள குடும்பப் பிள்ளைகளை புலிகள் என்று மாட்டிவிடும் வேலை தொடங்கிவிட்டது.

படையினருக்கு தகவல் கொடுத்தோர், இனி மேல் புலிகளை பிடிப்பதற்காக புறப்பட்டுள்ள இயக்கங்களுக்கு தகவல் கொடுத்து தங்கள் பழிவாங்கும் படலத்தை ஒப்பேற்றுவர்.

வலையில் விழப்போவது புலிகளல்ல. எலிகள்.

—♦♦♦—

முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் வடமேல் மாகாணசபைக்கு போட்டியிட்டவர்கள் அமைச்சர் பௌசியிடம் புகலிடம் தேடியுள்ளனர்.

தனது ஆட்கள் தேர்தலில் தோல்வி கண்டதால், தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக மு.காங்கிரஸ் உண்மையை கூறியது. தங்கள் ஆட்கள் வெற்றி பெற்றிருந்தால் மௌனம் சாதித்திருக்க கூடும். அல்லது பொதுஜன முன்னணிக்காக வாதாடியும் இருக்கலாம்.

கிழக்கு மாகாணத்தில் மட்டுமே முஸ்லிம் காங்கிரஸ் வெற்றி பெறமுடியும். இங்கு நான்தான் ராஜா என்று பௌசி நிரூபித்துவிட்டார் என்று பூரிக்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள்.

அமைச்சர் அஷ்ரப்புக்கு இது கௌரவப் பிரச்சனை. ஆனாலும் சறுக்கல் சறுக்கல்தான்.

தேர்தலுக்கு முன்னர் அமைச்சர் அஷ்ரப்புடன் முரண்படாத ஜனாதிபதி, தேர்தலின் பின்னர் அமைச்சர் பௌசியின் ஆளுக்கு மாகாணசபையில் அமைச்சர் பதவியை கொடுத்திருக்கிறார். இது அமைச்சர் அஷ்ரப்புக்கு அதிர்ச்சி வைத்தியம்.

வடமேல் மாகாண சபை மோதலில் வெற்றி பௌசிக்கே. இதனை ஜீரணிக்க அஷ்ரப்புக்கு நாளாகலாம்.

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 48

**கடந்தவாரம்**

**இராணுவத்தினருக்கும் சிவிலியன்களுக்கும் இடையே உதைப்பந்தாட்டப் போட்டிகளை கலாசார அமைச்சர் சியம்பா ஏற்பாடு செய்கிறார். எக்ஸ்பிரஸ் அணியுடன் மோதி தோல்வி கண்ட இராணுவ அணி, அவர்களைத் தாக்குகிறது. அவர்களும் திருப்பித் தாக்கியதால் கைது செய்து கொல்லப்படுகின்றனர். அமீனின் மனைவி மெடினாவின் நடனக் குழுவை தேசிய நடனக் குழுவாக அறிவிக்கின்றனர். கலாசார அமைச்சரை சந்திக்கத் துடிக்கிறாள் மெடினா.**

**இனி....**

# இடி அமீன்

தருவது ரசிகன்

மெடினாவின் அழைப்பை ஏற்றால் தன் உயிர் தனக்கு சொந்தமாக இருக்காது என்று பயந்து கொண்டிருந்த சியம்பா, மீண்டும் தொலைபேசி மணி ஒலித்தபோது நடுங்கினார்.

தயங்கித் தயங்கி ரிசீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தார்.

மறுமுனையில் இடி முழக்கம் கேட்டது. அது அமீனின் குரல்.

**"என்ன சியம்பா, உம்மை சந்தித்து நடனக்குழு பற்றி விவாதிக்க வேண்டும் என்று மெடினா கேட்டாளாம். நீர் நேரம் இல்லை என்றீராமே! கையில் என்ன வேலை இருந்தாலும், அப்படியே போட்டு விட்டுப் புறப்படும்!"** என்று மளமள வென்று கூறிவிட்டு வைத்துவிட்டான்.

சியம்பா அப்படியொன்றும் கம்பீர மான அழகரல்ல. பெண் சபலம் இல்லாதவருமல்ல. தனது செயலாளராக இருந்தவளை அமீன் தன் கண் முன்னாலேயே சுட்டுக்கொன்றபோது ஏற்பட்ட பீதி இன்னமும் அப்படியே இருந்தது.

அதே பீதியுடனேயே மெடினாவைச் சந்திக்கப் புறப்பட்டார் சியம்பா.

மெடினா சுருட்டைத் தலைமுடியும், நெடிய உயரமுமாய், கவர்ந்திழுக்கும் கறுப்புக் காந்தமாய் புன்னகைத்து வரவேற்றாள்.

அவளது உடல் அமைப்பிலேயே தைரியமும், ஆளுமையும் தெரிந்தது. அவளது உதடுகளில் நிரந்தரமாகவே போதை இருந்தது. அது எந்த ஆணையும் தடுமாறச் செய்யும்.



கைகுலுக்கி வரவேற்றாள். மிகவும் அருகில் அவள் வந்தபோது, சியம்பாவுக்கு இதயத்துடிப்பு எகிறியது.

எதிரெதிரே அமர்ந்து கொண்டனர். நடனக்குழு பற்றியே முதலில் பேச்சுத் தொடங்கியது.

அத்தோடு முடித்துக்கொண்டு கிளம்பி விடவேண்டும் என்றே சியம்பா உள்ளூரத் துடித்தார். அதேசமயம் மனதில் ஒரு மூலையில் அவளது போதை ததும்பும் உதடுகள் சபலத்தைத் தூண்டிக்கொண்டும் இருந்தன.

பேச்சோடு பேச்சாக மெடினா தன் ஆசைக்குத் தாவினாள்:

"உங்கள் ஜனாதிபதி ஊரெல்லாம் மேய்கிறார். இங்கே நான் தனிமையில் புழுவாகத் துடிக்கிறேன். அதற்காகத்தான் இந்த நடனக்குழு. பொழுதுபோக வேண்டாமா? ஆனால் அப்படியும்..." என்று கூறி நிறுத்தி சியம்பாவை ஏக்கத்தோடு பார்த்தாள்.

பார்த்தாள் என்பதைவிட விழுங்கினாள் என்பதே பொருத்தம். சியம்பாவுக்கு சலபத்தின் வீதம் கூடிக்கொண்டிருந்தது.

"உங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களைப் போன்ற புத்திசாலிகளோடு பழகுவதற்கு எனக்கு விருப்பம் இருக்கிறது. இவரது கண்ணில் பட்டு, மனைவியானதால் என் சுதந்திரம் எல்லாம் காற்றோடு போய்விட்டது!" என்றாள். அவளது கண்கள் கலங்கிவிட்டன.

சியம்பா தன்னைத் திடப்படுத்திக்கொள்ள, அவளைப் பார்ப்பதைத் தவிர்த்து தலையைக் குனிந்துகொண்டார்.

எப்போது எழுந்தாள், எப்போது அருகில் வந்தாள் என்று அவருக்கே தெரியவில்லை; அவர் தழுவப்பட்டார். அவரது தலையை பிடறியில் அழுத்தி தன் நெஞ்சுக்குள் தஞ்சம் கொடுத்தாள்.

சியம்பாவால் விடுபட முடியவில்லை. விடுபட மனமும் இல்லை. ஆனாலும் பயம் ஒரு பந்தாக வயிற்றுக்குள் உருண்டு கொண்டுதான் இருந்தது.

மெடினா ஒருவிதமான ஆவேசத்தோடு செயற்பட்டாள். தன்னை உணர்ச்சியற்ற பொம்மையாகக் கருதும் அமீனை பழிவாங்குவதாக நினைத்து சியம்பாவை அவள் பிடித்துக் கொண்டாளா? அப்படித்தான் இருக்க வேண்டும்.

சியம்பாவுக்கு அவ்வாறான வேக மான பெண், ஆவேசமான பெண் புது அனுபவம். அவர் திணறிப்போனார். அவரது விருப்பங்களுக்கு அங்கு இடமிருக்கவில்லை. மெடினா முழுவதுமாக அவரை ஆக்கிரமித்தாள்.

அமீனுக்குத் தெரிந்தால் தன் உயிர் பறந்துவிடும் என்பதையோ, தன் குடும்பமே கூண்டோடு பலியாக நேரும் என்பதையோ மெடினாவின் ஆக்கிரமிப்பில் மறந்து கொண்டிருந்தார் சியம்பா.

மெடினா இடையே எழுந்துபோய் கதவுகளை மூடி தாழ் போட்டுவிட்டு வந்தாள். மிக இயல்பாக, எந்த தயக்கமும் இல்லாமல் சியம்பா முன்பாக, தன் உடலில் சுமையாக இருந்த ஆடைகளை இறக்கி வைத்தாள்.

சியம்பா திக்பிரமை பிடித்தவராக மாறிவிட்டார். அதன் பின்னர் அங்கே மெடினாவின் ஆட்சி. அந்த ஆட்சியில் மெடினாதான் சர்வாதிகாரியாக நடந்து கொண்டாள்.

சியம்பாவுக்கு அமீனின் ஆட்சியைவிட மெடினாவின் ஆட்சி மேலானதாகப் பட்டது.

களைத்துப்போய் மல்லாந்து கிடந்த சியம்பாவின் மார்பில் தலைவைத்துக் கிடந்த மெடினா: "பெண் என்றால் பயம்கூடப் பறந்து விடுமாக்கும்!" என்று சிரித்தாள்.

"பயமா?" என்றார் சியம்பா. மெடினா சிரித்தபடி: "ஒரு ஆணின் உணர்ச்சிகளை பெண்ணால் புரிந்துகொள்ள முடியும். அதுவும் இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் ஆண் பயந்து போயிருந்தால் உடனே தெரிந்துவிடும்." என்று குறும்பாக அவள் சிரித்தபோது, சியம்பா மேலே பேசவில்லை.

மெடினாவே தொடர்ந்து பேசினாள்:

"நியாயமான பயம்தான். மனித இரத்தத்தையே குடிக்கும் மனிதரைக் கண்டு யார்தான் அஞ்ச மாட்டார்கள்?" என்றவள், "அது அவர்களது 'கக்வா' இனப்பழக்கமாம். எதிரிகளது இரத்தத்தில் கொஞ்சமேனும் குடித்தால்தான் 'கக்வா' இனத்தவர் பெருமை கொள்வார்கள். இது என்ன காட்டுமிராண்டித்தனமான பழக்கம். இதனை அறிந்த பின்னர் அவருடன் உறவு கொள்ளவே அருவருப்பாக இருக்கிறது. நரக வேதனை" என்றாள் வெறுப்பாக.

சியம்பாவுக்கு அவள் கூறியதில் பாதி காதில் ஏறவில்லை. அமீனின் கொலை வெறி பற்றி அவள் கூறியது மட்டுமே காதில் ஏறி, மனதில் புகுந்து இதயத்தைப் பிடித்து உலுக்கியது.

சபலம் தணிந்த பின்னர்தான் புத்தி கத்தியை உருவி அவரை எச்சரிக்கத் தொடங்கியது.



பிடல் காஸ்ரோவுடன் அமீன்

எழுந்து கொண்டார். "அவசரமா?" என்று கேட்டாள்.

தன் உடைகளை அணிந்து கொண்ட சியம்பா: "மெடினா இத்தோடு எமது சந்திப்பை நிறுத்திக்கொள்வோம். எனக்கும் குடும்பம் இருக்கிறது. நீங்களும் உயிர் வாழ வேண்டும். இங்கு வரும்போதே என்னைக் கட்டுப்படுத்த வேண்டும்; உங்களுக்கு புத்தி சொல்ல வேண்டும்; என்று நினைத்தபடிதான் வந்தேன். ஆனால்..."

மேலே பேசத் தயங்கினார்.

"புத்தியை சலபம் வென்றுவிட்டது," என்று விரக்தியாகச் சிரித்தாள் மெடினா.

சியம்பாவுக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. "இங்கு வதைபடாமல் நாட்டைவிட்டுப் போய்விடுங்களேன்...." என்றார். அதனைத் தவிர அவருக்கு வேறு யோசனை தோன்றவில்லை.

மெடினா அதற்கும் விரக்தியாகச் சிரித்தாள். "அது முடியாது, முடிந்திருந்தால் எப்போதே போயிருப்பேன்," என்றாள்.

சியம்பா சங்கடத்தோடு விடை பெற்றார். மெடினாவை நினைக்க முடியாதளவுக்கு பயம் அவரைப் பிடித்தாட்டியது.

இன்றே நாட்டைவிட்டு ஓடிவிடலாமா? என்று நினைத்தார். குடும்பத்தோடு தப்பிச் செல்வது தற்போது உகந்தது அல்ல என்பதால் அந்த நினைப்பைத் துறந்தார்.

வீடு திரும்பிய பின்னர் தொலைபேசி மணி ஒலித்தது.

அதனை எடுக்கவே பயமாக இருந்தது. தொடர்ந்து அடித்தபடியே இருந்ததால், சென்று எடுத்தார்.

அமீன்தான் பேசினான்.

குரலைக் கேட்டதுமே சியம்பாவுக்கு உதறல் எடுத்தது.

"என்ன மெடினா கேட்டதையெல்லாம் செய்து கொடுத்தீரா?" என்று அமீன் எடுத்த எடுப்பிலேயே கேட்டபோது சியம்பாவுக்கு குரல் அடைத்துப்போனது.

**"என்ன சத்தத்தையே காணோம்.... தூக்கத்தை குழப்பிவிட்டேனா?"** என்று அமீன் கேட்க, ஒரு விதமாக சுதாகரித்தபடி "ஆம்... இல்லை..." என்று உளறினார்.

**"தூக்கக் கலக்கம் போகவில்லை உமக்கு. மெடினா உம்மைப் புகழ்ந்து கூறினாள். அதுதான் எடுத்தேன். இப்போது நான் மெடினாவோடுதான் இருக்கிறேன். என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது மட்டும் இரகசியம்."** என்று தன் வழக்கமான சிரிப்பை உதிர்த்து விட்டு தொடர்பைத் துண்டித்தான்.

அமீன் மெடினா வீட்டில் இருக்கிறானா? சியம்பாவுக்கு புதிதாக மேலும் ஒரு பயம் சேர்ந்து கொண்டது.

'அமீன் கண்டுபிடித்து விடுவானோ, அவளே உளறிக் காட்டிக்கொடுத்து விடுவாளோ?' என்று பயந்தார். அன்று இரவு முழுக்க சியம்பா தூங்கவேயில்லை.

சியம்பா பயந்தது மாதிரி அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. மெடினாவும் பின்னர் தொடர்பு கொள்ளவில்லை. தன்மீது இரங்கி விட்டுவிட்டாள் என்று சியம்பா நினைத்தார்.

மறுநாள் அமீனின் முன்பாக அமர்ந்திருந்தார் சியம்பா. புதிய வெளியுறவுத் துணை அமைச்சரோடு தொலைபேசியில் அமீன் பேசிக்கொண்டிருந்தான்.

**"இங்கு எனக்கு முன்பாக அரசியல் நிபுணர்கள் பலர் அமர்ந்திருக்கின்றனர். கூட்டுச்சேரா நாடுகளோடு எமது உறவுகளைத் திடப்படுத்த வேண்டும். அதற்கேற்ற செயற்பாடுகளை செய்யுங்கள்!"** என்று பேசிக் கொண்டிருந்தான்.

தன் முன்பாக அரசியல் நிபுணர்கள் அமர்ந்திருப்பதாக அமீன் கூறியபோது, சியம்பா மட்டும்தான் அங்கிருந்தார்.

அமீனிடம் ஒரு வழக்கம் இருந்தது. அதிகாரிகளிடமோ, அமைச்சர்களிடமோ தொலைபேசியில் பேசும்போது, சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் தன் முன்பாக இருப்பது போலக் காட்டிக் கொள்ளுவான்.

அதிகாரிகளோ, அமைச்சர்களோ குறிப்பிட்ட துறைகளைப் பற்றி தவறான தகவல்களைத் தனக்கு தந்து ஏமாற்றி விடக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு காட்டிக் கொள்வான்.

அமீனுக்கு தன் அமைச்சர்கள் உட்பட எவர்மீதும் நம்பிக்கை கிடையாது. நம்புவது மாதிரி நடிப்பான்.

**"உங்களை மட்டுமே நான் நம்பியிருக்கிறேன். அதனால் எனக்கு விசுவாசமாக இருங்கள்; என் நம்பிக்கையைப் பாழடித்து விடாதீர்கள்!"** என்று கூறுவான்.

தனது பாதுகாப்புக்காக தினம் ஒரு இடத்தில் தங்குவான் அமீன். அன்றும் தனது காதலி ஒருத்தியின் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது அந்த தகவல் வந்தது.

"என்டபே விமான நிலையத்தில் கார்லோஸ் தனது குழுவினருடன் வந்திறங்கியுள்ளான்."

அதுதான் தகவல்.

**"என்னது, கார்லோஸா?"** என்று பெயரைக் கேட்டதுமே பிரமித்தான் அமீன்.

மேலும் பிரமிப்பான பல சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்தன.

**(இடி தொடரும்)**

## மீட்கப்பட்ட காதல் கடிதங்கள்

இளவரசி டயானா தனது காதலரான ஜேம்ஸ் ஹெவிற்றுக்கு காதல் கடிதங்கள் எழுதினார்.

அக் கடிதங்களில் சில வற்றை ஜேம்ஸ் ஹெவிற் வெளியிட்டார். வேறு சில கடிதங்கள் திருட்டுப் போயிருந்தன.



ஹெவிற்றின் காதலியான அன்னா என்பவரே கடிதங்களை திருடியதாக இப்போது தெரியவந்திருக்கிறது.

கடிதங்களை திருடிய அன்னா, அவற்றை பத்திரிகைகளுக்கு விற்றார். ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பணம் கிடைத்தது.

அக் கடிதங்களை பத்திரிகை அதிபர் ஒருவர் பிரிட்டிஷ் அரச குடும்பத்தினருக்கு விற்றுவிட்டார். டயானாவின் உயிலை கவனிக்கும் சட்டநிறுவனத்தின் தலைவரான லோரன்ஸ் கிரகாமிடம் கடிதங்கள் ஒப்படைக்கப்பட்டன.

இவ்விடயத்தை அறிந்த ஹெவிற் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

'மொத்தம் 64 கடிதங்கள் இருக்கின்றன. அத்தனை கடிதங்களையும் என்னிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று கோரினார் ஹெவிற்.

வழக்கை விசாரித்த நீதிபதி, கடிதங்களை ஹெவிற்றிடம் ஒப்படைக்குமாறு தீர்ப்பு வழங்கினார்.

படை அதிகாரியான ஜேம்ஸ் ஹெவிற் டயானாவுக்கு குதிரையேற்றப் பயிற்சி கொடுத்தார். அப்போது அவர்களுக்குள் நெருக்கம் ஏற்பட்டது.

குதிரைப் பயிற்சி பெறும் இடத்திலும் அரண்மனையிலும் இருவரும் உல்லாசம் அனுபவித்தனர். அது பற்றியும் தனது உணர்ச்சிகளை அக் கடிதங்களில் டயானா எழுதியுள்ளார்.

அக் கடிதங்கள் ஒவ்வொன்றுக்கும் பல கோடி ரூபாய் மதிப்புள்ளது. அதனால்தான் அக் கடிதங்களை மீட்டிருக்கிறார் ஹெவிற்.

## பெண்ணாக மாறிய பின்



பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ரோனிவான் சான்ட் என்பவருக்கு 48 வயது.

திருமண உறவு இவருக்கு திருப்தி அளிக்கவில்லை. தன்னையே ஒரு பெண்ணாகக் கற்பனை செய்த அவரால் தன் மனைவியுடன் இல்லற சுகத்தில் மூழ்க முடியவில்லை.

கடந்த ஆண்டு அறுவைச் சிகிச்சை ஒன்றின்மூலம் தன்னைப் பெண்ணாக மாற்றிக்கொண்டார்.

தனது பெயரையும் பிரசிலா சான்ட் என்று மாற்றிக் கொண்டார். ஆனால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

தனது முன்னாள் மனைவியை அவர் விவாகரத்து செய்தால்தான், பிறப்புச் சான்றிதழில் மாற்றம் செய்யலாம் என்று அதிகாரிகள் கூறிவிட்டனர். அதனால் முன்னாள் 'அவன்' இந்நாளில் 'அவளா'க அழைக்கப்பட முடியாமல் இருக்கிறார்.

## குழந்தை ஒன்று தாய் இரண்டு

ஒரே குழந்தைக்கு 2 தாய்மார் சொந்தம் கொண்டாடியதை மன்னர் சாலமன் கதையில் எல்லாரும் படித்திருப்பீர்கள். ஆனால் அது போன்றதொரு சம்பவம் உண்மையிலேயே நடந்துள்ளது. இங்கல்ல,



இந்தியாவின் தலைநகர் புது டில்லியில்.

குல்லு என்கின்ற 5 வயதுடைய பிரபாத் என்ற தங்களது மகனை டில்லி ரெயில் நிலையத்தில் வைத்துக் காணவில்லை என்று பிரகலாத் சோனி என்பவரும் அவரது மனைவி ரேணுவும் ஆகியோர் 3 ஆண்டுகளுக்கு முன்பு பொலிஸில் புகார் கொடுத்திருந்தனர்.

இதே போன்று தினேஷ் பாண்டே மற்றும் அவரது மனைவி ராஜகுமாரி ஆகியோரும் தங்களது மகனைக் காணவில்லை என்று 1994ம் ஆண்டு டிசம்பர் 12ம் திகதி வினய்நகர் பொலிஸில் புகார் செய்திருந்தனர். அவர்கள் தங்கள் மகனை யாராவது கடத்தியிருக்கக்கூடும் என்று புகார் செய்தனர்.

இதற்கிடையே பிரகலாத் என்ற ஒரு வியாபாரி, அந்தச் சிறுவனை ஒரு மிட்டாய்க் கடையில் பார்த்ததாக சரோஜினி நகர் காவல் நிலையத்தில் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து முன்பு புகார் செய்த பெற்றோர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதன் பிறகு தான் பெரும் பிரச்சனை ஆரம்பமாயிற்று. 2 ஜோடி தம்பதிகளுமே அந்தச் சிறுவன் தங்கள் மகன்தான் என்று சொந்தம் கொண்டாடினார்கள். இதைக் கேட்ட பொலிஸாருக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. எனவே இந்த விவகாரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

அங்கும் குழப்பம் நீடித்தது. கடைசியில் 'மரபணு சோதனை' செய்யத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அந்தத் தம்பதிகளுக்கு அதற்கான பணவசதி இல்லாததால், அதை இலவசமாகச் செய்துகொடுத்து, நீதிமன்றத்திற்கு உதவ ஹைதராபாத்திலுள்ள அதிகாரிகள் முன்வந்தனர்.

கடைசியில் 'மரபணுச் சோதனை'யில் சிறுவன் குல்லுவின் உண்மையான பெற்றோர் பிரகலாத் சோனியும் அவரது மனைவி ரேணுவும்தான் என்று தெரியவந்தது. நீதிபதி, அந்தச் சிறுவனை அவர்களிடம் ஒப்படைத்தார்.

## டாக்டர் ஆலோசனை




அமெரிக்காவில் சிறுவயதினர் செக்ஸில் ஈடுபடுவது பெருகிவிட்டது. சமீபத்திய ஆய்வொன்றில் இந்தத் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

56 வீதமான சிறுவயதினர் 18 வயதிற்குள்ளாகவே செக்ஸில் ஈடுபட்டு விடுகின்றனர்.

இதனால் சிறுவயதில் கருத்தரிப்போர் தொகையும் கூடிவிட்டது. இப்பிரச்சினை தொடர்பாக டாக்டர்கள் கலந்தாலோசனை நடத்திவருகின்றனர்.

சிறு பிராயத்தில் செக்ஸில் ஈடுபடுவதை தவிர்க்க ஆலோசனைகள் வழங்குவது பற்றி டாக்டர்கள் ஆராய்ந்துவருகின்றனர்.

## அமெரிக்கா கதறல்



இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் வளர்ச்சியை அமெரிக்காவால் பொறுக்க முடியவில்லை.

இரு நாடுகளுக்கும் இடையேயும் சிண்டு முடிந்துவிடும் அமெரிக்கா, பாகிஸ்தானின் நட்பு நாடுபோல நாடகமாடி வருகிறது.

அமெரிக்கப் பாதுகாப்பு புலனாய்வு நிலைய இயக்குநர் ஜெனரல் பாட்ரிக் சமீபத்தில் கூறியுள்ள கருத்து அமெரிக்காவின் நோக்கத்தைத் தெளிவாக்குகிறது.

"பாகிஸ்தானும், இந்தியாவும் வளரும் வேகத்தைப் பார்த்தால் 2010ம் ஆண்டுக்குள் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்.

இந்த இரு நாடுகளும் வளர்ந்து விட்டால், ரசியா, சீனா மற்றும் போக்கிரி நாடுகளான ஈராக், ஈரான் போன்றவற்றுடன் சேர்ந்து அமெரிக்காவை அச்சுறுத்தத் தொடங்கிவிடும்!" என்று அவர் கூறியிருக்கிறார்.

அமெரிக்க செனட்டின் விசாரணை ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.



# சாய்ந்த கட்டடங்கள்

← கொலம்பியாவில் 27.01.99 அன்று நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் இரண்டாயிரம் பேரை விழுங்கியது. கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின.

கட்டடங்கள் இடிந்து கிடக்கும் காட்சியே இங்கு காணப்படுகிறது. செயற்கையை இயற்கை சாய்த்திருக்கிறது.

## தகவல் பெட்டி

↓ இந்தியாவில் கேரள மாநிலத்தில் உள்ள திருச்சூரில் ஒரு வித்தியாசமான சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உயரமானவர்கள் ஒன்று சேர்ந்து இதனை அமைத்துள்ளனர். ஆறு அடிக்கு மேற்பட்டவர்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற ஒன்று சேர்ந்துள்ளனர்.

பஸ்களில் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய ஏற்பாடு, ரயில்களில் நீட்டி நிமிர்ந்து இருக்க, நீட்டிப் படுக்க வசதி போன்ற கோரிக்கைகளை தங்கள் கைகளில் வைத்திருக்கின்றனர். இச் சங்கத்தின் தலைவர் பெயர், பி.ஜக்காரியா ஜோசப். நெட்டையர்கள் நியாயம் கேட்கிறார்கள். பஸ் கூரைகளை உயர்த்த வேண்டியது தானோ?


# உயர்ந்த சங்கம்



# முதல் குழந்தை தமிழ்க் குழந்தை

↓ 20ம் நூற்றாண்டின் கடைசி ஆண்டு இது. இந்த ஆண்டின் முதல் குழந்தை என்ற பெருமையை தமிழ்க் குழந்தை ஒன்று பெற்றுள்ளது.

அமெரிக்காவில் சான்பிரான்ஸிஸ்கோ நகரில் வசிக்கின்றனர் ஸ்ரீபாலன்,வித்யா தம்பதி. தமிழ் நாட்டிலிருந்து சென்று குடியேறியவர்கள். (சென்றேறு குடிகள் எனலாமோ?)



1998 டிசம்பர் 31ம் திகதி நள்ளிரவில் உலகம் புதுவருட பிறப்பை எதிர்நோக்கி இருக்க, ஸ்ரீபாலன், வித்யா தம்பதி புதுப் பிறப்பை எதிர்நோக்கி இருந்தனர். சரியாக இரவு பன்னிரண்டு மணி ஒரு செக்கண்டுக்கு வித்யாவுக்கு பெண் குழந்தை பிறந்தது.

இதனை உடனடியாக கம்பியூட்டரில் பதிவு செய்தனர். இதனால் விஷயமறிந்து தொலைக்காட்சி நிறுவனங்களும், பத்திரிகையாளர்களும் இந்த நூற்றாண்டின் கடைசி ஆண்டின் முதல் குழந்தையை படம் எடுக்க ஓடோடிச் சென்றனர். 'சான்பிரான்ஸிஸ்கோ எக்ஸாமினர்' பத்திரிகையில் பிரசுரமான படமே இது.





# கைகுலுக்கல்

← பாகிஸ்தானை சேர்ந்த ஆலம் சென்னா மறைந்த பின்னர், உலகில் தற்போதுள்ள அதி நெட்டையர் நசீர் அகமட். இவரும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர். இச் செய்தி முன்னரே இங்கு வெளியானது.

7 அடி 9 அங்குல உயரமான நசீர் அகமட் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பை சந்தித்து கைகுலுக்கும் காட்சி இது. நவாஸ் ஷெரிப் உயர்ந்த பதவியில் இருந்தாலும், அவரே நிமிர்ந்து பார்க்குமளவுக்கு உயர்ந்து நிற்கிறார் நசீர் அகமட்.

முன்னர் ஆலம் சென்னாவும் நவாஸ் ஷெரீப்பை சந்தித்து கைகுலுக்கியிருந்தார். அப்படமும் தகவல் பெட்டியில் பிரசுரமாகியிருந்தது.

# கல்லறையில் செல்.:.போன்

↑ செல்ஃபோன்கள் பாவனை நம் நாட்டிலும் அதிகமாகிவிட்டது. குறிப்பாக கொழும்பில் செல்போன் பாவனையாளர்கள் தொகை ஏறி வருகிறது. செல்ஃபோனுக்கு தூய தமிழில் 'செல்லிடப் பேசி' என்று பெயர் வைத்துள்ளனர்.

இஸ்ரேல் நாட்டில் ஆக்ரிஷ் என்னும் 17 வயது இளைஞர் செல்ஃபோன் பைத்தியம்.

செல்ஃபோன் இல்லாமல் ஒரு நிமிடம்கூட இருக்கமாட்டார். அடிக்கடி செல்ஃபோனில் தன் நண்பர்களுடன் அரட்டையடிப்பார். 'செல்ஃபோன் ஆக்ரிஷ்' என்று பட்டப் பெயரே சூட்டிவிட்டனர் நண்பர்கள்.

செல்ஃபோனில் நண்பர்களை துரத்திய ஜாலியான இளைஞர்மீது காலனுக்கு என்ன கோபமோ, கார் விபத்து வடிவில் அவரது உயிரைக் கொத்திக்கொண்டு போய்விட்டான்.

தீராத சோகத்தில் ஆழ்ந்த ஆக்ரிஷ் குடும்பத்தினரும், நண்பர்களும் அவரது கல்லறையை செல்ஃபோன் வடிவில் பெரும் செலவில் அமைத்துள்ளனர். முழுவதும் கிரானைட் கல்லால் தத்ரூபமாக கட்டப்பட்டுள்ள சமாதியையே இங்கு காண்கிறீர்கள்.

தங்கள் மகன் செல்ஃபோனில் என்றோ ஒரு நாள் பேசுவான் என்று ஆக்ரிஷின் பெற்றோர் புலம்புவதுதான் ஈடில்லா சோகம்.

↓ இந்த கரப்பான் பூச்சியின் நீளம் 8 சென்ரி மீட்டர் (3 அங்குலம்); அகலம் 5 சென்ரி மீட்டர் (2 அங்குலம்).

எடை 35 கிராம் - (1/4 அவுன்ஸ்). இந்த எடை இரு சிட்டுக்குருவிகளின் எடைக்குச் சமமானது. அதனால் இவை உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளன. பார்த்தீர்களா, கரப்பான் பூச்சி கின்னஸையும் விட்டு வைக்கவில்லை.

படத்தில் சிறியதாக இருப்பதே சாதாரண கரப்பான் பூச்சி. ஏனைய இரண்டும்தான் பெரியவை.



# எங்கெங்கும் காணலாம்

→ கரப்பான் பூச்சி இல்லாத நாடே உலகத்தில் இல்லை என்று கூறுகிறார்கள். பார்ப்பதற்கே அருவருப்பூட்டும் இப்பூச்சியை ஒழித்துக்கட்ட-பல வகையான உபாயங்களைக் கண்டறிய ஆய்வாளர்கள் எடுத்த முயற்சிகளெல்லாம் தோல்வியில் முடிந்தன. கரப்பான் என்றும் சிரஞ்சீவியாக தன் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டே வருகிறது.

இடத்துக்கு இடம்-நாட்டுக்கு நாடு காணப்படும் கரப்பான் பூச்சி, இடத்துக்கேற்றாற்போல் தோற்றத்திலும் வர்ணத்திலும் வித்தியாசம் கொண்டவையாகவுள்ளன.

இப்பூச்சிகளில் மொத்தம் 3 ஆயிரத்தி 500 ரகங்கள் இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். இருப்பினும் மனிதர் வாழும் குடியிருப்புகளில் 20 வகை கரப்பான் பூச்சிகளே உள்ளன.

இவை மிக வேகமாக ஓடக்கூடியவை. சில ரகங்கள் குறுகிய தூரம் பறந்து செல்லக்கூடியவை. இனப்பெருக்கத்தின் வேகமும் சற்று அதிகம்தான். பகலை விட இரவு வேளைகளில்தான் இவற்றின் சஞ்சாரம் கூடுதலாக இருக்கும். எத்தகைய அழுக்குகளையும் இவை உணவாக உண்ணும். தவிர கடதாசி, சவர்க்காரம், புல் பூண்டுகள், இறந்த பிராணிகளின் சிதைவுகளையும் இவை விட்டுவைக்கமாட்டா.

அவுஸ்திரேலியாவில் குவீன்ஸ்லாந்து மாகாணத்தில் காணப்படும் இறக்கைகளற்ற கரப்பான் பூச்சி இனம் தான் உலகிலேயே பெரியது.

# பொலிஸ் ராஜ்

இயக்குநர் பி.வாசு இயக்கத்தில் சத்யராஜ் நடித்து வெள்ளிவிழா கொண்டாடிய படம் 'வால்டர் வெற்றிவேல்'.

அப்படத்தில் கண்டிப்பான போலீஸ் அதிகாரியாக நடித்திருந்தார் சத்யராஜ். தற்போது தமிழகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் 'பொன்னு வீட்டுக்காரன்' படமும் வாசு இயக்க சத்யராஜ் நடித்த படம்தான்.

'பொன்னு வீட்டுக்காரன்' நன்றாக ஓடிக்கொண்டிருப்பதால், சத்யராஜ், வாசு கூட்டணி அடுத்து ஒரு படத்தில் மறுபடி இணைகிறது.

'மலபார் போலீஸ்' என்று படத்திற்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. சத்யராஜின் ஜோடி கௌசல்யா. விஜயகுமார், மணிவண்ணன், ஆனந்தராஜ், கவுண்டமணி, ராதாரவி, மன்சூரலிகான் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை இளையராஜா.

# நசுங்கிய ரோஜா

தங்களுக்கு பிடித்தமான நடிகைகளைக் கண்டால் ரசிகர்கள் மொய்ப்பதும், தொட்டுப் பார்ப்பதும் கிள்ளுவதும் வழக்கம்.

திருப்பதிக்கு சாமி தரிசனம் செய்யச் சென்ற ரோஜாவை பக்தர்களும் விட்டுவைக்கவில்லை. கூட்ட நெரிசலில் ரோஜாவை பல கைகள் தீண்டின. எங்கெல்லாமோ தீண்டப்பட்ட ரோஜா நொந்த நூலாக திரும்பினாராம்.

அதனால் திருப்பதி பக்கம் போவதையும் நிறுத்திவிட்டாராம்.

# முரளிக்குக் கல்லெறி

முரளி வித்தியாசமான தோற்றத்தில் நடித்துவரும் படம் 'வட்டாக்குடி இரணியன்'.

இப்படத்திற்காக முரளிமீது எதிரிகள் கல்லெறியும் காட்சி படமானது. அப்போது ஒருவர் வீசிய கல் உண்மையாகவே முரளியின் கண்ணுக்கு அருகே பட்டுவிட்டது. அதனால் காயம் ஆறிய பின்னர்தான் படப்பிடிப்பு தொடர உள்ளது.

கல்லூரி மாணவனாகவும், காதல் செய்யும் இளைஞராகவும் நடித்துவந்த முரளிக்கு 'தேசிய கீதம்' படத்தின் பின்னர் வித்தியாசமான பாத்திரம் கிடைத்துள்ளது. 'வட்டாக்குடி இரணிய'னாக அசத்துகிறாராம்.

# சுற்றுலா புறப்படும் ரஜினி சுருட்டுக்கு மவுசு வருமா?

'படையப்பா' படத்திற்காக ஓய்வின்றி உழைத்த ரஜினி, படப்பிடிப்பு முடிந்து, டப்பிங் பேசியதும் பறக்கப் போகிறார். அதாவது வழக்கம்போல நீண்ட வெளிநாட்டு சுற்றுப்பயணம்.

படையப்பாவில் கறுத்த கண்ணாடி அணிந்து 'ஸ்டைலாக' சுருட்டு பற்ற வைக்கிறார் ரஜினி. இதனால் படம் வெளியான பின்னர் ரஜினி ரசிகர்களும் சுருட்டு பற்ற வைக்கப் போகிறார்கள். சுருட்டுக்கு மவுசு ஏறப்போகிறது என்று சுருட்டு உற்பத்தியாளர்கள் குஷியாக இருக்கிறார்களாம்.

படையப்பாவில் ஒரு சண்டைக் காட்சிக்காக திறந்த மார்புடன் மோதுகிறார் ரஜினி. இருபுறம் இருந்து பாயும் எதிரிகளை உதறிவிடுகிறார் ரஜினி. அப்போது சட்டை கிழிந்து போகிறது.


கிழிந்த சட்டையைக் கழற்றி ஒரு சுழற்று சுழற்றி இடுப்பில் கட்டிக்கொண்டு எதிரிகளை பந்தாடுகிறார்.

15 வருடத்திற்கு பின்னர் திறந்த மார்புடன் சண்டைக் காட்சியில் மோதுகிறார் ரஜினி.

இச்சண்டைக் காட்சியில் மூன்று கண்டெசா கார்கள், நான்கு ஜிப்சி கார்கள், இரண்டு லொறிகள் வெடித்து சிதறும் காட்சியும் படமாக்கப்பட்டது.

# இரண்டு...

மிதுன் சக்ர...
இரண்டு இந்திய ...
செண்பகா, இரண்...
இதனை அடு...
சங்கல்பம் பூண்டு ...
பார்த்து தொடங்...
செண்பகா.



கார்த்திக், ஹீரா
படம்: பூவேலி

# அதே ஜோடி

பிரசாந்த், ஐஸ்வர்யாராய் இணைந்து நடித்த படம் 'ஜீன்ஸ்'. மறுபடி அந்த ஜோடி ஒன்று சேர ஒரு சந்தர்ப்பம் தந்துள்ளார் கலைப்புலி தாணு.

'மின்சாரக் கனவு' இயக்குநர் ராஜீவ்மேனன் இயக்க, ஏ.ஆர்.ரகுமான் இசையில் இந்த ஜோடி மறுபடி சேரும் படத்திற்கு இன்னமும் பெயர் சூட்டப்படவில்லை.

மன்னவரு சின்னவரு படம் பொங்கலுக்கு வெளிவந்து ஓடிக்கொண்டிருப்பதால், அதன் தயாரிப்பாளர் கலைப்புலி தாணு புதிய தயாரிப்பில் கால் அல்லது கை வைத்திருக்கிறார்.

ஐஸ்வர்யாராய் என்றாலே பிரசாந்துக்கு புல்லரிக்கும். மறுபடி ஜோடி சேருவதில் அவருக்கு குஷிதான்.





# சூர்யா அண்ணா

இளம் நடிகர் சூர்யாவுக்கு காதல் கடிதங்கள் குவியும். உருகி உருகி ரசிகைகள் கடிதங்கள் எழுதியிருப்பார்கள். பாசக் கடிதங்களும் வருகிறதாம். அன்புள்ள அண்ணா என்று பல பெண்கள் கடிதம் எழுதியிருக்கிறார்களாம். சூர்யாவை தன் மகனாக விளித்து கடிதம் எழுதியிருக்கிறார் ஒரு பெண்மணி. மனம் உருகிப்போன சூர்யா, கடிதத்தை தன் தந்தை சிவகுமாரிடமும் காண்பித்து மகிழ்ந்தாராம்.

திரையுலக மறுபக்கம் 90

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# பின்வாங்கிய இயக்குநர் ரஜினியின் மன்னிப்பு

அதிஷ்டத்தோடு சம்பந்தப்பட்ட பெயர் கொண்ட இரண்டெழுத்து நடிகை, மூவேந்தர்களில் ஒருவரது பெயரை தன் பெயரில் பாதியாகக் கொண்ட நடிகருடன் முதல் படத்திலேயே ஐக்கியமானார்.

அந்தப் படத்தின் இயக்குநர்தான் முதலில் நடிகையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இயக்குநரின் நடவடிக்கைகள் சகிக்க முடியாதவை. நடிகையாக வேண்டும் என்பதால் இயக்குநரின் விருப்பங்களையெல்லாம் பூர்த்தி செய்தார் நடிகை.

நள்ளிரவில்கூட கார் அனுப்பி நடிகையை அழைப்பார். போகாது விட்டால் படத்திலிருந்தே தூக்கி எறிந்து விடுவார்.

தூக்கக் கலக்கத்தில் எழுந்து அலங்காரம் பண்ணிக்கொண்டு செல்ல வேண்டும். அலங்காரம் பண்ணாது சென்றால் இயக்குநருக்கு பிடிக்காது. எந்த நேரம் அழைத்தாலும், குளித்து, அலங்காரம் பண்ணி புறப்பட்டு வரணும் என்று கட்டளையே போட்டு வைத்திருந்தார்.

அந்த இயக்குநரின் பிடியில் இருந்து எப்போதடா விடுதலை கிடைக்கும் என்று தவித்த நடிகைக்கு அந்த நடிகரின் நட்பு மகிழ்ச்சி தந்தது.

நடிகையின் எடுப்பான தோற்றத்தைக் கண்டு நடிகரும் சபலப்பட்டார். நெருக்கமான காட்சிகளில் தனது எண்ணத்தையும் ஆசையையும் குறிப்பால் உணர்த்தினார்.

படப்பிடிப்பு முடிந்ததும் நடிகரின் காரிலேயே சென்றார் நடிகை. சென்னை புறநகர் பகுதியில் நடிகர் வழக்கமாகத் தங்கும் விடுதியில் அன்றிரவைக் கழித்தார் நடிகை.

தன் சோகக் கதையை நடிகரிடம் சொல்லிப் புலம்பினார். நடிகையின் நிலைமையால் ஈர்க்கப்பட்ட நடிகருக்கு நடிகையை தன் கட்டுப்பாட்டில் சில காலம் வைத்திருக்க ஆசை வந்துவிட்டது.

நடிகைக்கு தைரியம் கொடுத்தார். 'இயக்குநரைப் பற்றி கவலைப்படாதே. நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று தட்டிக் கொடுத்தார்.

மறுநாள் படப்பிடிப்பு தளத்தில், மேக்கப் அறையில் நடிகையை தனியாக சந்தித்த இயக்குநர் 'நேற்றிரவு எங்கே போனாய்' என்று கேட்டார்.

நடிகருடன் தான் தங்கியதை மறைக்காமல் கூறிய நடிகை, இயக்குநரை தூக்கி எறிந்து பேசியிருக்கிறார். இருவரும் மேக்கப் அறைக்குள் வாக்கு வாதப்பட்டது, வெளியே படப்பிடிப்புக் குழுவினருக்கும் கேட்டிருக்கிறது.

நடிகரை பகைத்துக் கொண்டால், தயாரிப்பாளர் இயக்குநரையே மாற்றிவிடுவார். அதனால் அதன் பின்னர் தன் ஆசைக்கு நடிகையைப் பணியவைக்க இயக்குநரால் முடியவில்லை.

தற்போது நடிகருக்கும் அந்த நடிகைக்குமான உறவு கசந்துவிட்டது. நடிகர் புது நடிகை ஒருவரை பிடித்திருக்கிறார். நடிகையும் புது நடிகர்கள் சிலரோடு நட்பாக இருக்கிறார்.

***

## மன்சூரின் தாக்குதல்

ரஜினிகாந்தை தாறுமாறாக விமர்சிப்பவர் மன்சூரலிகான். 'படையப்பா' படத்தில் மன்சூரலிகானுக்கும் வாய்ப்புக் கொடுத்தார் ரஜினி.

தன்னை விமர்சித்த மனோரமாவுக்கு அருணாச்சலத்தில் வாய்ப்புக் கொடுத்தவர் ரஜினி. மன்சூரலிகான் விடயத்திலும் அவ்வாறே செய்தார்.

மனோரமா தனது தவறுக்கு வருந்தினார். ஆனால் மன்சூரலிகான் வருந்தவில்லை.

'படையப்பாவில் ரஜினியை தூக்கி நிறுத்துவதே என் பாத்திரம்தான். என்னால் மட்டும்தான் அந்தப் பாத்திரத்தில் நடிக்க முடியும் என்று அழைத்தனர். நடித்தேன். இப்போதும் கூறுகிறேன். ரஜினி அரசியலுக்கு இலாய்க்கில்லை" என்று கூறித்திரிகிறார் மன்சூரலிகான்.

'மன்சூரலிகான் நடித்த காட்சிகளை வெட்டி எறிந்துவிட்டு வேறு நடிகரை வைத்து அக்காட்சிகளை எடுக்கலாம்' என்று ரஜினியிடம் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் கேட்டாராம். ரஜினி இதுவரை பதிலேதும் சொல்லவில்லையாம்.

# நான்கு வருடம் நடந்த படப்பிடிப்பு

'இசைப்பயணம்' என்று பெயர் வைத்த ராசியோ என்னவோ நான்கு வருடங்களாக படப்பிடிப்பு நடந்திருக்கிறது.

'சூர்யோதயம்' என்ற பெயரை மாற்றியும் படம் வெளிவந்த பாடில்லை. இப்போதுதான் ஒரு விதமாக ஒப்பேற்றியிருக்கிறார்கள்.

விஜயசாந்தி துப்பறியும் அதிகாரியாக நடிக்கிறார். அவரை நடிக்க வைக்கவே இத்தனை தாமதம்.

நாட்டில் குண்டு வைத்து நாசம் செய்ய நினைக்கிறது ஒரு குழு. உலகில் எந்த மூலையில் குண்டு வெடித்தாலும், அதை இருந்த இடத்தில் இருந்தபடியே வெடிக்காமல் செய்யக்கூடிய முறையொன்றை கண்டு பிடிக்கிறார் ஒரு விஞ்ஞானி.

அந்த விஞ்ஞானியை ஒழித்துக் கட்ட துரத்துகிறது வில்லன் கோஷ்டி. இலங்கை, ரசியா போன்ற நாடுகளுக்கு விஞ்ஞானி ஓடுகிறார். வில்லன் கோஷ்டியும் போகிறது.

விஞ்ஞானியை காப்பாற்ற களம் புகும் விஜயசாந்தி அதிரடி சண்டைக் காட்சிகளில் தான் கிளப்புகிறார்.

இதற்கிடையே இசைக்குழு ஒன்றும் உலகம் சுற்றுகிறது. அந்தக் குழுவில்தான் ரகுமான், இலங்கை, ரசிய அழகிகள் ஆகியோர் இருக்கின்றனர்.

விரைவில் திரைக்கு வரவிருக்கிறது. இப்படம் இலங்கை, இந்திய, ரசிய கூட்டுத்தயாரிப்பு.

# விபரீதமான பெயர்

'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி', 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்று பெயர்கள் சூட்டப்படுவது அக்கால வழக்கம்.

தற்காலத்திலும் அப்படியான பெயர் சூட்டல்கள் உண்டு. புதிய படம் ஒன்றுக்கு சற்று விபரீதமான பெயர் ஒன்றை சூட்டியுள்ளனர். என்ன பெயர் தெரியுமா? 'அருணாச்சலமும் நாற்பது பெண்களும்'.

# மன்னவரு சின்னவரு

'மன்னவரு-சின்னவரு' நம்நாட்டில் சின்னத்திரையில் வந்துவிட்டது. கமரா கொப்பிகள்தான் வந்துள்ளன.

படத்தில் சிறப்பாக குறிப்பிடும்படி இருப்பது சிவாஜியின் நடிப்பு மட்டுமே. பத்தாம் பசலியான கதை.

கணவன் எப்படி எடுத்தெறிந்து அவமானப்படுத்தினாலும் மனைவி அடங்கிப்போக வேண்டும் என்று முடிக்கிறார்கள்.

படித்த பெண் சௌந்தர்யா. படிப்புக் குறைந்த கணவர் அர்ஜுன். இருவரும் காதலித்து கல்யாணம் செய்கிறார்கள். தன் கணவர்மீது உயிரையே வைத்திருக்கிறார் சௌந்தர்யா. ஆனால் தாழ்வு மனப்பான்மையால் சௌந்தர்யாவை விட்டு விலகிப்போகிறார் அர்ஜுன்.

தவறு முழுக்க அர்ஜுன்மீது இருக்கும்போது, சிவாஜியும், விசுவும் சௌந்தர்யாவுக்கே மாறி மாறி போதிக்கிறார்கள். இறுதியில் அர்ஜுன் காலில் சௌந்தர்யா விழுந்து மன்னிப்பு கோருகிறார். அதன்பின்னர் அர்ஜுனும் மன்னிப்பு கோருகிறார்.

நகைச்சுவை என்ற பெயரில் ஆர்.சுந்தர்ராஜன் மனைவியை அடிக்கடி கன்னத்தில் அறைந்து கொண்டு திரிகிறார். அந்த ஊரில் உள்ள கணவர்மாரையும் மனைவிமாருக்கு கன்னத்தில் அறைய வைக்கிறார். மிக மோசமான நகைச்சுவை, திரைக்கதை வசனம் பலவீனமான படம்.

## ...டும் வெற்றி

...ரவாத்தியின் சிபாரிசில் ...படங்களில் நடித்துள்ளார் ...டும் வெற்றி பெற்றுள்ளன. ...த்து இந்தியில் காதுான்ற ...புளியங் கொப்புகளைக் ...க் கொண்டிருக்கிறார்

## முத்துவுக்கு கிழியல்

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய நூல் ஒன்றை அறந்தை நாராயணன் வெளியிட்டார். வெளியீட்டு விழாவுக்கு கவிஞர் வைரமுத்துவை அழைத்திருந்தனர். 'என் பாக்யம் இது. கண்டிப்பாக வருகிறேன்' என்றாராம். பின்னர் சில நாள் சென்று வெளியீட்டு விழா திகதியை மாற்றுமாறு கேட்டாராம். மாற்ற மறுத்துவிட்டனர் விழாக்குழுவினர்.

நூல் வெளியீட்டு விழாவிற்கு வைரமுத்து வரவில்லை. அவரை கிழிகிழி என்று கிழித்து விட்டார் எழுத்தாளர் அறந்தை நாராயணன்.

## காதோடு சொல்லுகிறோம்

சன் ரீவியில் பிரபலமானவர் விஜய் ஆதிராஜ். 'பொன்னு வீட்டுக்காரன்' மூலம் சினிமாவில் நுழைந்திருக்கிறார். அப்படத்தில் நடிக்கும்போது நட்சத்திரத் தம்பதி வீட்டுக்கு அடிக்கடி போய்வந்தாராம். தன்னுடன் ஜோடியாக நடித்த ப்ரீதமானவரின் அக்காவுடன் ஐக்கியமாகிவிட்டாராம் ஆதிராஜ்.

குமார நடிகருக்கு முதுகுவலி மறுபடி எடுத்ததால் மீண்டும் சிகிச்சைக்கு சென்றுள்ளார். இம்முறையும் ஹீர நாயகி கூடவே சென்றிருக்கிறார். இவரும் கூடச் சென்றால் முதுகுவலி கூடுமே தவிர குறையாது என்கிறது கோடம்பாக்கம் வட்டாரம்.

ஐந்தெழுத்து 'சல்' நடிகைக்கு இளம் நாயகர்கள் பலர் வலை வீசினர். பக்குவமாக நழுவினார். இப்போது உயர நடிகரும் 'சல்' நடிகையுடன் பழக விரும்பி, அவரை தன் படத்தில் சிபாரிசு செய்திருக்கிறார்.

அதிரடி சாந்தி நடிகை தன் திருமண விடயத்தை பகிரங்கமாக அறிவிக்கப்போகிறாராம். பதினைந்து வருடமாக அறிவிக்காமல் இருந்து வருகிறார். இதற்கிடையே தனது ஊதியத்தையும் அறுபது லகரமாக உயர்த்திவிட்டார்.

குரு பார்வை தன்மீது பட்டதால் வாய்ப்புக்கள் பல பெற்றுள்ள அந்த நடிகர் குட்டி நடிகைகளையும் விட்டுவைப்பதில்லை. இப்போது முன்னணி நாயகனாகிவிட்டதால் முன்னணி நடிகைகள் தேடுகிறாராம். அவர்களையே ஜோடியாகப் போடுமாறும் நச்சரிக்கிறாராம்.

ரமில் 'ரா' நடிகைக்கு படப்பிடிப்பில் காயம் ஏற்பட்டது. சக்கர நாற்காலியில் இருந்த நடிகை, இப்போது நடைப்பயிற்சி பெறுகிறார். பயிற்சி கொடுப்பவர் நாட்டியப் பேரொளியின் பெயருடன் குட்டியை இணைத்துக் கொண்ட நடிகையின் கணவராம். அவரது தோளைப் பற்றித்தான் நடைப்பயிற்சி பெறுகிறார் ரமில் நடிகை.

## சிம்ரானின் முதல் காதலன்

நடன இயக்குநரும், நடிகருமான ராஜு சுந்தரத்தை சிம்ரான் காதலிப்பது தெரிந்த சமாச்சாரம்.

சிம்ரான் கருக்கலைப்பு செய்து கொண்டதாகவும், அதன் பின்னர் தற்போது எச்சரிக்கையாக இருப்பதாகவும் தமிழக சினிமா இதழ்களில் செய்திகள் வந்தன.

சிம்ரானை திருமணம் செய்ய ராஜு சுந்தரத்தின் தந்தை சுந்தரம் அனுமதிக்க மாட்டார்.

பிரபு தேவாவின் காதலையும் எதிர்த்தவர் சுந்தரம். அதனையும்மீறி நடன நடிகை ரம்லத்தை மணந்துகொண்டார் பிரபு தேவா.

பிரபு தேவா போல் தந்தையை எதிர்த்து சிம்ரானை கைப்பிடிக்க ராஜுசுந்தரம் துணிவாரா தெரியவில்லை. அதனால்தான் ராஜு சுந்தரத்துடன் உள்ள நெருக்கத்தை மறைத்து வருகிறார் சிம்ரான்.


'ராஜு சுந்தரத்தை நீங்கள் நேசிக்கிறீர்களா?' என்று கேட்டதற்கு சிம்ரான் கூறிய பதில்;

"நான் எல்லோரையும் நேசிக்கிறேன். எல்லோரையும்விட சினிமாவை நேசிக்கிறேன். என் முதல் காதலன் சினிமாதான். எனக்கு இப்போது எல்லாமே சினிமாதான்."

## ஈடு கொடுக்கிறார்

'ராசய்யா' படத்திற்கு இளையராஜா இசையமைத்திருந்தார். படம் சரியாகப் போகவில்லை. பிரபுதேவாவின் வேகத்திற்கு இளையராஜா ஈடு கொடுக்கவில்லை என்று பேச்சு அடிபட்டது. அந்தப் பேச்சை மூச்சு இல்லாமல் செய்ய 'டைம்' படத்திற்கு படு சிரத்தையாக இசையமைக்கிறார் இளையராஜா.

## சினி விசிட்





## தமிழ்க் குமா

## ஜோடி ஆட்டம்

மான் வேட்டையில் மாட்டிய சல்மான்கான் பெண்மான் வேட்டையிலும் கில்லாடி.

கரிஷ்மா கபூரும் சல்மான்கானும் டிஸ்கோ விடுதி ஒன்றில் ஒன்றாக காணப்பட்டனர். இருவரும் இணைந்து ஆடிப்பாடி அங்கு வந்திருந்தவர்களை மகிழ்வித்தனர்.

நாங்கள் இருவரும் உங்கள் முன்பாக இப்படி ஜாலியாக ஆடிப்பாடுவதால், எங்களுக்குள் முடிச்சுப் போட்டுவிடாதீர்கள். நாங்கள் நண்பர்கள் மட்டும்தான் என்று கண்ணடித்தாராம் சல்மான்கான்.

கரிஷ்மாகபூரின் வளைவு, நெளிவான ஆட்டம் டிஸ்கோ ஆட வந்த இளைஞர்களுக்கு கிறக்கத்தை ஏற்படுத்தியதாம். அவர்களில் சிலருடன் மட்டும் ஜோடி சேர்ந்து ஆடி மகிழ்வித்தார் கரிஷ்மாகபூர்.

அந்த டிஸ்கோ முடிந்ததும் சல்மானும், கரிஷ்மாவும் ஒன்றாய்த்தான் கிளம்பிப் போனார்களாம். எங்கு போனார்களோ?!



விவிங்ஸ்டன்-அனுஷா
படம்: உனக்கும் எனக்கும் கல்யாணம்

## மினி சினி

- 'தலைமுறை' படத்தில் இணைந்து நடித்த ராஜ்கிரண்-ரேவதி ஜோடி மறுபடியும் புதிய படமொன்றில் இணையவுள்ளது. இப்படத்தை ராஜ்கிரணே இயக்குகிறார்.
- மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன், ஏ.ஆர்.ரகுமானின் இசையில் பாடலொன்றைப் பாடுகிறார். இப்பாடல் 'சங்கமம்' படத்தில் இடம்பெறுகிறது.
- 'நாளைய தீர்ப்பு' படத்தில் விஜயை அறிமுகமாக்கிய எஸ்.ஏ.சந்திரசேகரன், இப்போது இயக்கிவரும் 'பெரியண்ணா' படத்தில் வைஜயந்தியின் தங்கை மானஸாவை நாயகியாக்கியுள்ளார்.
- 'பிரம்மா', 'பங்காளி' போன்ற படங்களை சத்யராஜை வைத்து இயக்கிய கே.சுபாஷ், விரைவில் சத்யராஜ் நடிக்கும் புதிய படமொன்றை இயக்கவுள்ளார்.
- 'மோனிஷா என் மோனாலிஸா' படத்தில் இடம்பெறும் பாடல் ஒன்றைப் பாடிய சிலம்பரசன், இவரே இந்தப்பாடலுக்கு நடனமும் ஆடியுள்ளார்.
- 'ரட்சகன்' பட இயக்குநர் பிரவீன் காந்த் இயக்கத்தில் பிரசாந்த் நடிக்கவிருக்கும் புதிய படத்தில் நாயகியாக நடிக்க ப்ரீத்தி ஸிந்தாவை அணுகியுள்ளனர்.
- தனது மகன் மனோஜை 'தாஜ் மஹால்' படத்தின் நாயகனாக அறிமுகப்படுத்தும் பாரதிராஜா, மனோஜின் பெயரை சினிமாவுக்காக மாற்றி வைக்கப்போகிறார்.
- விஜயகாந்த்-பானுப்பிரியா ஜோடியாக நடித்த 'பரதன்' படம் கன்னடத்தில் தயாராகி வருகிறது. தமிழில் வில்லனாக ஆனந்தராஜ் நடித்த வேடத்தில் கன்னடத்தில் நடிப்பவர் தியாகராஜன்.
- 'குருபார்வை' படத்தை தந்த மனோஜ்குமார்-பிரகாஷ்ராஜ் கூட்டணி மறுபடி இணையும் படம் 'சூரியகுமாரன்'. இதில் குஷ்புவும் ரேவதியும் பிரகாஷ்ராஜிற்கு ஜோடிகள்.
- சேரனின் 'என் இனிய காதலர்களே' படத்தில் முக்கிய வேடமொன்றில் சேரன் நடிப்பது தெரிந்ததே. இந்த வேடத்தில் நடிக்க முதலில் பார்த்திபனைத்தான் கேட்டார்களாம்.

## மூன்று படங்கள்

பொங்கல் படங்களின் வருகைக்கு பின்னரும் 'பூவேலி' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இப்படத்தை இயக்கியிருப்பவர் செல்வா. 'பூவேலி' தயாரிப்பாளரின் தலையில் வசூல் மழை பொழிவதால், செல்வாவை நாடுகிறார்கள் தயாரிப்பாளர்கள்.

ஒரே தருணத்தில் மூன்று படங்களை ஒப்புக்கொண்டுள்ளார் செல்வா. ஒரு படத்தில் அர்ஜுன், ஜோதிகா ஆகியோர் நடிக்கின்றனர். இன்னொரு படத்தில் பிரசாந்த், கௌசல்யா நடிக்கின்றனர்.

'பூவேலி' படத்தைத் தயாரித்த பாலச்சந்தரின் பட நிறுவனமான கவிதாலயாவும் மறுபடி செல்வா இயக்கும் படமொன்றை தயாரிக்கவுள்ளது.

**முகப்பில்**

லைலா

படம்: கள்ளழகர்

**சிம்ரான்**

# புகழ்ச்சிக்குப் பலியாகாதே!

தமிழரின் உரிமை யின்றேல்
தனித் தமிழ் நாடேயென்று
எழுபத்தியேழில் சொல்லி,
இன வெறியூட்டி; பின்னர்
தமிழினக் கொலையின்போது
தலை மறைவானோர்கூட
அழுதிட வருவாருன்முன்;
அன்புடன் வாக்குக் கேட்பார்!
–••–
மாண்டவர் பெயரைச் சொல்லி
வாக்குகள் கேட்கும் விந்தை,
ஆண்டவனறிய இந்த
அவனியில் வேறெங்குண்டு?
பாண்டவர் வனவாசம் போல்
பதினொரு ஆண்டின் பின்னே
மீண்டவர் கூடவந்து
வீரராய்க் களத்தில் நிற்பார்!

இனத்துக்குச் சேவை செய்ய
இருக்கின்ற ஆசையாலே,
களத்துக்கு வந்தவர் நாம்;
காசுக்கு– பணத்துக்கல்ல;
அனைத்துக்கும் மேலாய் இன்று
அகதிகளானோர்க்குள்ள
மனச் சுமை தன்னைப் போக்கி
வாழ்விக்க வந்தோ மென்பார்!
–••–
சந்தர்ப்ப சூழலாலே
தலைவர்கள் ஆனோர்கூட,
பந்திக்கு முந்துவார்கள்;
பதவியும் உன்னைத் தேடும்;
சந்திக்குச் சந்தி நின்று
தலைக்குமேல் இருகை தூக்கி
வந்திப்பர்– உன்னை; ஈடாய்
வாக்குக்கு விலையும் வைப்பர்!
–••–
வாக்கெனும் மந்திரக்கோல்
வழங்கிடும் பதவிக்காக
காக்கையைக் குயிலாய்க் காட்டும்
கயவர்கள் வருவார் தேடி;
சாக்கடைத் தொழிலுக்காக
தன் இன மானம் விற்போர்
பூக்கடைவிரிப்பாருன்முன்
புகழ்ச்சிக்குப் பலியாகதே!

வீ.எம்.சுந்தரம், களுவாஞ்சிகுடி.

# சுருக்குக் கொடி


என் வாலிப வீதியில்–நீ
நடந்து போன தடயங்கள்
இன்னும்
மாற்றங்கள் ஏதுமின்றி
அப்படியேதான்....!
★★
உன் நினைவுகளுடன்
உமிழ்நீர் விழுங்கியே
பசி விரட்டி
வாழ்ந்த நாட்கள்,
என் பழைய பதிவேட்டில்
படபடக்கும்
சந்தோஷப் பக்கங்களாக....!
★★
எனக்குள்
வேர்விட்டுப் போயிருக்கும்
உன் ஞாபகக் கொடிகளின்
பின்னல்–என்
கழுத்துவரை வளர்ந்து
சுருக்காக இறுக்கிக்
கொண்டிருக்கிறது!
★★
முளைவிடத் தொடங்கிய
என் வசந்தங்களுக்கு
ஒத்தடமிட்ட
அதே கைகள், எப்படி
ரணங்களுக்கு
உப்புத்தூவத் துணிந்தன?
★★
என் சுவாசக் காற்றில்
இன்றைக்கும்
ஒட்சிசனைவிட
உனக்குத்தான்
அதிகப் பங்கு!
★★
வெந் நீரில் இட்ட
சுண்ணாம்புக்
கல்லாக
தளதளத்துக்
கொதிக்கும்
இதயத்தோடாயினும்..
இன்னும், நான்
உயிர் வாழ்வது
அதனால்தான்!

பர்ஸான், யடவத்த, நிகெகொள்ள.

# இயற்கையின் சதி



கொலம்பியாவில் ஆர்மோனியா நகரில் எற்பட்ட பூகம்பத்தில் இரண்டாயிரம் பேர் பலியாகியுள்ளனர். இந்தக் கோரச் சம்பவத்தில் தம் உற்றார் உறவினரை பறிகொடுத்துக் கதறி அழுவோரில் ஒரு பகுதியினரே இவர்கள். இயற்கையின் சதியில் கருகிப்போயின இரண்டாயிரம் உயிர்ப்பூக்கள் யாரை நோவது?



பூகம்பத்தின் பின்னர் தப்பியவர்களுக்கு உண்ண உணவில்லை. மிஞ்சியிருந்த கடைகளை உடைத்து உள்ளே புகுகிறார்கள். பசி வந்தால் பத்தும் பறந்துபோகும். கடைகளும் தகர்ந்து போகும்.




பல்பொருள் அங்காடி ஒன்றை உடைத்துப் புகுந்த மக்கள், அங்கிருந்த பொருட்களைக் கைப்பற்றிக்கொண்டு செல்கிறார்கள். சூறையாடிய பொருட்களை எவ்வித தயக்கமும் இன்றி கைவண்டியில் எடுத்துச் செல்கிறார் ஒருவர்.

# என்னவளே அடி என்னவளே....!

நிலவினை அழைத்து
நில்லென்று உரைத்து
பெண்ணே உனக்கொரு
தூளி செய்வேன்!
••
மயக்கத்தில் மாது
மலர்கின்ற போது
சொர்க்கம் வரை உன்னை
கூட்டிச்செல்வேன்!
••
அழகிய மயிலே
ஆனந்தக் குயிலே
உனக்கென்று நானே உயிர்த்திருப்பேன்;
விடிகின்ற வரையில்
கொடியிடை உன்னை
கொஞ்சும் தமிழில்
கவி வடிப்பேன்!
••
கதிரவன் விழித்து
கண் சிமிட்டும் போது
பூ விழி இரண்டையும் விழித்திட வைத்து
புன்னகையால் உன்னை குளிக்க வைப்பேன்;
அதன் பின்பு நானே
ஆசிகள் கொடுத்து
மண் மீது உன்னை
மலரச் செய்வேன்!
••
பூ மகள் உன்னை
புழுதிகள் படாமல்
தென்றலைத் தூதாய் அனுப்பி வைப்பேன்!
கண்மணி உனக்கு கண் படுமென்று
கரு முகில் கொண்டு திருஷ்டி செய்வேன்!
••

திருமலை–
தாமரைமகன்.



# தேன் கிண்ணம்

# இதுதான் காதல் என்பதா?

கண்ணும் கண்ணும் கொள்ளையடிப்பதா?
கற்றவர் கண்டு கருத்துரைப்பதா?
உன்னையே கண்டேன்; உன்னையே
கட்டுவேன் என்பதா?
ஆயிரத்தில் ஒருத்தி நீ–ஆயுள்வரை
என்னுடன் வாழ் என்பதா?
கனவினில் வந்தாய் கல்யாணப்
பந்தல் வரை வா என்பதா?
சிரித்துச் சிரித்து என்னை சிதறடித்தாய்–சீவியம்
முழக்க உன்னை சிறையெடுப்பேனென்பதா?
கண்ணோடு கண்டேன்; உன்னை கனடா
வந்தாலும் மறவேன் என்பதா?

அ.அமுதா, யோர்க், ஒன்ற், ரொறன்ரோ.

# மௌனங்கள்

காற்று மௌனித்தால்
பூமிக்குப் புழுக்கம்;
கடலலை மௌனித்தால்
நிலவுக்குக் கலக்கம்;
மூச்சு மௌனித்தால்
உயிருக்கு உறக்கம்;
மோகம் மௌனித்தால்
இளமைக்கு நடுக்கம்;
கூட்டம் மௌனித்தால்–பேசும்
குரலுக்கு(ள்) குதர்க்கம்;
கொள்கை மௌனித்தால்
குறிக்கோளுக்குத் தயக்கம்;
சட்டம் மௌனித்தால்
நீதிக்கு மயக்கம்;
சபலம் மௌனித்தால்
முதுமைக்கு ஒழுக்கம்!

சாவ.எஸ்.கோணேஸ்.

# பேனா நண்பர்கள்



பெயர்: எம். முகமட் ஸா
வயது: 21
முகவரி: 61 பி/6 சி மாவடி வீதி, பெரியநீலாவணை, மருதமுனை.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.



பெயர்: ஜே. வதனி,
வயது: 21
முகவரி: சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை.
பொழுது போக்கு: வழமையானவை.

# நில்– கவனி– முன்னேறு





உங்கள் நண்பர்கள் உங்களை விரும்புகிறார்களா? சுற்றுவட்டாரத்தில் உங்கள் பிரபலம் எப்படி? உங்கள் பிரபலத்தை நீங்களே சோதனை செய்து கொள்ளவேண்டுமா?


இதோ இங்குள்ள பதினைந்து கேள்விகளுக்கும் 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற உங்கள் பதிலை தனியே எழுதி வைத்துக் கொண்டு சரியான விடைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். என்ன தயாரா?

*கேள்விகள் இவைதான்:*

1. உங்கள் கருத்துக்களை சுதந்திரமாக யாரைப் பற்றியும் கவலைப்படாமல்–பளீரென்று சொல்வீர்களா?
   ஆம்/ இல்லை
2. உங்கள் நண்பர்கள் இடையே நீங்கள் உயர்ந்தவர் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படுவதுண்டா?
   ஆம்/ இல்லை
3. தனியாக உட்கார்ந்து உணவு அருந்துவது உங்களுக்குப் பிடிக்குமா?
   ஆம்/ இல்லை
4. பயங்கரக்கொலை பற்றிய கதைகளை நீங்கள் விரும்பிப் படிப்பதுண்டா?
   ஆம்/ இல்லை
5. இம்மாதிரி சுயசோதனைகளில் உங்களுக்கு ஆர்வம் உண்டா?
   ஆம்/ இல்லை
6. உங்களுடைய பிரச்சனைகள், இலட்சியங்கள் பற்றி பிறரிடமும் பேசுவதுண்டா?
   ஆம்/ இல்லை
7. அடிக்கடி கடன் வாங்கும் பழக்கமுண்டா?
   ஆம்/ இல்லை
8. ஏழு பேருக்கு மேல் உள்ள கூட்டம் என்றால் உங்களுக்குப் பிடிக்காதா?
   ஆம்/ இல்லை
9. நடந்த நிகழ்ச்சியொன்றைக் கூறும் போது ஒன்று விடாமல் துல்லியமாக வர்ணிப்பதுண்டா?
   ஆம்/ இல்லை
10. செலவைப் பற்றிக் கவலைப் படாமல் விருந்தோம்பல், கேளிக்கைகளுக்குச் செலவிடுவதுண்டா?
   ஆம்/ இல்லை
11. உங்களைத் தேடி வருபவர்களைக் காக்க வைத்து அதில் மகிழ்ச்சி அடைபவரா?
   ஆம்/ இல்லை



12. குழந்தைகளைக் கண்டால் பிடிக்குமா?
   ஆம்/ இல்லை
13. நீங்கள் 'ஒளிவு மறைவற்ற அப்பாவி' என்று உங்களை நீங்களே கூறிப் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டா?
   ஆம்/ இல்லை
14. அடிக்கடி ஜோக் அடிப்பீர்களா?
   ஆம்/ இல்லை
15. நடுத்தர வயதுக்காரர்கள் காதலிப்பது வெட்கக் கேடானது என்று கருதுவீர்களா?
   ஆம்/ இல்லை



*சரியான விடைகள்:*

1,2,3,7,8,9,11,13,14,15 : இல்லை.
4,5,6,10,13.... ஆம்.

இதில் 15க்கும் விடை 'ஆம்' என்றால் நீங்கள் ரொம்பப் பிரபலம். 10க்கு விடை 'ஆம்' என்றால் பிரபலமாகி வருகிறீர்கள். 6க்கும் கீழ், 'ஆம்' என்றால் நீங்கள் பிரபலமாக முயலுங்கள்.

நீங்கள் சுயசோதனையில் வாங்கிய புள்ளிகள் எவ்வளவு? என்று தானே கேட்கிறீர்கள்?

அது கிடக்கட்டும்.... உங்களுக்குப் புள்ளி போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்!

# அழகுக்கு அழகு எது?

அழகுக்கு அழகு செய்பவர்கள் யார்? பெண்கள்தான்!

அலங்கரித்துக் கொள்வது என்பதே ஒரு தனிக்கலைதான். நகை அலங்காரத்தைப் பற்றிய என் பொதுவான சொந்தக் கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.



படப்பிடிப்பு இல்லாத நேரங்களில், வீட்டில் இருக்கும் போது, ஒரு குன்றுமணி கூட என் உடலில் பார்க்க முடியாது. வெளியே புறப் படும்போதுதான் நகைகளை அணிவேன்.

ஆடைகள் எவ்வளவுக்கு எவ்வளவு எளிமையாக அணிகிறேனோ, அவ்வளவுக்கு அவ்வளவு நகைகளைச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்து அணிவேன். விலையுயர்ந்த புடவை, ரவிக்கை அணிந்தால் எளிமையான நகைகளை அணிவேன். மாலை நேரங்களில் பலரும் கூடும் பொது நிகழ்ச்சிகளுக்குச் செல்ல எடுப்பான நகைகள் வைரங்களும், முத்துக்களும், கனமான தங்க நகைகளும்தான்.

நவரத்தினங்கள் எனப்படும் ஒன்பது ரகக் கற்களினால் செய்யப்பட்ட நகைகள்தான் என்னுடைய விருப்பமான நகைகள். நவரத்தின நெக்லஸ், காதணி, கை வளையல், மோதிரம் இவற்றை செட்டாக நான் வைத்திருக்கிறேன். நவரத்தினங்களுக்கு அடுத்தபடியாக பச்சைக் கற்களில் எனக்குத் தனியானதோர் விருப்பம் உண்டு.

'அடிமைப் பெண்' வெளிப்புறப் படப்பிடிப்புக்காக நான் ஜெய்ப்பூர் சென்றிருந்த போது, ஜெய்ப்பூரின் பிரசித்தி பெற்ற பச்சைக் கற்களில் செய்யப்பட்ட நகைகளை ஒரு செட் வாங்கினேன். (பச்சைக் கல் நெக்லஸ், காதணி, வளையல், மோதிரம் அடங்கியது)

ஜெய்ப்பூர் பச்சைக் கல் விலையுயர்ந்தது. ஆனால் பார்வைக்கு எடுப்பாகத் தெரியாது.

சாதாரணமாக நான் மேடையில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றால் தங்க ஒட்டியாணம், வங்கி, ஜடை பில்லை, வைர மாட்டல், காலில் வெள்ளிக் கொலுசு இவற்றை அணிந்து கொள்வேன்.

நான் நடித்த படங்களிலேயே 'அடிமைப் பெண்' படத்தில்தான் விலையுயர்ந்த உடைகளையும், அதிக பணச்செலவில் வாங்கிய ஆபரணங்களையும் அணிந்துகொண்டு பவளவல்லி என்ற வேடத்தில் நடித்தேன்.

மோதிரங்களைத் தினுசு தினுசாகச் செய்து சேகரிப்பதில் நான் ஒரு தனிப் பைத்தியம். எவ்வளவு டிசைன்கள் உண்டோ, அவ்வளவையும் போட்டுவிட வேண்டும் என்று ஆசைப்படுபவள் நான். மோதிர வகையில் ஒரு பெரிய கலெக்ஷன் என்னிடம் இருக்கிறது.

இந்த நகைகளை எல்லாம் மிஞ்சும் நகை ஒன்று உண்டு. 'அவ்வையார்' படத்தில் கே.பி. சுந்தராம்பாள் பாடிய பாட்டைத்தான் நான் சொல்கிறேன்.

"பொறுமை எனும் நகை அணிந்து பெருமை கொள்ள வேண்டும்-பெண்கள்."

இப்படி அவ்வையார் கூறும் நகைகளை எப்போதும் அணிய விரும்புபவர்களில் நானும் ஒருத்தி. நகைகளிலேயே விலை உயர்ந்த நகை இதுதான்.'

(1969ல் ஜெயலலிதாவின் ஒரு பேட்டியில் இருந்து)

# தங்கமாலைப் பரிசுப்போட்டி அதிஷ்டசாலிகள்

முரசு—அம்மன் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கிய தங்கமாலைப் பரிசுப் போட்டியில் முதல் மூன்று பரிசுகளான தங்கமாலை, தங்க மோதிரம், சமையல் அடுப்பு போன்றவற்றை பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரங்களை அறிய ஆவலாக இருப்பீர்கள்.

**அந்த சூப்பர் அதிஷ்டசாலிகளின் விபரங்கள் அடுத்தவாரம் அறிவிக்கப்படும்.**

ஆறுதல் பரிசுபெறும் 50 அதிஷ்டசாலிகளில் கடந்த வாரங்களில் 40 பேரின் விவரங்கள் தந்தோம். கடைசி 10 பேரின் பெயர் விவரம் பின்வருமாறு:

41. எ.ஃப். ரஸ்மியா
இல. 415/55, ஜும்மா மஸ்ஜித் ரோட், மாளிகாவத்தை, கொழும்பு-10.

42. இரஜனி இராஜரட்ணம்
இல. 45, பிரதான வீதி, பண்டாரவளை.

43 செ. மரியசீலி,
'நியூ சீலன்'புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

44. ஜெகநாதன் ராணி,
பிரதான வீதி, விடத்தல் தீவு, மன்னார்.

45. டி. புஸ்பராணி,
இல.06, அலகொலதெனிய வீதி, மல்கடுவாவ, குருணாகல்.

46. திருமதி அனற் இராஜகுமார்,
அனற் அகம், கடற்கரை வீதி, பருத்தித்துறை.

47. ஆர். றஜீவா,
பெரிய கொலனி, ஆண்டி முனை, உடப்பு.

48. கமலாதேவி,
கடற்கரைவீதி, வட்டவாள், வாழைச்சேனை.

49. திருமதி பௌசியா ஹனீபா
இல. 26 பண்டாரநாயக்கா டவுன், ஹற்றன்.

50. ஜெஸீமா நஸார்,
34- ஜெயந்தி மாவத்தை,
அநுராதபுரம்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FF

பெயர்:.......................
முகவரி:.......................
.......................
தொழில்:.......................
கையொப்பம்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 20-02-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 74

புவனா

டாக்டர் ஹஸ்னற் கானை டயானா தன் மாளிகைக்கு அழைத்திருந்தார்.

முன்னரும் கென்சிங்டன் மாளிகையில் டயானா அவருக்கு விருந்து கொடுத்தபோதும், தற்போது டயானா விடுத்த அழைப்பில் முன்பிருந்ததைவிட நெருக்கம் அதிகமிருந்தது.

டாக்டருக்கு டயானாவின் அழைப்பு இனிப்பாகவிருந்தது.

மாளிகையில் இருக்கும் பணியாட்களை டயானா வீட்டுக்கு அனுப்பிவிட்டே, டாக்டருக்கான விருந்தை ஏற்பாடு செய்வார். ஆனாலும் தனது சமையற்காரரான போல் பரல் என்பவரை மட்டும் வீட்டுக்கு அனுப்பமாட்டார். டயானாவின் நம்பகமான சமையற்காரர் போல் பரல், வாய்க்கு உருசியாக சமைப்பதிலும் கெட்டிக்காரர்.



அவரது கைப்பக்குவத்தை டாக்டரிடமும் கூறிப் புகழ்ந்தார் டயானா.

டாக்டருக்கும் போல் பரலின் சமையல் பிடித்திருந்தது. "இதற்காகவே தினமும் இங்கு வரவேண்டியிருக்கும்..." என்றார் டாக்டர்.

சமையற்காரரான போல் பரலுக்கு டயானாவின் பலம்-பலவீனம் எல்லாம் தெரியும்.

டாக்டருக்கும் டயானாவுக்கும் இடையே ஏற்பட்ட நெருக்கத்தை முதன் முதலில் அறிந்து கொண்டவர் சமையற்காரர்தான்.

தன் எஜமானியம்மா சந்தோசமாக இருக்கவேண்டும் என்று தினமும் பிரார்த்திப்பவர் அவர்.

எஜமானியம்மா டாக்டரை விருந்துக்கு அழைக்கிறார் என்றால், மிகவும் வேண்டப்பட்டவராகவே இருப்பார் என்று ஊகித்து, தடபுடலாகச் சமைத்துப் பரிமாறினார்.

பணியாளர்கள் யாரும் இல்லையென்பதால் டயானாவுக்கு உதவியாக சமையற்காரரே பரிமாற வேண்டியிருந்தது.

டயானாவும், டாக்டரும் சிரித்துச் சிரித்துப் பேசியபடி உணவருந்தினர்.

தன் எஜமானியம்மா நீண்ட நாட்களின் பின்னர் உணவை உருசித்துச் சாப்பிடுவதைப் பார்த்தார் சமையற்காரர்; அவருக்கு மனம் குளிர்ந்தது.

உணவருந்தி முடிந்ததும் சமையற்காரர் கீழே சென்றுவிட்டார்.

அதன்பின்னர் டயானாவும், டாக்டரும் நள்ளிரவு தாண்டியும் சிரித்துப் பேசியபடியே இருந்தனர்.

"இன்று நான் மிகவும் சந்தோசமாக இருக்கிறேன்!" என்றார் டயானா.

"நானும்தான்!" என்றார் டாக்டர்.

நள்ளிரவின் பின்னர் டயானாவும், டாக்டரும் எத்தனை நேரம்தான் பேசிக்கொண்டிருந்தனர் என்பது சமையற்காரருக்குத் தெரியாது. அவர் தூங்கிப்போனார்.

அதிகாலையில் மாளிகையிலிருந்து கார் ஒன்று புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டுக் கண்விழித்தார் சமையற்காரர்.

எழுந்ததும் டயானாவுக்காக சுடச்சுட ரீ தயாரித்து எடுத்துக் கொண்டு போனார்.

டயானா அசந்து தூங்கிக் கொண்டிருந்தார். அதனால் இடையூறு செய்யாது திரும்பிவிட்டார்.

## சந்திப்பு

மாளிகைக்குள் மட்டும் டாக்டருடன் சந்திப்புக்களை வைத்துக் கொண்ட டயானா, பின்னர் மாளிகைக்கு வெளியேயும் சந்திக்க ஆரம்பித்தார்.

வெளியிடங்களில் சந்தித்தால் பத்திரிகையாளர்களும், படப்பிடிப்பாளர்களும் துரத்துவார்கள். தங்கள் கண்டுபிடிப்பைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதுவார்கள்.

பத்திரிகையாளர்களையும், படப்பிடிப்பாளர்களையும் இம்முறை ஏமாற்றுவது என்று முடிவு செய்தார்.

அதற்காக டயானா கையாண்ட தந்திரம் மாறுவேடம். டயானா மாறுவேடமிட்டுத் திரிவார் என்று எவருமே எதிர்பார்க்க மாட்டார்கள். அதனால் மாறுவேடமிடத் துணிந்தார்.


செயற்கையான தலைமுடிகளை விதம் விதமாக வாங்கி வைத்துக்கொண்டார். தனது தலைமுடிதான் உடனே காட்டிக்கொடுக்கிறது என்பதால், தலைமுடியை செயற்கை முடிகளால் மறைத்து, அதற்கேற்ப தன் முக ஒப்பனையையும் மாற்றிக்கொள்வார்.

மாறுவேடமணிந்த டயானாவும், டாக்டரும் பூங்காக்களிலும் சுற்றித் திரிந்தனர். எவருமே அடையாளம் காணவில்லை.

மாறுவேடத்திலும் டயானா மிகவும் அழகாகவே இருந்தார். அதனால் பலரது கவனமும் அவர் பக்கம் திரும்பியது.

தங்கள் காதலிகளோடு பூங்காவுக்கு வந்தவர்கள், தங்கள் காதலிகளுக்குத் தெரியாமல் டயானாவை நோக்கினார்கள்.

## சிநேகிதிகள் கொடுத்த செய்தி


ஹஸ்னற் கான்

"நீங்கள் கிழவியாக மாறுவேடமிட்டு வந்தால்தான் தப்பிக்கலாம். இல்லையென்றால் எல்லோர் கண்களும் உங்களைத்தான் கொத்தி எடுக்கின்றன," என்றார் டாக்டர்.

ஆனால் தன்னை எவருமே அடையாளம் காணவில்லை என்பது டயானாவுக்கு சந்தோசமாக இருந்தது.

டாக்டரிடம் ஒரு பழைய கார் இருந்தது. அதில்தான் இருவரும் சுற்றினார்கள்.

அப்படியொரு காரில் டயானா பயணம் செய்வார் என்று யாருமே நம்பமாட்டார்கள்.

அந்தப் பழைய காரில் சுற்றுவதால், பலன் உண்டு என்றாலும் டாக்டருக்கு புதிய கார் ஒன்றை வாங்கிக்கொடுக்க வேண்டும் என்று விரும்பினார் டயானா.



தான் நேரடியாக கார் வாங்கிக் கொடுத்தால், தகவல் உடனே தெரிந்து, தங்கள் காதல் விவகாரம் பரவிவிடும் என்று கருதினார்.

அதனால் தன் நெருக்கமான சிநேகிதி ஒருத்தி மூலம் கார் ஒன்றை வாங்கிக் கொடுக்கத் தீர்மானித்தார்.

## வெளியான செய்தி

தனது சிநேகிதிகள்மீது டயானா வைத்திருந்த நம்பிக்கை தகரும் விதமான செய்தி ஒன்று இலண்டன் பத்திரிகை ஒன்றில் வெளியானது.

டயானா எதனை மறைக்க விரும்பி மாறுவேடம் போட்டுத் திரிந்தாரோ, அதனை பத்திரிகை பெரிய செய்தியாக சொல்லிச் சிரித்தது.

'டயானாவின் புதிய காதலர் ஒரு டாக்டர். இருதய சத்திர சிகிச்சை செய்யும் அந்த டாக்டர், டயானாவின் இதயத்தை கைப்பற்றிக்கொண்டார்.' என்று செய்தி தொடர்ந்தது.

'கென்சிங்டன் மாளிகையில் டாக்டரோடு கொஞ்சுகிறார் டயானா. பெண் குழந்தை வேண்டும் என்று ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றுவாரா டாக்டர்?' என்றும் கேள்வி எழுப்பியிருந்தது.

தன் சிநேகிதிகளில் ஒருத்தி மூலமே செய்தி வெளியாகியுள்ளது என்பதை டயானா தெரிந்து கொண்டார்.

டயானா மாறுவேடமணிந்து செல்வது அவரது சிநேகிதிகளுக்கே தெரியாது.

அதனால் அத் தகவல் வெளியாகவில்லை. அதனை வைத்தே தன் சிநேகிதிகள் கொடுத்த செய்திதான் பத்திரிகைகளில் வந்தது என்பதை டயானா கண்டுபிடித்திருந்தார்.

டாக்டருடனான டயானாவின் உறவு செய்தியாக வந்தபின்னர் அடுத்து என்ன செய்தார் டயானா?

**(அடுத்த வாரமும் வரும்)**

# இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## கஞுவாஞ்சிக்குடி வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் ☞ | சி. கிஷாந்தி, 9ம் வட்டாரம் சக்கடத்தார் வீதி, களுவாஞ்சிக்குடி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





> பழமை பழமை யென்று
> பாவனை பேச லன்றிப்
> பழமை இருந்த நிலை! கிளியே!
> பாமர ரேதறிவார்!
>
> -சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# தகாத ஆசை



ஒரு கிராமத்தில் தந்தையும் மகளும் வசித்துவந்தனர். இவர்கள் இருவரும் அருகிலிருக்கும் காட்டிற்குச்சென்று, விறகு வெட்டி வந்து அதை விற்று, வாழ்க்கை நடத்திவந்தார்கள்.

தந்தையும் மகளும் காட்டிற்கு வருவதை ஒரு சிங்கம் அவதானித்து வந்தது.

ஒருநாள், தந்தையும் மகளும் விறகு வெட்டிக் கொண்டு வீடு திரும்பும்போது, அந்தச் சிங்கம் அவர்கள் முன் வந்து நின்றது. சிங்கத்தைக் கண்ட இருவரும் பயந்து நடுங்கினார்கள். உடனே சிங்கம் தந்தையிடம்,

"என்னைப் பார்த்துப் பயப்பட வேண்டாம். நீங்கள் காட்டிற்கு வந்து போவதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். உன் மகளை எனக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டும். இல்லாவிட்டால் உங்களைக் கொன்று விடுவேன்!" என்று கூறியது.

இதைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டார்கள். என்றாலும் தந்தை சமாளித்துக்கொண்டு, சிங்கத்தைப்பார்த்து,

"எனக்குச் சம்மதம் தான். இருப்பினும் என் மகளின் விருப்பத்தையும் கேட்க வேண்டும்!" என்று கூறினார்.

"அதனாலென்ன தனியாக அழைத்துச் சென்று பேசி உன் மகளிடம் சம்மதம் பெற்று வா!" என்று அனுப்பியது சிங்கம்.

மகளைத் தனியாக அழைத்துச் சென்ற தந்தை, மகளைப் பயப்படவேண்டாம் என்று கூறி, சிங்கத்திடமிருந்து தப்ப ஒரு தந்திரம் செய்வதாகச் சொல்லிவிட்டு, மறுபடி சிங்கத்திடம் அழைத்து வந்தார்.

"சிங்கமே, உன்னைத் திருமணம் செய்ய என் மகளுக்குச் சம்மதமாம். ஆனால் ஒரு நிபந்தனை விதிக்கிறாள்," என்றார் தந்தை.

"என்ன நிபந்தனை? எதையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்!" என்று சொன்னது சிங்கம்.

"என் மகள் பயந்த சுபாவம் உள்ளவள். உன் பற்களும், நகங்களும் கூர்மையாக இருக்கின்றன. இவற்றை அகற்றினால் உடனே திருமணம் செய்துகொள்வாளாம்," என்றார் தந்தை.

"எனது பற்களையும் நகங்களையும் நான் இழக்கத் தயார். நீயே அவற்றைப் பிடுங்கி விடு!" என்று சிங்கம் சொல்ல, அவற்றைப் பிடுங்கினார் தந்தை. சிங்கமும் வலியைப் பொறுத்துக்கொண்டது.

எல்லாவற்றையும் பிடுங்கிய பின், சிங்கம் அவர்களைப் பார்த்து, "எமது திருமணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம்?" என்று கேட்டது.

இதைக் கேட்ட தந்தை, "உனக்கும் என் மகளுக்கும் திருமணமா?" என்று கூறி, விறகுக் கட்டை ஒன்றை எடுத்தார். பற்களையும், நகங்களையும் இழந்த சிங்கம், எதிர்க்க வலுவில்லாமல், பிழைத்தால் போதும் என்று ஓடிவிட்டது.

தனது தகாத ஆசையால் உடல் பலத்தை இழந்துவிட்டது சிங்கம்.


## அதிசயம் - ஆனால் உண்மை!



← பந்தாலன் சினோஸா என்ற ஊரில் உள்ள மீனவர் ஒருவர் பாறை ஒன்றின் கீழ் வீட்டை அமைத்துள்ளார். இந்தப் பாறை சிறகை விரித்து நிற்கும் கழுகு போன்று தோற்றமளிக்கிறது.



ஸ்பெயினில் ← உள்ள தேவாலயம் ஒன்றில் அன்னை மரியாளின் முடியை அலங்கரிக்கும் மகுடம் - 1918ல் அந்நாட்டின் மக்கள் கொடுத்த நன்கொடையைக் கொண்டு செய்யப்பட்டது. இந்த மகுடம் 3155 வைரக்கற்கள், 2572 இரத்தினங்கள், 983 முத்துக்கள், 2572 பவளங்கள் கொண்டு, தங்கத்தாலும் பிளாட்டினத்தாலும் உருவாக்கப்பட்டது.



↑ மேப்பின் என்ற ஏரியில் மிதக்கும் அரண்மனை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இந்த ஏரியில் புயலின் போது உடையும் கப்பல்களின் பாகங்களைக் கொண்டே, இந்த மிதக்கும் அரண்மனை கட்டப்பட்டது.

## எப்படி வந்தது?



பெரும்பாலான நாடுகளில் ஞாயிற்றுக் கிழமைதான் விடுமுறை நாள். இது எப்படி வந்தது என்று தெரியுமா?

ஞாயிறு விடுமுறைக்கும், கிறிஸ்தவ மதத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இயேசுகிறிஸ்து மறைந்த பின் அவருடைய சீடர்களையும், விசுவாசிகளையும் ரோமாபுரி ஆட்சியாளர்கள் மிகவும் கொடுமைப்படுத்தினார்கள்.

கி.பி.312ம் ஆண்டு கொன்ஸ்டன்டைன் என்பவர் ரோமாபுரிச் சக்கரவர்த்தியானார். அவர் கிறிஸ்துவின் சீடர்கள் மற்றும் விசுவாசிகளுக்கு பிரார்த்தனை செய்வதற்காக ஒரு நாள் அனுமதி கொடுத்தார். அந்த நாள் ஞாயிற்றுக் கிழமை.

முதன் முதலில் ரோமாபுரி நாடுதான் ஞாயிற்றுக்கிழமையை விடுமுறையாக அறிவித்தது. அதன் பின்னர்தான் பல நாடுகள் இதைப் பின்பற்றின.

## பைத்தியக்காரச் செடி



படத்தில் இருக்கும் செடியின் பெயர் 'லோகோவிட்'. இது ஸ்பானிய சொல் ஆகும். 'லோகோவிட்' என்றால் ஸ்பானிய மொழியில் பைத்தியம் என்று பொருள். இச்செடிக்கு இப்பெயர் வந்ததற்குரிய காரணம் என்ன தெரியுமா?

இந்தச் செடியைச் சாப்பிட்டவுடன் ஆடு, மாடு, குதிரை போன்ற விலங்குகளின் நடவடிக்கைகள் வித்தியாசமாக இருக்கும்.

இந்தச் செடியின் இலைகளைச் சாப்பிட்ட விலங்குகள் கண்டபடி ஓடும், தமக்கு எதிரே உள்ள பொருட்களின் மீது மோதிக்கொள்ளும். சில வேளைகளில் மிகவும் சோர்ந்து போய் காலை இழுத்துக் கொண்டு நடக்கும். சில நாட்களில் ஒல்லியாகி நாளடைவில் இறந்துவிடும்.

இந்தச் செடி விஷமுள்ள பொருட்களை மண்ணில் இருந்து உறிஞ்சி விடுவதால்தான் இப்படி இருப்பதாக இதை ஆராய்ந்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

நீண்ட நாட்கள் வாழும் இந்தத் தாவரம் வட அமெரிக்காவில் காணப்படுகிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **20.02.1999.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 284**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 282

**பரிசுக்குரியவர்:**
பி.ரெபேக்கா பொன்மலர்,
க/கதிரேசன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| வே. வெங்கட்றமணன்,<br>கொ/இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி. | மு.அ. ஆஸாத்,<br>கமு/அல்மனார் மத்திய கல்லூரி, மருதமுனை. |
| ரி. பிறவீணா துஷ்யந்தி,<br>பு/இந்து தமிழ் மகா வித்., புத்தளம். | ந. தெய்வமலர்,<br>ஹைலண்ட் மத்திய கல்லூரி, ஹட்டன். |
| ஆர். சுரதிஸ்,<br>க/கலாபொக்க தமிழ் வித்., மடுல்கெல. | பஹீமா பர்வின்,<br>அல் பத்ரியா ம.வி. கஹடோவிட்ட. |
| கோபாலசிங்கம் அருணாஜ்,<br>விபுலாநந்தா மத்திய கல்லூரி, காரைதீவு-10. | யூ. சோவினி,<br>சென். சிசிலியா பெ.ம.வி. மட்டக்களப்பு. |
| நவரட்ணம் றூபினி,<br>இ/பலாங்கொடை தமிழ் மகா வித். பலாங்கொடை. | என். கௌரிகரன்,<br>கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. |

## ஏன் தெரியுமா?

கடலில் உள்ள மீன்களில் மிகவும் ஆபத்தானவை சுறாமீன்கள் என்பது உங்களுக்குத் தெரியும். சுறாமீன்கள் 24 மணித்தியாலங்களும் நீந்திக்கொண்டுதான் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? இவை ஏன் இப்படித் தொடர்ந்து நீந்திக் கொண்டிருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியுமா?



சுறாமீன்களின் உடல் அமைப்பின்படி இவற்றின் வாய் வழியாகத் தண்ணீர் போய், சுறாமீன்கள் சுவாசிக்க முடியும். சுறாமீன்கள் ஒரே இடத்தில் நின்றாலோ அல்லது பாறை இடுக்குகளில் மாட்டிக்கொண்டாலோ சுவாசிக்க முடியாமல் செத்துவிடும்.

சுறா மீன்களைப் பற்றி இன்னொரு தகவல்- இவற்றின் காதும், மூக்கும் மிகவும் கூர்மையானவை. வெகு தொலைவில் சத்தம் ஏற்பட்டால்கூட சுறாமீன்களால் கேட்க முடியும். அதே போல் பல மீட்டர்களுக்கு அப்பால், கடலில் இரத்தம் சிந்தினாலும் அதை மோப்பம் பிடித்து அந்த இடத்திற்கு சுறாமீன்கள் விரைந்து செல்லும்.

## மின்னலில் மின்சாரம்



* ஒருமுறை மின்னலடிக்கும்போது அதிலிருந்து 3 கோடி வோல்ட் மின்சாரம் வெளிப்படுகிறது. இந்த வெப்பத்தின் அளவு 30 ஆயிரம் பாகை செல்சியஸ் ஆக இருக்கும்.
* பூமிக்குக் கிடைக்கும் மொத்த ஆற்றலில் ஆயிரத்தில் ஒரு பங்கு மின்னல்களிலிருந்து கிடைக்கிறதாம்.
* ஒவ்வொரு மின்னலும் செக்கனுக்கு 28,300 மைல் வேகத்தில் பூமியை நோக்கிப் பாய்கிறது.
* ஒவ்வொரு நாளும் பூமியைச் சுமார் 44 ஆயிரம் இடிமின்னல்கள் தாக்கியவண்ணம் இருக்கின்றன.
* மின்னலால் பாதிக்கப்படுவது கண்கள் அல்ல; கேட்கும் சக்திதான் அதிகம் பாதிக்கப்படுகிறது.

## கண்டு பிடித்தவர்கள்

* காமா கதிர்களின் இயல்பைக் கண்டு பிடித்தவர்-**ஹென்றி பேக்ரஸ்.**
* ரேடாரைக் கண்டுபிடித்தவர் -**ஜோர்ஜ் ஈஸ்ட்மன்.**
* கடிகாரத்தைக் கண்டு பிடித்தவர் -**பீட்டர் ஹெல்.**
* அணுகுண்டைக் கண்டுபிடித்தவர் -**ஜோண் டால்டன்.**
* லேசரைக் கண்டுபிடித்தவர் -**கால்ஸ் டவுன்ஸ்.**
* பெயிண்டைக் கண்டு பிடித்தவர்-**ஷாலிமர்.**
* முகப்பவுடரைக் கண்டுபிடித்தவர் -**ஸ்கல்ட்ஸ்.**
* யுரேனியத்தைக் கண்டுபிடித்தவர் -**ஹென்றி பெக்குரல்.**
* கணக்கிடும் இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர்-**பாஸ்கெல்.**
* சினிமாஸ்கோப் படத்தைக் கண்டு பிடித்தவர்-**ஹென்றி கெசட்ரின்.**

## செங்கிஸ்கான்

* செங்கிஸ்கான் என்பவர் யார்?
உலகிலேயே மிகச் சிறந்த வெற்றி வீரர்.



* இவர் எங்கே, எப்போது பிறந்தார்?
இவர் மங்கோலியாவில் 1162ம் ஆண்டு பிறந்தார். இவரது பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் 'தேமுஜீன்'. இதற்கு 'இரும்பு வேலைக்காரர்' என்று அர்த்தம்.
* எப்போது இவருக்கு செங்கிஸ்கான் என்று பெயர் வந்தது?
மங்கோலியாவில் வசித்த அனைத்து பழங்குடியினரையும் இணைத்து ஒரே நாடாக மாற்றி ஆட்சி செய்தார். 1206ம் ஆண்டு மங்கோலியாவில் இருந்த பழங்குடித் தலைவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து 'செங்கிஸ் தான்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர். 'செங்கிஸ்கான்' என்றால் 'வெல்லமுடியாத வெற்றி வீரர்'. என்று அர்த்தம்.
* இவர் எப்போது தலைவர் ஆனார்?
மங்கோலியப் பழங்குடியினங்களின் ஒன்றின் தலைவராக இருந்த இவரது தந்தை இறக்கும்போது செங்கிஸ் கானைத் தலைவராக்கினார். அப்போது இவரது வயது 19.
* இவர் முதன் முதலில் வெற்றி கொண்ட நாடு எது?
சீனாவின் வடமேற்குப் பகுதியைத் தாக்கி, 1215ம் ஆண்டு பெகிங் என்ற நாட்டைக் கைப்பற்றினார். பிறகு 1218ம் ஆண்டு மத்திய ஆசிய நாடுகளான ஈரான், உஸ்பெக்கிஸ்தான் நாடுகளை அழித்தார்.
* இவர் எப்போது இறந்தார்?
1227ம் ஆண்டு-தனது 65வது வயதில் இறந்தார்.

# டிசம்பர் பௌர்ணமி

## 16

மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான். இனி......

விசாலி தன் கையில் இருந்த செல்ஃபோனை அணைத்துவிட்டு முகுந்தனை ஏறிட்டாள்.

"ரிங் போயிட்டே இருக்கு ரிசீவரை யாரும் எடுக்கலையே?"

"விசாலி வீட்ல இருக்கணுமே? ஃபோனை கொண்டாங்க... நான் ட்ரை பண்ணிப் பார்க்கிறேன்."

சொன்ன முகுந்தன் விசாலியிடம் இருந்த செல்ஃபோனை வாங்கி டயலில் தன் வீட்டு டெலிஃபோன் எண்களைத் தட்டி விட்டுக் காதுக்குக் கொடுத்தான்.

ரிங் போயிற்று

ரிஸீவர் எடுக்கப்படவில்லை.

முகுந்தன் லேசாய் முகம் மாறி நித்தியனைப் பார்த்தான்.

"சாந்தா வீட்ல இல்லைப் போல் இருக்கே."

"வீட்ல இருக்காமே எங்கே போவா முகுந்தன்? ஃபோன் ஒரு வேளை அவுட் ஆஃப் ஆர்டராய் இருக்குமோ?"

"நிச்சயம் ஃபோன் அவுட் ஆஃப் ஆடர் கிடையாது. ஒரு மணி நேரத்துக்கு முந்திவரைகூட டெலிஃபோன் நல்ல முறையில் இயங்கிட்டுத்தான் இருந்தது."

"கொண்டா! நான் டயல் பண்ணிப் பார்க்கிறேன்."

நித்தியன் இப்போது செல்ஃபோனை வாங்கி ட்ரை செய்ய ரிசீவர் மறுமுனையில் எடுக்கப்படாமல் அடம் பிடித்தது.

முகுந்தனின் முகத்தில் லேசாய் வியர்வையும் ஒரு சின்ன பயமும் அரும்பியது.

"மறுபடியும் பொலிஸ் வந்து சாந்தாகிட்ட ஏதாவது பிரச்சனை பண்ணி ஸ்டேஷனுக்கு கூட்டிப் போயிருப்பாங்களோ?"

"வீட்டுக்குப் போய்ப் பார்த்துடலாம். கிளம்பு."

மூன்று பேரும் ஹோட்டலினின்றும் வெளிப்பட்டு காரில் கிளம்பினார்கள்.

சென்னையின் நெரிசலான போக்குவரத்தில் முப்பது நிமிஷ சிரமப்பயணம் முகுந்தனின் வீடு வந்தது.

வேக வேகமாய் இறங்கி உள்ளே போனார்கள். வாசல் கதவு வெறுமனே சாத்தியிருக்க கை வைத்ததுமே அது திறந்து கொண்டது.

ஹாலில் யாருமில்லை.

நித்தியன் ஹாலின் மையத்தில் நின்று கொண்டு குரல் கொடுத்தான்.

"சாந்தா...."

"....."

"சாந்தா"

பதிலில்லை.

முகுந்தன் ஒவ்வொரு அறையாய் எட்டிப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

'சாந்தாவைக் காணோம்'

மூன்று பேரும் வீட்டை நான்கு திசையிலும் அலசிப் பார்த்துவிட்டு இருண்ட முகங்களோடு ஹாலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

நித்தியன் முகுந்தனை கவலையாய் ஏறிட்டான். "சாந்தா ஒரு வேளை தான் தங்கியிருந்த ஹாஸ்டலுக்குப் போயிருப்பாளோ?"

"ஹாஸ்டலுக்கு எதுக்காகப் போகணும்?

"ஏதாவது காரணம் இருக்கலாம்"

"சரி ஃபோன் பண்ணிப்பாரு"

நித்தியன் வியர்த்த முகமாய் டெலிஃபோனை நெருங்கி ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண்களைத் தட்டி விட்டு மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப் பட்டதும் கேட்டான்.

"வொர்க்கிங் விமன் ஹாஸ்டல்"

"......"

"மிஸ் சாந்தா ப்ளீஸ்.... ரூம் நெம்பர் ஃபாட்டி ட்டு"

"......"

"அப்படியா.... சரி" நித்தியன் ரிஸீவரை வைக்க முகுந்தன் கவலைக் குரலில் கேட்டான்.

"என்ன ரிப்ளை?"

"காலையில் பத்து மணிக்கு சமாருக்கு வெளியே போன சாந்தா இன்னமும் ஹாஸ்டலுக்குத் திரும்பலையாம்."



"நித்தியன்! சாந்தா இந்த வீட்டைவிட்டு ஹாஸ்டலுக்குப் போக காரணமே இல்லை."

"அப்படின்னா, வேற எங்கே போயிருக்க முடியும். இப்படி வீட்டைத் திறந்து போட்டுட்டு போற அளவுக்கு பொறுப்பில்லாதவளும் கிடையாது." சொல்லிக் கொண்டே திரும்பிய நித்தியனின் பார்வை டீபாய் பக்கம் போனதும் திடுக்கிட்டது.

டீப்பாய்க்குக் கீழே மார்பில் தரையில் சிவப்பாய் சில தீற்றல்கள்.

"முகுந்தன்! அங்கே பாரு"

பார்த்தான்.

"என்ன இது?"

"ரத்தக்கறை மாதிரி தெரியுது"

"ரத்தக் கறையே தான்!" நித்தியன் குனிந்து இடது கை ஆட்காட்டி விரலால் தொட்டுப் பார்த்துவிட்டு கலவரக் குரலில் சொன்னான்.

விசாலியும் குனிந்து பார்த்தான்.

"பிளட் ஸ்டேயின் இன்னும் சரியா ஃப்ரீஸ் கூட ஆகலை... பத்து பதினைஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடிதான் ரத்தம் இங்கே பட்டிருக்கணும்."

நித்தியன் பதட்டப்பட்டுக் கத்தினான்.

"முகுந்தன்! சாந்தாவீட்ல தனியா இருந்தப்ப அவளுக்கு ஏதோ ஆபத்து உண்டாகியிருக்கு. அந்த ஆபத்து என்னோட அப்பா மூலமாகக்கூட ஏற்பட்டிருக்கலாம். வா... போய் கேட்போம்."

"எனக்கும் அதே சந்தேகம்தான்! கிளம்பு. இனிமே விஷயத்தை மூடி மறைக்க வேண்டிய அவசியம் இல்லை. வா நேரிடையாவே போய்க் கேட்டுடலாம்."

விசாலி குறுக்கிட்டாள்.

"நீங்க ரெண்டு பேர் போய் கேட்கிறதை விட நானே போய்க் கேட்டாத்தான் உண்மை வெளியே வரும். நான் முதல்ல அவர்கிட்ட போறேன். பின்னாடி நீங்க வாங்க"

முகுந்தன் அதை ஆமோதித்தான்.

"நித்தின்! விசாலி சொல்றது தான் சரின்னு என் மனசுக்குப் படுது. விசாலி மொதல்ல போகட்டும். கொஞ்ச நேரம் கழிச்சு நாம போவோம்."

நித்தியன் ஒரு இயந்திரம் மாதிரி தலையாட்டினான்.

★★★

**சி**கரெட் பைப்பில் புகையிலையை அடைத்துக் கொண்டிருந்த ருத்ரமூர்த்தி போர்டிக்கோவில் வந்து நின்ற காரினின்றும் இறங்கிய விசாலியைப் பார்த்து மலர்ந்தார்.

"வாம்மா...."

விசாலி வரவழைத்துக் கொண்ட ஒரு சிறிய புன்னகையோடு அவருக்கு முன்பாய் போய் உட்கார்ந்தாள்.

ருத்ரமூர்த்தி கையிலிருந்த சிகரெட் பைப்பை டீபாயின் மேல் வைத்து விட்டு வியப்பாய் கேட்டார்.

"என்னம்மா... நீ மட்டும் வந்திருக்கே? அப்பா வரலையா?"

"இல்லை அங்கிள்.... நான் மட்டும்தான் வந்தேன்."

"நித்தியனைப் பார்க்கவா...?" குரலை இறக்கி ஒரு குறும்புச் சிரிப்போடு கேட்டுவிட்டு கண்ணைச் சிமிட்டினார்.

"நான் இங்கே வந்தது உங்களைப் பார்க்கத்தான் அங்கிள்."

"ஈஸிட்! என்னைப் பார்க்கவா? சொல்லும்மா என்ன விஷயம்?"

"அங்கிள்! நான் இப்போ கேட்கப் போகிற கேள்வி உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கலாம். பட் எனக்கு வேண்டியது உண்மையான பதில்."

ருத்ரமூர்த்தியின் நெற்றியில் கேள்விக் குறி ஒன்று முளைத்தது." என்னம்மா பீடிகை எல்லாம் பலமாயிருக்கு. நீ என்ன கேட்க நினைக்கிறியோ அதை தாராளமாக கேட்கலாம்."

விசாலி பட்டென்ற குரலில் கேட்டாள்.

"சாந்தா எங்கே அங்கிள்?"

"சாந்தா?"

"ஆமா."

"எந்த சாந்தா?"

"உங்க சன் நித்தியன் காதலிக்கிற சாந்தாவைத்தான் கேட்கிறேன்."

ருத்ரமூர்த்திக்கு விசாலி அப்படி பேசியது அதிர்ச்சியாக இருந்தாலும், அதை முகத்தில் கொஞ்சமும் காட்டிக் கொள்ளாமல் கேட்டார்."

"நீ என்னம்மா சொல்றே?"

விசாலி புன்னகைத்தாள். "அங்கிள்! இந்த அப்பாவித்தனமான முகபாவம் எல்லாம் என்கிட்டே வேண்டாம். எனக்கு எல்லா விஷயமும் தெரியும். நான் உங்க வீட்டுக்கு மருமகளா வரணுங்கற ஒரே ஒரு காரணத்துக்காக உங்க சன்னோட காதலை அழிக்க நினைச்சீங்க. உண்டா.. இல்லையா?"

ருத்ரமூர்த்தி தொடர்ந்து முகத்தில் அதே அப்பாவித்தனத்தைக் காட்டினார்.

"அம்மா விசாலி...! உனக்கு யாரோ எதையோ தப்பா சொல்லிவிட்டிருக்காங்க... என்னோட சன் நித்தியன் ஒரு பெண்ணை காதலிக்கிறதா நீ இப்ப சொல்ற விஷயம், எனக்கு புதுசாயிருக்கு. என் பையன் அப்படிப்பட்டவன் கிடையா. அவன் உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறான்."

"இல்ல... அங்கிள்.... உங்க சன் நித்தியன் எல்லா விஷயத்தையும் என் கிட்டே சொல்லிட்டார். நீங்க அந்தப் பெண் சாந்தாவை டெலிஃபோன்ல மிரட்டினதுகூட எனக்குத் தெரியும். இனியும் நீங்க எதையும் மறைக்க முயற்சி பண்றது சரியில்லை."

"நித்தியன் உன்கிட்ட சொன்னானா?"

"ஆமா..."

ருத்ரமூர்த்தி ஒன்றும் பேசாமல் சில வினாடிகளுக்கு மௌனமாய் இருக்க, விசாலி மறுபடியும் கேட்டாள்.

"இப்பவாவது சாந்தா எங்கேன்னு சொல்றீங்களா?"

எங்கோ பார்த்துக் கொண்டு மெல்லிய குரலில் சொன்னார் ருத்ரமூர்த்தி.

"எனக்குத் தெரியாது... அவ ஒரு வொர்க்கிங் விமன் ஹாஸ்டல்ல தங்கியிருக்கிறதா கேள்விப்பட்டேன். அங்கே போய் விசாரிக்க வேண்டியது தானே!"

"சாந்தா அங்கே இல்லை."

"அங்கே இல்லேன்னா வேற எங்கேயாவது இருப்பா. என்னை எதுக்காக வந்து கேக்கறே?"

"அப்பா!"

தனக்கு பின்பக்கம் குரல் கேட்க, ருத்ரமூர்த்தி திரும்பினார். நித்தியன் நின்றிருந்தான். அவனுக்குப் பின்னால் முகுந்தன்.

ருத்ரமூர்த்தி நித்தியனையே வைத்த கண் வாங்காமல் பார்க்க, அவர் பக்கத்தில் வந்து நின்றான். மூச்சுக்காற்று முகத்தில் மோதக் கேட்டான்.

"சாந்தா உயிரோடு இருக்காளா? இல்லே கொன்னுட்டீங்களாப்பா...?"

(பௌர்ணமி தொடரும்)

---

# சதாம் உசேன்

## 28

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

ராஜையா

'இஸ்ரேலுடன் போர்' என்று சதாம் பகிரங்கமாகப் பேசியது, அமெரிக்காவை பதறச் செய்தது. அது அடுத்த கட்ட யுத்தமான பொருளாதார யுத்தத்தைத் தொடங்கியது...

ஈராக்குக்கு அமெரிக்கா செய்து வந்த கடனுதவியை அது கணிசமாகக் குறைத்தது. அத்துடன் 'ஈராக்குக்கு பத்து பைசா கூட கடனுதவி செய்யாதே!' என்று தன் நேச நாடுகளான இங்கிலாந்து உள்ளிட்ட மேலை நாடுகளுக்கும், தன் தாளத்துக்கு ஏற்ப தப்பாமல் ஆடும் எகிப்து, குவைத் போன்ற அரபு நாடுகளுக்கும் அமெரிக்கா உத்தரவிட்டது.

"ஈராக்குக்கு பொருளாதார நிர்ப்பந்தம் கொடுத்தால் உள்நாட்டில் பிரச்சனை அதிகரிக்கும். அவதி தாங்காமல் ஈராக்கியர்கள் சதாமின் ஆட்சியைத் தூக்கி எறிந்து விடுவார்கள்," என்று அமெரிக்கா கணக் குப்போட்டது.

ஆனால், ஈராக்மீது அமெரிக்காவும், மேலைநாடுகளும் பலவந்தமாய்த் தொடுத்த பொருளாதார யுத்தத்துக்கு சதாம் தன் ஸ்டைலில் கடுமையான பதிலடி கொடுத்தார்.

ஈராக் சிறையில் ஐந்து மாதங்களாக அடைக்கப்பட்டிருந்த இங்கிலாந்து பத்திரிகையாளர் ஃபர்சாத்-மார்ச் 9ந் திகதி வெளியே இழுத்து வரப்பட்டார். ஈராக் கோர்ட் விசாரணைக் கூண்டில் நிறுத்தப்பட்டார்.

அவர்மீது உளவுக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

பாக்தாத் அருகே உள்ள ஏவுகணை உற்பத்திச்சாலை ஒன்றில் ஐந்து மாதங்களுக்கு முன் பயங்கர வெடிவிபத்து நடந்தது. "இந்த வெடி விபத்துக்குப் பின்னால் ஏதோ மர்மம் இருக்கிறது; அதை சதாம் அரசு மூடி மறைக்கிறது," என்று சந்தேகப்பட்ட இஸ்ரேல், அதுபற்றி மோப்பம் பிடிப்பதற்காக ஃபர்சாத்தைப் பிடித்து பாக்தாத்துக்கு அனுப்பியதாம். ஃபர்சாத் பாக்தாத் வந்தார். ஏவுகணை உற்பத்திச்சாலைக்குச் சென்றார். பொலிசிடம் பிடிபட்டார். இஸ்ரேலுக்கு உளவு பார்க்க வந்ததாக விசாரணையின்போது ஈராக் அதிகாரிகளிடம் அவர் ஒப்புக்கொண்டார். சிறையிலடைக்கப்பட்டார்.

ஈராக்மீது பொருளாதார யுத்தம் தொடுக்கப்பட்டவுடன் இந்த 'இஸ்ரேல் உளவாளி' கோர்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டார். ஒரே வாரத்தில் விசாரணை முடிக்கப்பட்டு, அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. தூக்கிலிடப்பட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த இஸ்ரேலும், அமெரிக்காவும், மேலைநாடுகளும் சதாமை ஒடுக்க அதிதீவிர நடவடிக்கைகளில் இறங்கின...

மார்ச் 22-ந் திகதி ஜெரால்டு புல் என்பவர் பிரஸ்ஸல்ஸில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் வீட்டு முன் சடலம் தலைகுப்புறக் கிடந்தது. கழுத்துக்குள் ஐந்து தோட்டாக்கள் நுழைந்திருந்தன.

புல், ஈராக்கின் இராணுவத்தை வலுப்படுத்த உதவிய முக்கிய இராணுவ நிபுணர் ஆவார். வெளிநாட்டுக்காரரான அவரை சதாம் காண்ட்ராக்டில் அமர்த்தியிருந்தார்.

தொலைதூரத்துக்குப் பாய்ந்து சென்று வெடிக்கக்கூடிய குண்டுகளை ஏவும் நவீன பீரங்கிகளை ஈராக் தயாரிக்க முடிந்ததற்கு புல்லின் அபார மூளை தான் காரணம்.



ஈராக்கின் இராணுவ பலம் வளர்ந்து விடாமல் தடுக்கவும், ஃபர்சாத் தூக்கிலிடப்பட்டதற்கும் பதிலடி கொடுக்கவும், இஸ்ரேல் தனது 'மொசாத்' என்ற உளவுப் படையை அனுப்பி, சதாமின் இராணுவ மூளைகளில் ஒன்றாக இயங்கி வந்த புல்லை தீர்த்துக்கட்டியது.

புல் கொலையுண்டதால் அதிர்ச்சி அடைந்த சதாம், இஸ்ரேலை மிகக் கடுமையாக எச்சரித்தார். "எங்களிடம் நவீன இரசாயனக் குண்டுகள் இருக்கின்றன. அந்த இரசாயன குண்டுகளை நாடுவிட்டு நாடு தூக்கிச் சென்று வீசும் நவீன ஏவுகணைகளும் இருக்கின்றன. ஆகவே கடவுளின் பெயரால் எச்சரிக்கிறேன். ஈராக்குக்கு எதிராக இனியும் ஏதாவது செய்ய முயன்றால் பாதி இஸ்ரேலை நெருப்பு சுட்டெரிக்குமாறு செய்துவிடுவோம்!" என்றார் சதாம்.

அமெரிக்காவும், இங்கிலாந்தும் தங்களுக்குத் தெரிந்த வழியில் சதாமை பழி வாங்கின....

மார்ச் 28ந் திகதி அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஏராளமான ஈராக்கியர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்கள் பயங்கர ஆயுதங்களை செய்வதற்கான முக்கிய பாகங்களை இந்நாடுகளிலிருந்து பாக்தாத்துக்கு இரகசியமாகக் கடத்திச்சென்று சதாமுக்கு உதவுவதாக குற்றம் சாட்டப்பட்டது.

அயரவில்லை சதாம்...

மே மாதக் கடைசியில் பாக்தாத்தில் நடந்த அரபு லீக் உச்சி மாநாட்டில் பேசிய சதாம், புண்பட்டு கொதித்துக் கொண்டிருக்கும் அரபு மக்களின் மொத்த உணர்வை வெளிப்படுத்தும் ஹீரோவாக தன்னை அடையாளம் காட்டினார்.

"பாலஸ்தீனத்தை மீட்போம்; இஸ்ரேலுக்கு பாடம் புகட்டுவோம்!" என்று அரேபியர்களுக்கு அவர் மீண்டும் அறைகூவல் விடுத்தார். பாலஸ்தீன மக்களை அடிமைச் சங்கிலியால் பூட்டி வைத்திருக்கும் ஸியோனிச வெறியர்களுக்கு அமேரிக்காவின் இராணுவமும், பொருளாதாரமும் ஆதரவாக இருப்பதாகக் குற்றம் சாட்டினார்.

(தொடர்ந்து வரும்)

# உதட்டில் ஒரு மச்சம்

## 17

**இதுவரை**


அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜயோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜயோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஓடக்கரை
கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு இறக்கிறான்.
கிராம இளைஞர்கள்
கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது
என்று ஆயுதம் ஏந்த
முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில்
அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.
அமைச்சரைக் கொல்ல
இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.
அமைச்சரை கொலை செய்ய
செல்லும் கைலாஷ்
மாட்டிக்கொள்கிறான்.
மின்சார வயரைப் பிடித்து
தற்கொலை செய்கிறான்.
அடுத்தத்திட்டம் தயாராகிறது.

**இனி....**

அலைகள் எழும்பின, சீறின, மோதின, திரும்பின. மணல்வெளியில் உட்கார்ந்திருந்தான் தேவேந்திரன். குழந்தை ஒன்று கை தவறவிட்ட பலூன் தத்தித்தத்தி அவன்மீது வந்து மோதியது. பலூனைக் கைப்பற்றி குழந்தையைக் கிட்டே கூப்பிட்டான். அது தயங்கி, அம்மா அப்பாவைப் பார்த்தது. 'போ' என்று அவர்கள் ஊக்கம் கொடுத்ததும் அவனிடம் ஓடி வந்து பலூன் அடங்காத கையை நீட்டிக் கேட்டது.

தேவேந்திரன் அதன் தலையைத் தொட்டு, விரலால் கொஞ்சினான். இரண்டு கைகளிலும் பலூனைக் கொடுத்தான்.

தண்ணீரில் தெப்பலாக நனைந்து ஈர மணல் உடம்பெங்கும் ஒட்டியிருக்க ஒருவரை ஒருவர் துரத்திக்கொண்டு இளைஞர்கள், இளைஞிகள் என்று மாணவர் படை குறுக்கில் ஓடியது. அவர்களுடைய கள்ளமில்லாத சிரிப்பும், கவலையில்லாத துள்ளலும் தேவேந்திரனைக் கலைத்தன.



உலகமே சந்தோஷமாக இருக்கிறது. அவன் ஊர் மக்களுக்கு மட்டும் ஏன் இந்தக் கொடுமை?

பார்வை நகர்ந்து விலகியது.

படகு நிழலில் மயங்கி உட்கார்ந்திருந்த காதல் ஜோடிமீது நிமிட நேரத்திற்கு லயித்தது.

ஷிவாவும், நர்மதாவும்கூட இப்படித் தானே?

ஷிவாவைப் பிரித்து அவன் செய்யப் போகிற காரியம் நியாயந்தானா? நிழலாடியது. நிமிரும் முன் பின்புறமிருந்து அவன் கண்கள் பொத்தப்பட்டன. அந்த வலுவான விரல்களை தேவேந்திரனுக்குத் தெரியும். ஷிவா!

"வா ஷிவா"

ஷிவா ஒரு இனிப்புப் பொட்டலத்தை தேவேந்திரனிடம் நீட்டினான்.

"இன்றைக்கு ரொம்ப சந்தோஷமான தினம், தேவ்.. என்னவென்று சொல்."

இவனுக்கு நிகழப்போவது என்னவென்று தெரியும். தெரிந்திருந்தும் எப்படி இவனால் இவ்வளவு இயல்பாக-சந்தோஷமாக இயங்க முடிகிறது?

தேவேந்திரனின் கண்கள் நனைந்தன.

"உட்கார் ஷிவா... உனக்கு இன்று பிறந்தநாளா?"

"இல்லை. பறந்த நாள். ஆம் தேவ்... என் விமானப் பயிற்சி இன்றோடு முடிந்து விட்டது. இனி நான் விமானங்களை தைரியமாகக் கையாளலாம்." ஷிவா உற்சாகமாய்ச் சொன்னான்.

"ஷிவா.... என்னை மன்னித்து விட்டாய் தானே?"

"எதற்கு தேவ்...? எனக்கு இந்தச் சிறப்பு கொடுத்ததற்காகவா?"

"உனக்கு நிஜமாகவே வருத்தமில்லையா ஷிவா?"

"எதை நினைத்து?"

"நீ இழக்கப் போவதை நினைத்து!"

"இழந்ததையெல்லாம் நினைத்து வருத்தப்பட்டது போதும், தேவ். இந்த முகத்தை இழப்பதற்கு எனக்கு எந்த வருத்தமும் இல்லை. என் நாட்டுக்காக ஒரு காலையே இழந்து வரவில்லையா நீ?"

"இருந்தாலும் முகத்தின் அடையாளத்தை தொலைப்பதற்கு அசாத்திய தைரியம் வேண்டும் ஷிவா."

"அந்தத் தைரியம் உன்னிடமிருந்து கற்றது தேவ்."

"நர்மதா என்னை மன்னிப்பாளா?"

"எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது தேவ், நீ ஒரு கிராமத்துக் கிழவிபோல இப்படிப் புலம்புவது. ஆஸிட் பாட்டிலை நானே வாங்கி வந்திருக்கிறேன். நீ தயங்கினால் நானே ஊற்றிக்கொள்ள வேண்டிவரும். அது அவ்வளவு கரெக்ட்டான ரிசல்ட்டைத் தருமா என்று யோசி... வா தேவ் தயங்காதே... நம் இருப்பிடத்திற்குப் போகலாம்."

ஷிவா தேவேந்திரனை கைகொடுத்து எழுப்பினான். அவர்களைச் சுற்றி உலகமே உற்சாகமாக இருக்க, தேவேந்திரன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு ஷிவாவுடன் நடந்தான்.

★★★

டாக்டர் மகேஷ் தேவேந்திரனின் கையைப் பற்றிக் குலுக்கினார்.

"ரிமார்க்கபிள், அரவிந்த்தின் முகம் சிதைக்கப்பட்ட அதே பகுதி ஷிவா முகத்திலும் ஆஸிட் ஊற்றி சிதைக்கப்பட்டிருக்கிறது. யாருடைய வேலை இது?"

ஜன்னல் திரைகள் இழுத்து மூடப்பட்ட அந்தப் பிரத்யேக ஆஸ்பத்திரி அறையில் கட்டிலில் ஷிவா வலியின் வேதனைகளைப் பொருட்படுத்தாமல் படுத்திருந்தான்.

"அரவிந்த்தின் முகம் போலவே மாற்றித் தருவீர்களா, டாக்டர்?" என்றான் தேவேந்திரன்.

"கிட்டத்தட்ட... அரவிந்தின் உதட்டில் இந்த நுனியில் ஒரு மச்சம் உண்டு. அதைக் கூட இந்த முகத்தில் கொண்டு வர முடியும். அதிகபட்சம் அரவிந்தின் முகம் போலத் தோற்றமளிக்கும்படி மாற்றித் தருகிறேன்!" என்றார் மகேஷ், ஷிவாவின் சிதைந்த முகத்தைப் பார்வையிட்டபடி.

"தேவ்...." என்றான் ஷிவா. குரல் சற்றே குழறலாக வந்தது. "அரவிந்த் தொடர்பான வீடியோ கேசட்கள் கிடைத்தால் அவனுடைய நடை, உடை, அசைவுகள் இவற்றையும் என்னால் புரிந்துகொள்ள முடியும்."

"ஏற்பாடு செய்கிறேன்...." என்று அவன் தோளை அழுத்திக் கொடுத்தான் தேவேந்திரன்.

சதுரமான கண்ணாடியில் தன் முகம் பார்த்துக் கொண்டிருந்தான் ஷிவா. அவனுடைய முகமா இது? இடது புறம் தீய்ந்து போய், சதை இழுக்கப்பட்டு- வெள்ளை விழி வெளியே தெரிய- உதடு முழுவதும் மூடாமல் பற்களைக் காட்டிக் கொண்டு.

ஆனாலும் இந்த முகம்தான் ஷிவாவிற்குப் பிடித்திருந்தது.

கதவு திறக்கும் ஒலி கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினான். ஸ்டாஃப் நர்ஸ். "உங்களைத் தேடிக்கொண்டு நர்மதா என்ற பெண் வந்திருக்கிறாள்....!"

"நோ!" ஷிவா அவசரமாகக் கண்ணாடியை தலையணைக்கடியில் வைத்தான். "அவளை உள்ளே விடவேண்..."

"ஏன் ஷிவா என்னை விட வேண்டாம்?" என்று கேட்டுக்கொண்டே நர்மதா உள்ளே நுழைய, ஷிவா அவசரமாகத் தன் முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டான்.

நர்ஸ் வெளியேற, நர்மதா ஷிவாவை நெருங்கினாள்.

"வேண்டாம் நர்மதா. உன்னால் தாங்க முடியாது. இந்த முகத்தை நீ பார்க்க வேண்டாம். உன் நினைவில் ஷிவாவின் நல்ல முகம் தங்கியிருக்கட்டும்."

"என்னை அவ்வளவு மலிவாக எடை போட்டு விட்டீர்களா ஷிவா? நான் ஆசைப்பட்டது, காதலித்தது ஷிவாவை. அவர் முகத்தை இல்லை." அவனுடைய விரல்களை விலக்கினாள். சிதைந்திருந்த முகத்தைப் பார்த்தாள். குனிந்தாள். பிரிந்திருந்த இதழ்களில் முத்தமிட்டாள்.

தையலிட்டு காலையில் பாண்டேஜ் விலக்கப்பட்ட கன்னத்து தழும்பில் ஈரம் பண்ணினாள்.

"ஐ லவ் யூ ஷிவா... இன்னொரு பக்கத்தையும் கோரம் பண்ணிக் கொண்டாலும் ஐ லவ் யூ!"

ஷிவாவின் கண்கள் நனைந்தன. அவள் கழுத்துக்குப் பின்னே கை கொடுத்து அருகில் இழுத்தான். முகத்தோடு பொருத்திக் கொண்டான். அவள் மூச்சை முகர்ந்து பார்த்தான். அவளை நகர்த்தி அவள் கண்களை ஆழமாகப் பார்த்தான். 'இந்த முகத்தைக்கூட இவளால் எப்படிக் காதலோடு வருட முடிகிறது?' உணர்ச்சிகள் தொண்டையில் நிரம்பின. காதுகள் சூடாயின. மண்டைக்குள் திடீர் இரத்தம் பாய்வது போலிருந்தது. கண்களை இருட்டிக் கொணடுவந்தது. ஐயையோ, பிளாக் அவுட் ஆகப்போகிறதா?

**சுபா**

நர்மதா அவன் முகத்தை நெருக்கத்தில் ஆராய்ந்து, "இப்பொழுதும் அழகாய்த்தான் இருக்கிறீர்கள் ஷிவா...." என்று சொன்னபோது, ஒரு எழுத்துக் கூட அவனுக்குப் பதிவாகவில்லை. முற்றிலும் நினைவுகள் அற்று சில நொடிகள் கடந்துபோயின.

சுற்றி இருந்த எதுவும் உறைக்கவில்லை.

ஆனால் சில நொடிகளிலேயே சகஜ நிலைக்குத் திரும்பிவிட்டான். நர்மதாவிடம் சொல்லிப் பயமுறுத்த விரும்பவில்லை.

"அம்மா எப்படியிருக்கிறாள் நர்மதா?"

"வெளிச்சத்திலேயே பார்வை மங்கி விட்டது. மற்றபடி தெளிவாக இருக்கிறாள். சோகம் இல்லை. சோர்வு இல்லை."

"இன்னும் சில வாரங்கள்தான் நர்மதா. என்னுடைய கடைசிப் பயணத்திற்கு முன்னால் அம்மாவிடம் ஆசீர்வாதம் வாங்க வருவேன் என்று சொல்."

"என்னிடம்?" நர்மதா கிறக்கமாய்க் கேட்டாள்.

அவள் கூந்தலில் விரல்களைச் செலுத்தி அருகில் இழுத்து உதடுகளைத் தொட்டுக் காட்டினான் ஷிவா.

ஷிவா கண்களை மூடிக்கொண்டான். நர்மதாவைப் பார்க்கப் பார்க்க அவனுள் ஊற்றெடுக்கும் காதலும் பாசமும் அவனுக்கு அச்சத்தைத் தந்தன.

வேண்டாம்! உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காதே! உணர்ச்சிகளுக்கு அடிமையானால் அப்புறம் எடுத்த காரியத்தைத் தைரியமாக நிறைவேற்றத் தடைபோடும் இந்த மனசு.

அவன் மீண்டும் மீண்டும் நர்மதாவைப் பார்த்துப் புன்னகைத்தபோது அதில் காதலை விட விடைபெறுதலே அதிகம் இருந்தது.

(○—வரும்—○)

---

# கவியரசுவின் சுயசரிதை

## 36

**கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

"அந்தக் கைகளை நான் அறிவேன். சமயம் வரும்!" என்றவர் சொல்லிவிட்டுத் தீர்மானங்களை ஒத்தி வைத்தார். அதோடு பொதுக் குழுவையே ஒத்திவைத்தார்.

அன்று மாலை, வேலூர் கோட்டை மைதானத்தில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. அண்ணாதுரை, சம்பத், கருணாநிதி எல்லோரும் அதில் கலந்து கொள்வதாக இருந்தது. மாலையில் ஊர்வலமும் வைத்திருந்தார்கள். சம்பத் ஆதரவாளர்கள் யாரும் ஊர்வலத்திற்கோ கூட்டத்திற்கோ போகவில்லை. அன்று மாலையே எல்லோரும் புறப்பட்டுச் சென்னை வந்து சேர்ந்தார்கள்.

சென்னைக்கு வந்தவுடன் கட்சித் தோழர்கள் பலர் அவனை வந்து சந்தித்தார்கள். வேலூரில் நடந்தது பற்றி யாருமே விசாரிக்கவில்லை. அப்படியொரு நிகழ்ச்சி நடந்த செய்தியும் அந்த நேரம் வரை பத்திரிகைகளில் வரவில்லை. பத்திரிகைக்காரர்கள் பலபேருக்கும் அந்தச்செய்தி தெரியாது. முதன் முதலில் இந்தச் செய்திகளையெல்லாம் படித்து அறிந்தவர் 'நவ இந்தியா' நிருபர் நமசிவாயம். நவ இந்தியாவின் அன்றைய மாலைப் பதிப்பில் எட்டுக் காலம் தலைப்பில் தி.மு.க. அவைத்தலைவர் பதவியில் இருந்து சம்பத் ராஜிநாமா' என்று போட்டு பொதுக்குழு நிகழ்ச்சிகளை விவரித்தார் அவர்.

அந்தப் பத்திரிகை வந்த மாலை நேரத்தில் தேனாம்பேட்டை ஆலையம்மன் கோவில் திடலில் ஒரு பொதுக் கூட்டம், அதில் அவன் பேசிக்கொண்டிருந்தான். சூசகமாகச் சில விஷயங்களை அவன் வெளியிட்டான்.

கூட்டத்தார் அதைப் புரிந்துகொள்ளவில்லை. காரணம், பலபேர் அப்போது பத்திரிகையைப் பாராதவர்களாக இருந்தார்கள். கூட்டம் முடிந்து வீடு செல்லும்போது பல கடைகளின் முன்னால் கூட்டங் கூட்டமாக நின்று மக்கள் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்கள்.

அறைக்குள் நடந்தது அம்பலத்திற்கு வரத் தொடங்கிற்று! பத்திரிகை நிருபர்கள் அன்று இரவு சம்பத் வீட்டை முற்றுகையிட்டார்கள். மறுநாள் காலைப் பத்திரிகைகளில் வேலூர்ப் பொதுக்குழுச் செய்தியே பிரதானமாக இருந்தது. அன்று மாலை 'நம்நாடு' பத்திரிகையில் சம்பத்தின் ராஜிநாமாக் கடிதத்தைப் பிரசுரித்து–அவரேதான் விரும்பி ராஜிநாமாச் செய்தாரென்றும், வற்புறுத்தப்பட்டதாகச் சொல்வது பொய்யென்றும், கலவரம் எதுவும் நடக்கவில்லையென்றும் குறிப்பெழுதியிருந்தார்கள்.

சம்பத் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

"பெரியாரை- மடாதிபதிபோல் நடத்துகிறார் என்று குற்றஞ்சாட்டி நாம் வெளி வந்தோம். அந்த மடாதிபதியை விட்டு வெளி வந்தது, இந்த மடாதிபதிக்குப் பட்டங் கட்டுவதற்கு அல்ல..." என்று சம்பத் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். கட்சியில் ஜனநாயகம் அவமதிக்கப்பட்டுவிட்டது. எந்தத் தனிமனித ஸ்துதியை அண்ணாதுரை வெறுத்து எழுதி வந்தாரோ, அந்த ஸ்துதிக்குத் தான் ஆளானபோது அதை விரும்பத் தலைப்பட்டுவிட்டார். ஆகவே அவர் விரும்பாத கருத்தைச் சொல்கிறவன் அவருக்கும் கட்சிக்கும் எதிரியென்றும் அவன் உதைக்கபட வேண்டியவனென்றும் அவருக்குத் தூபம் போடுகிற பூசாரிகள் கீழ்மட்டத்தொண்டர்களைத் தூண்டி விடுகிறார்கள். வேலூர்ப் பொதுக்குழுக் கலவரம் திட்டமிட்டு நடந்ததே தவிர, இயற்கையாக எழுந்தது அல்லவென்றும் சம்பத் தனது அறிக்கையில் கூறியிருந்தார்.



அதற்கு அண்ணாதுரையின் மறுப்பு வெளி வந்தது. அவனும் தனது பத்திரிகையில் அது பற்றி எழுதியிருந்தான். கட்சித் தொண்டர்களிடையே பீதியும் பரபரப்பும் பயமும் தோன்றத் தொடங்கின. நாலைந்து நாட்கள் இந்த அறிக்கைப் பரிமாற்றம் நடந்த பிற்பாடு அண்ணாதுரைக்கும் சம்பத்துக்கும் இடையே சமரசம் காண சிலர் முயன்றார்கள். அவர்களில் உண்மையாகவே சமரசத்தில் ஆர்வம் காட்டியவர் திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களாகும்.

அண்ணாதுரை அப்போது காஞ்சியில் இருந்தார். அவரைச் சுற்றியிருந்த சில பூசாரிகள் சமரசமே கூடாதென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களிடமிருந்து அண்ணாதுரையைப் பிரித்து எப்படியும் தான் கொண்டுவந்து விடுவதாகவும், ஒரு பொது இடத்தில் இருவரும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யும் படியும் திரு.கோவிந்தசாமி தொலை பேசியில் கூறினார். முதலில் சம்பத் அதற்கு இணங்கவில்லை. அவனும் இரண்டொரு நண்பர்களும் வற்புறுத்தியதன் பேரில் சம்பத் இணங்கி வந்தார்.

எங்கே சந்திப்பது என்று பிரச்சனை வந்தபோது-எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் ஒரு வீட்டைத் தான் ஏற்பாடு செய்வதாக அவன் கூறினான்.

அதன்படி சன் தியேட்டருக்கு எதிரேயுள்ள பாலமந்திருக்குப் பக்கத்துத் தெருவில்-அபிபுல்லா ரோடு வந்து சந்திக்குமிடத்தில் இருந்த ஒரு நண்பரின் வீட்டை ஏற்பாடு செய்து, அதன் விலாசத்தையும் காஞ்சியிலிருந்த ஏ.கோவிந்தசாமிக்குத் தெரிவித்துவிட்டான்.

ஐந்து மணிக்கெல்லாம் அந்த விலாசத்துக்கு வந்துவிடுவதாக அவர்களும் கூறினார்கள்.

(சரிதம் தொடரும்)

# பிடித்துவிட்டது

பாஸ்கருக்கு சுகந்தியைப் பார்த்த உடனே பிடித்து விட்டது.

பாஸ்கரின் அப்பா, அம்மா மற்றும் உடன் வந்திருந்த அனைவருக்கும் சுகந்தியைப் பிடித்துப் போனதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

"அப்புறம்... விஷயத்துக்கு வருவோமா? எங்க மகன் மில்லில வேலை பார்க்கிறது ஏற்கனவே உங்களுக்குத் தெரியும். அதனால..."

"மில்லில் வேலை செய்யறவன் சைக்கிள்ல... அதுவும் புது சைக்கிள்ல போறது தான் கொஞ்சம் கவுரவமா இருக்கும்னு உங்களுக்குத் தெரியும்... அதனால..."

அப்பாவைத் தொடர்ந்து அம்மா



ராமன்

ஆரம்பிக்க... அம்மாவைத் தொடர்ந்து அப்பா ஆரம்பிக்க, அப்பாவைத் தொடர்ந்து...

ஒரு கட்டத்தில் பாஸ்கருக்கு வெறுத்துப் போயிற்று.

நிறுத்துங்க! என்னைப் பொண்ணு பார்க்கக் கூப்பிட்டு வந்தீங்களா? இல்லை, என்னைவச்சிக்கொண்டு பேரம் பேசக் கூப்பிட்டு வந்தீங்களா?"

அவன் கத்தின கத்தலில் அத்தனை பேரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

சுகந்தியின் தந்தை பக்கம் திரும்பினான் பாஸ்கர்.

"இதோ பாருங்க..... உங்க பொண்ணை எனக்குப் பிடிச்சிருக்கு. அது போதும் நினைக்கிறேன். எனக்கு சீதனம் அது இதெல்லாம் பிடிக்காத விஷயம்... நானும் அக்கா, தங்கச்சி கூடப் பிறந்தவன்தான். என்னோட ரெண்டு அக்காவை கல்யாணம் பண்ணிக் குடுக்கறதுக்கு எங்கப்பா எப்படியெல்லாம் கஷ்டப் பட்டார் என்பது எனக்குத் தான் தெரியும். அந்தக் கஷ்டம் என்னால இன்னொருத்தருக்கு வரக்கூடாது என்பது தான் என் விருப்பம். அப்புறம் உங்க இஷ்டம்!"

சுகந்தியின் அப்பா நெகிழ்ந்து போனார், 'இந்தக் கலியுகத்தில இப்படி ஒரு பிள்ளையா?'

"ஏம்மா! நம்ம ரெண்டு அக்காவையும் கட்டிக் குடுக்கறதுக்க நாம பட்ட கஷ்டம் தெரிஞ்சுமா இப்படி நடந்துக்கறீங்க!"

அப்பாவும், அம்மாவும் மவுனமாய்த் தலை குனிந்தனர்.

அந்த மவுனம் மறுப்பே சொல்ல முடியாத சம்மதத்திற்கு அறிகுறியானது.

வீட்டிற்கு வந்ததும் அப்பா வெடித்தார்.

"பெரிய சீர்திருத்தவாதின்னு நினைப்பா உனக்கு?"

சிரித்தான் பாஸ்கர்.

"அப்பா உங்களுக்கு வயசு வளர்ந்த அளவுக்கு. அனுபவம் இல்ல.."

முறைத்தார்.

"உலகம் புரியாதவங்களா இருக்கீங்களேப்பா. இத்தனை பவுன் போடணும். இத்தனை ஆயிரம் ரொக்கம் வேணும்னு கறாராக் கேட்டோம்னு வச்சிக்கங்க. அதுக்கு அவங்க சம்மதிச்சாலும், மனசுல ஒரு விரோதம் வளர்ந்துக்கிட்டே இருக்கும். நாம சீதனம் எதுவும் வேண்டாம்னு சொன்னா, நம்ம மேல ஒரு மதிப்பு வரும். இவ்வளவு நல்ல மனுஷங்களான்னு நினைச்சி; பத்து பவுண் செஞ்சு போடுறதா அவங்க முடிவெடுத்திருந்தாக்கூட, கஷ்டப்பட்டு கடன் அது இதுன்னு வாங்கி, கூட அஞ்சி பவுண் போட்டு விடுவாங்க. எனக்கு மனைவியா வரப் போறவளும் காலம் முழுவதும் நன்றியோட என்னை நினைச்சுக்கொண்டிருப்பா. இதாணப்பா மேரேஜ் சைக்காலஜி!"

ஆ...இப்படி ஒரு ஐடியாவா...? மகனை அசந்து போய் நோக்கினர் பெற்றோர்.

# வக்ரங்கள்

ரஹ்மத் பாத்திமா மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தாள். அவளுக்கு அது புது அனுபவம். நாற்பது வயதைக் கடந்த பிறகு! நான்கு பிள்ளைகளையும் ஒரு வகையாகக் கரை சேர்த்தபிறகு....!

வெளிக் கதவைத் திறந்து பார்த்தாள். அவளது கணவன் பஹீர் அஹ்மது இன்னும் வரவில்லை. வெளித் தாழ்வாரத்துக்கு வந்து நின்று, தெருக்கோடிவரை ஊடுருவினாள். அவரைக் காணோம்.

அவளுக்கு, அவளுடைய உணர்வு வெளிபாடு குழந்தைத்தனமாகக்கூடப் பட்டது. பரீட்சைக்குச் செல்லும் பள்ளிக்கூடக் குழந்தை போன்ற பரபரப்பு! பக்குவப்படாதவர்களின் துறுதுறுப்பு! ஆனால், அவள் அதிலும் ஒரு இன்பம் கண்டாள்... திருப்திப்பட்டாள்!

பஹீர் அஹமது, கோடி வீட்டு ஹுஸைனிடம் சென்றிருந்தான். அந்த ஊரில், ஒரு காலத்தில் அவர் கொடிகட்டிப் பறந்த பணக்காரர். இப்போதும் யானை படுத்தால், குதிரை உயரம் என்ற நிலைதான். அவரது கடையில், வேலை பார்க்காத ஊர்க்காரர்கள் குறைவு! பஹீர் அஹ்மதும் அவரிடம்தான் வேலை பார்த்தான், பத்து வயதிலிருந்து. இருபத்தெட்டு வயதில் திருமணம் முடித்து, ஒரு பிள்ளை பெறும்வரையிலும் அவரது கடையில்தான் வேலை.

வாழ்க்கைச் செலவுகள் அதிகமான பிறகு, அதிக வருமானம் கருதி, இடையில் சில வியாபார முயற்சிகள் இரண்டாண்டுகளுக்கு! தோல்வி! மறுபடியும் அவரிடமே சரண்! அப்புறம் ஒரு பதினான்கு ஆண்டுகள். கிட்டத்தட்ட ஆயுட்காலம் முழுதும் அவரிடமே வேலை பார்த்த சாதனை!

பிள்ளைக்குட்டிகள் பெரியவர்களாகி அவர்களுக்கு 'நல்லது' செய்யவேண்டிய அழுத்தம். ஆயிரக்கணக்கில் சீர்வரிசை பணமாகக் கைக்கூலி! எங்கே போவான்? வேறு வழியில்லாமல், எல்லாரும் போகிறார்களே என்று அவனும் வெளியூருக்குப் போனான். அல்லாஹ் ரஹ்மத்துச் செய்தான். பரக்கத்தைக் கொடுத்தான். நான்காண்டுகளில் இப்போது அவனும் ஒரு புள்ளி; அந்த ஊரில் அவனுடைய வீடும் குறிப்பானது!

ரஹ்மத் பாத்திமா தன் கழுத்தைத் தடவிப் பார்த்தாள். வடம் வடமாக தங்கச் செயின்கள்! கைகளில் நிரம்பி வழியும் தங்க வளையல்கள்! நாற்பது வயதுக்குப் பிறகு-பேரன் பேத்தி எடுத்த பிறகு-தங்கம் போடுவது, அதிலும் இவ்வளவு அதிகமாகப் போடுவது ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது! பார்ப்பவர்கள் ஒரு மாதிரி நொடிக்கத்தான் செய்கிறார்கள்!

அதற்காக...? 'அப்போது போடுவதற்கு இல்லை; போடவில்லை! இப்போது இருக்கிறது. போடுகிறேன்! யார் என்ன நினைத்தால் எனக்கென்ன?' என்ற மனநிலை வந்துவிட்டது இப்போது.

பஹீர் அஹ்மதும் அவளது செழிப்பைக் கண்டு மகிழ்ச்சியடைகிறான். பூரித்துப் போகிறான்!

ரஹ்மத் பாத்திமா மீண்டும் வெளியே வந்து தெருவைப் பார்த்தாள். பஹீர் அஹ்மது இன்னும் வரவில்லை.

ஹுஸைன் முதலாளி அவனைக் கூப்பிட்டு விட்டிருந்தார்!

ஏதோ பண நெருக்கடியாம். வியாபாரத்தில் சிக்கலாம். ஒரு இலட்சம் கைமாற்றுக் கேட்கிறார்! கையில் பணமிருந்தது. ஒரு தென்னந் தோப்பு வாங்குவதற்கான பணம். பஹீர் அஹ்மது வந்து மனைவியிடம் ஆலோசனை கேட்டான். "உடனே கொண்டுபோய்க் கொடுத்துட்டு வாங்க!" என்றாள்.

பிறகு?

இவ்வளவு பெரிய பணக்காரர்-குடும்பத்துக்கே ஆதரவாய் நின்றவர்- கைமாற்றுக் கேட்கிறார். உதவி செய்ய வேண்டாமோ? அவருக்கே கடன் கொடுக்கும் அளவுக்கு தங்கள் நிலை உயர்ந்துள்ளது, ரஹ்மத் பாத்திமாவுக்குள் ஒரு கிளுகிளுப்பை ஏற்படுத்தியிருந்தது. நிலை கொள்ளாமல் தவிக்கச் செய்திருந்தது.

அவள் மறுபடியும் கதவைத் திறந்து வெளியே வருவதற்கும்- பஹீர் அஹ்மது கேட்டைத் திறந்து வீட்டுக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.



"என்னங்க... பணத்தைக் கொடுக்கலியா?" என்று வியப்போடு கேட்டாள் ரஹ்மத் பாத்திமா, புருஷனின் கையில் பணம் கொண்டுபோன பையைப் பார்த்தவாறே!

அவனது முகம் சோர்ந்து கிடந்தது.

"இல்லை!" என்று சைகை செய்தான்.

"ஏன் என்னாச்சு? முதலாளி ஊட்ல இல்லியா?"

"இருந்தாரு. ஆனா..." அவள் புருஷனையே பார்த்தாள். அவளால் எதையும் யூகிக்க முடியவில்லை. எல்லாம் புதிராகவே இருந்தது.

"சும்மா இருந்தா எப்படிங்க... என்ன நடந்ததுன்னு சொல்லுங்களேன்!" அவசரப் படுத்தினாள் ரஹ்மத் பாத்திமா.

"உண்மையில அவருக்குப் பணத்தேவையிருக்கிறதாத் தெரியல பாத்திமா!"

மவுனமாக அவனையே பார்த்தாள். அவன் தொடர்ந்தான்.

"வீட்டுக்குப் பக்கத்துல போனப்போ பேச்சுச்சத்தம் கேட்டுச்சு! அடிக்கடி நம்ம பேர் அடிபட்டதுனால வெளியிலேயே நின்னேன்...." அவன் கதை போலச் சொன்னான்.

"பேப்பபயகிட்ட காசு குமுஞ்சு போய்க் கெடக்கு மச்சான். என்ன செய்யிறதுன்னு தெரியாம, மடப்பய கெழட்டுப் பொண்டாட்டிக்கு வடம் வடமா நகை செஞ்சு மாட்டுறான்! அதான் ஒரு திட்டம் போட்டு, அவன் காசக் கைப்பத்த வழிபண்றேன்னாரு அவரு மச்சினன்கிட்ட....!"

ஹிமானா சையத்

ரஹ்மத் பாத்திமாவின் முகம் இருண்டது.

"நெசமாவா?"

"ஆமா! எங்காதால கேட்டேன்! அப்படியே உள்ளே நுழைஞ்சு, முகத்துல காரித்துப்பலான்னு ஒரு வெறி! ரொம்ப கஷ்டப்பட்டு அடக்கிக்கிட்டு வந்துட்டேன்."

அவன் முகத்தில் அபரிமிதமான சோர்வு; சோகம். இருவரும் கொஞ்சநேரம் ஒன்றுமே பேசவில்லை. உணர்வுகள் மரத்துப் போன மாதிரி ஒரு சோர்வு நிலை. உலகம் இவ்வளவு வக்ரமானதாய் இருக்கிறது? இதை வைத்துத்தான் மனிதன் வாழவும் விடமாட்டான்; சாகவும் விடமாட்டான் என்றார்கள் போலிருக்கிறது!

கொஞ்ச நேரம் கழித்து, "இந்தா... இதக்கொண்டு போயி பெட்டிக்குள்ளே வையி!" என்று பையை நீட்டினான் பஹீர் அஹ்மது.

அவள் அதை வாங்கவில்லை. "வேண்டாம்! நாம இந்தப் பணத்தக் கொடுக்க நெனச்சது உதவியாத்தான்! கஷ்டப்படுற ஒருத்தருக்கு கைமாத்தாக் கொடுக்கத்தான்... நம்மளோட நிய்யத்து சுத்தமானது.. அதுக்கான பலன், நமக்கு நிச்சயமா அல்லாகிட்டேயிருந்து வந்து சேரும்! மத்தவங்க நிய்யத்து நெனப்பு வேற மாதிரி இருந்தா, அதுக்கு அல்லா தண்டனை கொடுத்துக்கிடுவான். அதப்பத்தி நாம ஏன் கவலைப்படணும்? போங்க... போய்க்கொடுத்துட்டு வந்திடுங்க!" என்றாள் உறுதிபட.

"நம்மளப்பத்தி இவ்வளவு கேவலமா அந்த ஆளு நெனச்சிருக்கையில...?" அவன் தயங்கினான்.

"பரவாயில்லே அவரு நெனப்பு என்னங்கிறதத்தான் அல்லா நமக்குத் தெரியப் படுத்திட்டான்ல...இனிமே ஜாக்கிரதையா இருந்துக்குங்கன்னு அல்லா நம்மை எச்சரிக்கை செஞ்சிட்டான்! அதுதான் அவனோட கருணா! போங்க... தயங்காம போயி இதக் கொடுத்துட்டு வந்துடுங்க. மத்தத பெறகு பார்த்துக்குவோம்!"

பஹீர் அஹ்மது மனைவியை அழுத்தமாகப் பார்த்தான். அவள் சொல்வது சரியாகவேபட்டது. மறுபடியும் அவன் அந்தப் பையுடன், ஹுஸைன் முதலாளி வீட்டை நோக்கிச் சென்றான்.

ரஹ்மத் பாத்திமா இப்போது பரபரக்கவில்லை; துறுதுறுக்கவில்லை. ஆனால் அவள் மனம் பக்குவப்பட்டிருந்தது. உலகை-அதன் யதார்த்தப் போக்கை அளவிட்டுவிட்டது போன்ற தெளிவேற்பட்டிருந்தது! வினயமாய் உறுதி பெற்றிருந்தது. மனித வக்ரங்களைப் புரிந்து கொண்டிருந்தது!

# அப்பா

எனக்கு இப்ப ஐஞ்சு வயசு. எனக்கு ஒரு வயசு இருக்கும்போதே அப்பா செத்துப் போயிட்டாராம். அப்ப நாங்கள் இருந்த இடம் வேற. அங்க திடீரெண்டு சுத்தி வளைப்பு நடந்ததாம்.

அம்மாவும் அப்பாவும் என்னைத் தூக்கிக்கொண்டு ஓடிவாறபோது அப்பாவை மறிச்சுப் போட்டார்களாம். அப்பாவோட வேற ஏழெட்டுப் பேரையும் கூட்டிக் கொண்டுபோய் வயலுக்க வைச்சுச் சுட்டுப் போட்டார்களாம். ஊர்ச்சனத்தோட இரவு முழுக்க அம்மாவும் வயல் வெளியில் இருந்து அழுதுகொண்டே இருந்தாவாம். விடியப்புறமாக செத்துப் போனவையை அங்கேயே வச்சு எரிச்சுப்போட்டு நடந்தே இங்க வந்திட்டினமாம்.

அம்மா அழுதுகொண்டே என்னையும் தூக்கிக்கொண்டு இங்க வந்து அம்மம்மாவையளோட இருந்திட்டாவாம். அம்மம்மாவையள் கதைக்கிறதிலயிருந்துதான் நான் இதையெல்லாம் அறிஞ்சிருக்கிறன். அம்மாவைப் பார்த்துப் பார்த்து அம்மம்மா கவலைப்படுவா.

"வயசு போனனாங்கள் இங்க நிலத்துக்குப் பாரமாய் இருக்க வாழுற வயசுள்ளதுகளை கடவுள் கொண்டு போகுதே... இருபத்தாறு வயசில இப்பிடி இருக்கிறாளே...!" எண்டு அம்மம்மா அழுவா.


அப்ப எனக்கும் அழுகை வரும். மற்ற அம்மாக்களைப்போல என்ர அம்மாவும் சிரிச்சு சந்தோசமாய் இருந்தால் பார்க்க எவ்வளவு நல்லாய் இருக்கும்!

அம்மா நல்ல சீலை கட்டி ஒரு இடமும் போறதில்லை. பாமினி அன்ரியின்ர கல்யாண வீட்டுக்குப் போய் அம்மா முன்னுக்கே வரேலை. குசினிப் பக்கம்தான் நிண்டவ. நான் முன் பந்தலுக்க இருந்தவையளுக்க அம்மாவைக் காணாமல் தேடிப்போக பின்னால பாயாசம் காய்ச்சிக் கொண்டு நிற்கிறா. எனக்குக் கோபமும் அழுகையும் வந்திட்டுது.

மற்ற ஆட்கள் மாதிரி நல்ல சீலை கட்டி, பொட்டு வைச்சு தலையில பூவும் வைச்சால் அம்மாவைப் பார்க்க எவ்வளவு வடிவாய் இருக்கும். ஆனா அப்பிடி இருக்கிறேல்லை. அவ வீட்டை விட்டுக்கூட வெளிக்கிடுறேலையே... நான் எங்க போறதெண்டாலும் சின்னமாமாவும் தாசன் மாமாவும்தான் என்னைக் கூட்டிப்போவினம்.

கோயில் திருவிழா பார்க்கவும், மினி தியேட்டரில படம் பார்க்கவும் அவையோட தான் போறனான். அம்மாக்கு என்னில நல்ல விருப்பமும் ஆசையும்தான். நான் என்ன கேட்டாலும் தருவா. ஆனா அம்மா பார்த்து பார்த்து எது செய்தாலும் அப்பாவும் இருந்தால்தானே சந்தோசம்!

ரஜீவனும் வேந்தனும் தங்கட அப்பாவோட விளையாடுற கதையெல்லாம் சொல்லுவினம். கேட்கிறநேரம் எனக்கு எவ்வளவு கவலையாய் இருக்கும். எனக்கும் விளையாட மாமாமார் இருக்கினம்தான்.



வெண்ணிலா சூரியகுமாரன்–வன்னி

ஆனா அப்பா மாதிரி வருமே...? நான் கவலை வாற நேரத்தில அப்பான்ர படத்துக்கு முன்னால நிண்டு பார்த்துக் கொண்டிருப்பன்.

அப்பாவைச் சுட்டவர்களில்தான் எனக்கு கோவம் வரும். அவங்கள் சுடும் வரைக்கும் அப்பா ஏன் பார்த்துக்கொண்டு நிண்டவர் எண்டுதான் நினைப்பன்.

எனக்கு இந்த வீட்டில ஒரு குறையும் இல்லைத்தான்.

கொஞ்ச நாளாய் எங்கட வீட்டில ஒரு மாற்றம் தெரிஞ்சுது. அம்மா கொஞ்சம் சிரிச்சு சந்தோசமாய் இருக்கிறா. சின்ன மாமா நேற்று என்னைத் தூக்கி மடியில வைச்சுக்கொண்டு சொன்னவர்- "ஜனாக் குட்டிக்கு அப்பா வரப் போறார்...." எண்டு. அய்..... எனக் கெண்டால் ஒரே சந்தோசம்.

"ஆர் மாமா...?"

"இனி சூரி மாமா எண்டு கூப்பிடக் கூடாது. அவரை அப்பா எண்டுதான் கூப்பிடவேணும்!" தாசன் மாமா சொன்னார். நான் அம்மாட்ட ஓடிப்போய் "இனி சூரி மாமாதான் அப்பாவாம். மாமா சொல்லுறார்," எண்டு சொல்ல அம்மா ஓம் எண்டு தலையாட்டினா.

நான் அம்மாவின்ர மடியில படுத்துக் கொண்டு "அப்ப இனி என்னை ஒருத்தரும் அப்பா இல்லாத பிள்ளை எண்டு சொல்ல மாட்டினம். என்னம்மா?" எண்டு கேட்டன். அம்மா இல்லை எண்டு தலையாட்டினா.

இந்த விஷயத்தை... எனக்கு அப்பா வரப்போற விசயத்தை ரஜீவன், வேந்தன், பார்த்தி எல்லாருக்கும் சொல்ல வேணும்.

★★★

எங்கட வீட்டில் அப்பா வந்தாச்சு. சூரி மாமாவை நான் இப்ப அப்பா எண்டு கூப்பிடப் பழகியிட்டன். அப்பாவை நிமிர்ந்து தான் பார்க்கவேணும். அவ்வளவு உயரம். சிரிச்ச முகத்தோட இருப்பார். எனக்கு முந்தியும் அவரில நல்ல விருப்பம்தானே! இப்ப இன்னும் விருப்பம் கூடியிட்டுது. என்னைத் தோளில தூக்கித் திரிவார். மேல தூக்கி எறிஞ்சு போட்டு டக்கெண்டு பிடிப்பார். காத்து முகத்தில விசுக்கெண்டு அடிக்கும். நான் அவற்ர கழுத்தை ஆசையோட இறுக்கிப் பிடிச்சுக் கொள்ளுவன்.

என்னோட ஒளிச்சு விளையாடுவார். நான் இருக்கிற இடத்தைக் கண்டிட்டும் காணாதது மாதிரித் தேடுவார். "ஜனாவை எங்க காணேலை?" எண்டு தேடுவார்.

நான் 'அப்பா அப்பா' எண்டு செல்லம் கொஞ்சுவன், அப்பா இறுக்கி என்ர முகத்தில கொஞ்சுற நேரம் அவற்ர மீசை குறுகுறு வெண்டு குத்தும். ஆனா அதில எவ்வளவு சந்தோசம் இருக்கும் எண்டு எனக்குத் தெரியும்.

ரஜீவனுக்கும் வேந்தனுக்கும் போல எனக்கும் அப்பா வந்தாச்சு. இனி என்ர பிறந்தநாள் எல்லாம் அப்பாவோட கொண்டாடலாம். அப்பா வந்த பிறகு எங்கட வீடே சந்தோசமாய் மாயிட்டுது. மோட்டார் சைக்கிளில் இருந்து அப்பா வேகமாய்ப் போகும் போது பார்க்கவே வடிவாய் இருக்கும்.

அப்பா வந்த பிறகு நான் மட்டும் இல்லை அம்மாவும் மாறியிட்டா. அம்மா இப்ப பொட்டு வைக்கிறவ. வடிவான சீலை எல்லாம் கட்டுவா. கோயிலுக்கு எங்களோட வருவா. சொந்தக்காரர்ர வீடுகளுக்கும் வருவா. சிரிச்சுச் சிரிச்சு கதைக்கிறா.

எனக்கு இப்பத்தான் சந்தோசமாய் இருக்கு. இப்பிடித்தானே அம்மா முந்தியும் சந்தோசமாய் இருந்திருப்பா? அந்தச் சந்தோசத்தை அப்ப அழிச்சுப் போட்டார்கள். இப்பவும் அம்மா சந்தோசமாய் இருக்கிறா. இதையும் அழிச்சுப்போடக்கூடாது.

அழிச்சுப் போடுவார்கள் எண்டு எனக்கு இப்ப பயமில்லை. ஏனென்றால் அப்பா விடமும்....

## இலக்கிய நயம்

"காதல் ஒரு
வரம்!" என்றான்.
"ஏன்?
வரம் என்கிறாய்?"
நண்பர்கள் துளைத்தனர்!

"அவள் அருள்
இல்லையானால்
காதல் இல்லையல்லவா!

என் காதல்
அவள் தந்த வரம்!

என் வாழ்க்கையில்
அவள் நிழல் தரு மரம்!

சுவாசிக்காமல் கூட
வாழ்ந்துவிடலாம்,
அவளை நேசிக்காமல்
நிமிஷம் கூட
வாழ முடியாது!"

நண்பர்கள் அவனை
விசித்திரமாக நோக்கினர்!

"சும்மா புலம்பாதே
சுவாசிக்காமல்
உன்னால் வாழ முடியுமா?"
நண்பர்கள் நகைத்தனர்!

"முடியும்
முடிந்திருக்கிறது!"
என்றான் முனைப்பாக.

"எப்படி-அதென்ன
செப்படி வித்தை?"
வியப்போடு வினாக்கள்!

"எனக்காகவும்
அவள் சுவாசிக்கிறாள்!
எனக்காகவே
அவள் வாழ்கிறாள்!"
அவன் குரலில் பூரிப்பு.

"உனக்கு
காதல் பைத்தியம்!"
குத்தலான குரல்கள்!

"காதல்
பைத்தியம் என்று
எந்தப்
பைத்தியக்காரன்
சொல்லியிருக்கிறான்?

வாழ்க்கையை
வசீகரப்படுத்தும்
வைத்தியம்தான்
காதல்!

எந்த மருந்தும்
மனதுக்கு
மருத்துவம் செய்வதில்லை!

எந்த மருந்தாலும்
நோயாகவும்
நிவாரணியாகவும்
இருக்க முடிந்ததில்லை!



காதல்
நோயாகவும் இருக்கிறது!
காதலே
மருந்தாகவும் இருக்கிறது!

எந்த நோயும்
வாட்டும்போது
சுகமளிப்பதில்லை!

காதல் மட்டுமே
பிடித்தாட்டும்போதும்
பிடித்தமானதாக இருக்கிறது!

சுகமான நோய்
இதமான மருந்து!
பதமான வைத்தியம்!"

அவனது காதல்
விரிவுரை கேட்டு
நண்பர் குழாம்
நாவடங்கிப் போனது!

"உன் காதல்
ஓங்கி வளரட்டும்!"
உரத்து ஆசிர்வதித்தனர்!

நண்பர்களுடன்
நடத்திய விவாதத்தை
அவளிடம் சொன்னான்!
"மரத்தில் இருக்கும்வரை
பூ அழகாக இருக்கிறது!
கொய்யப்பட்டு
மாலையாகும்போதுதான்
மரியாதை பெறுகிறது!

மரத்தில் உள்ளவரை
கனி அழகாக இருக்கிறது!
கைக்கு கிடைத்து
உண்ணப்படும் போதுதான்
பயன் தெரிகிறது!

ஆணோ, பெண்ணோ
காதலிக்கப்படும்போதுதான்
ஒரு கௌரவம்
கிடைக்கிறது!"

அவளது விளக்கம்
புதுமையாக இருந்தது!

"காதலிப்பவளின்
சொற்கள் வேதம்!

இவள் உண்மையாகவே
வேதாந்தியாக
இருக்கிறாளே!"
வியந்து மகிழ்ந்தான்!

"காதல்
அறிவையும் வளர்க்கும்!

காதல்
புத்தியையும் தீட்டும்!"
என்றவன் கூறினான்.

அவள் ஆமோதித்து
தலையசைத்தாள்!

"காதல் வந்தால்
பித்துப் பிடிக்கும்
என்பது
பொத்தல் விழுந்த
கதை!"
என்றாள் தீர்க்கமாக!

"காதல்
தெளிவு தரும்!

நான் யார்?
என்பதை எனக்கு
சொல்லித் தரும்!

காதல்
இறக்கை தரும்!
தனியாக இருந்தாலும்
கனவுலகில் சஞ்சரிக்க
இறக்கை தரும்!"

அவன் சொன்னதும்
நகைத்தவள் சொன்னாள்:
"காதல்
எல்லாம் தரும்!
காதல்
எல்லாம் பெறும்!

ஒன்று கொடுத்தால்
பத்தாக
திரும்பக் கிடைப்பதும்
காதலில்தான்!

எதைக் கொடுத்தாலும்
அது உயர்ந்ததாய்
ஏற்கப்படுவதும்
காதலில்தான்!"

அவள் சொல்ல
அவன் மலர்ந்தான்!

"காதல்
எல்லாம் தரும்!
காதலி
எல்லாம் தருவாளா?"
பொடி வைத்து
வினா விதைத்தான்!

"தருவாள்
கேட்டாலும் தருவாள்
கேளாமலும் தருவாள்!"

அவன் கள்வன்
காலமறிந்து
விதை விதைப்பவன்!

"கேட்கிறேன் தா!
கோளாமலும் தா!"

என்றவன் அவளை
இழுத்தணைத்தான்!
இதழினை பிடித்து
சுவைத்தறிந்தான்!

பால் சுவையோ?-இது
பழச் சுவையோ?
தேன் சுவையோ-இது
தினை மா சுவையோ?

இனிப்பான கேள்விகள்
சிந்தைக்குள்
பிறப்பெடுத்தன!

"வதைபடும் இதழ்கள்
சுவைபெறும்
அதிசயம் எப்படி?"
அவளும் வியந்தாள்!

## அறியாதது

"விளக்கை அணைத்தால்
அணைந்துவிடும்!
தீயை அணைத்தால்
தணிந்துவிடும்!

தேகத்தை அணைத்தால்
மட்டும் காமம் எரிகிறதே!
எதுவும் தணிய
மறுக்கிறதே!"

அவனுக்குள்ளும்
ஆச்சரிய தேரோட்டம்!

எந்த நூலிலும்
இதற்கு விடையில்லை!

பெண்ணுக்குள்
புதிரை வைத்தான்
என்று ஆண் நினைப்பான்!

ஆணுக்குள்
புதிரை வைத்தான்
என்று பெண் நினைப்பாள்!

புதிர்களை
அறியாமைதான்
காமத்தில் சுவாரசியம்!

முடிவில்லாத தேடலே
காமத்தில் இன்பம்!

காதலும், காமமும்
தினமும் புதுப்பிக்கப்பட
தேடலே தேவையாகிறது!

அவர்கள்
தமக்குள் தாமே
தேடலாயினர்!

ஒருவரை ஒருவர்
இன்னொருவருக்குள்
தேடிக்கொண்டிருந்தனர்!

கற்றது கையளவு
கல்லாதது உலகளவு
என்பது
நூல் அறிவுக்கு
மட்டுமா பொருந்தும்?

செந்நிற அணிகளுடன்
செவ்வாழையாக சிரிக்கும்
இவளிடமும்
அறிந்தது துளியளவு
அறியாதது கடலளவு!"
என்று நினைத்தான்!

அவன் நினைப்பை
நியாயம் என்கிறார்
நம் திருவள்ளுவர்:

"அறிதோறு அறியாமை கண்டற்றால் -காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு"

அதிகாரம்:111, குறள்:1110

தருவது
ரசிகன்

## ஸ்போர்ட்ஸ்

## கும்ப்ளே கலக்கல்

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற 2வதும் இறுதியானதுமான டெஸ்ட் போட்டியில் இந்தியா, பாகிஸ்தானை 212 ஓட்டங்களால் தோற்கடித்தது. சென்னையில் நடைபெற்ற முதல் டெஸ்டில் பாகிஸ்தான், இந்தியாவை 12 ஓட்டங்களால் வென்றது. இதனால் டெஸ்ட் தொடர் 1-1 என்ற நிலையில் சமனானது.



2வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெல்லக்காரணமாயிருந்தவர் சுழற்பந்து வீச்சாளர் அனில் ராதாகிருஷ்ண கும்ப்ளே. 28 வயதான கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த கும்ப்ளே இரண்டாவது இன்னிங்ஸில் மொத்த விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார். இந்த 10 விக்கெட்டுக்களையும் வீழ்த்த கும்ப்ளே 74 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார்.

ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன் ஓர் இன்னிங்ஸில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் ஜஸு பட்டெல். இவர் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 69 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். 59 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இலங்கை அணிக்கெதிராக 1993-94ல் வீழ்த்தியிருந்தமைதான் இதற்கு முன் கும்ப்ளேயின் சிறந்த பந்துவீச்சாக இருந்தது.

உலகில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்திய இரண்டாவது வீரர் என்ற பெருமைக்குரியவராகியுள்ளார் கும்ப்ளே. இதற்கு முன் இங்கிலாந்தின் சுழற்பந்து வீச்சாளரான ஜிம் லேகர் 1956ம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கெதிராக 53 ஓட்டங்களைக் கொடுத்து 10 விக்கெட்டுக்களைச் சாய்த்திருந்தார்.

ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் 200க்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழத்திய ஒரே ஒரு சுழற்பந்து வீச்சாளரான அனில் கும்ப்ளே, பாடசாலையில் விளையாடிய நாட்களில் மித வேகப்பந்துவீச்சாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1990ம் ஆண்டு இங்கிலாந்து அணிக் கெதிராக தனது டெஸ்ட் வாழ்க்கையைத் தொடங்கினார்.

"சுழற்பந்து வீச்சாளர் ஒருவர் ஓர் இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருப்பது, எம்மைப் போன்ற சுழற்பந்து வீச்சாளர்களுக்கெல்லாம் பெருமையைத் தேடிக் கொடுத்திருக்கிறது." என்று உலகில் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனைக்குரிய அவுஸ்திரேலியாவின் ஷேன் வோன், அனில் கும்ப்ளேயைப் பாராட்டியுள்ளார்.

## கோபப்படாத இன்சமாம்!

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகளைத் தடுக்க சிவசேனை அமைப்பு நடத்திய போராட்டத்தை, போட்டிகள் தொடங்கும் முன்னர் அதன் தலைவர் பால் தாக்கரே வாபஸ் பெற்றுவிட்டார்.

என்றாலும் சென்னையில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் பல பாதுகாப்பு வீரர்கள் குவிக்கப்பட்டனர். மைதானத்தில் எப்போதும் இல்லாதவாறு பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டது.

இரண்டாவது டெஸ்ட் புது டில்லியில் நடந்தபோது பாதுகாப்பு வீரர்களுடன் பாம்பாட்டிகளும் மைதானத்தைச் சுற்றி வர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர். "பாம்புகளை மைதானத்திற்குள் விட்டுப் போட்டியைத் தடுப்போம்!" என்று சிவசேனை அமைப்பு முதலில் அச்சுறுத்தல் விடுத்திருந்தது.

இதன் காரணமாகத்தான் பாம்பாட்டிகள் அமர்த்தப்பட்டனர். இவர்கள் போட்டி முடியும் வரை மைதானத்தில் தங்கவைக்கப்பட்டனர். மகுடி ஊதிக்கொண்டு இவர்கள் பாம்புகளைத் தேடியதுதான் மிச்சம். ஒரு பாம்புகூடச் சிக்கவில்லை.

சிவசேனையின்மீது பழி விழத்தக்கதாக வேறு தீவிரவாத அமைப்புகளும் சதி நாச வேலை செய்யக்கூடும் என்றும் அஞ்சப்பட்டது.

எந்த அசம்பாவிதமும் இன்றி நல்லபடியாக போட்டிகள் முடிவடைந்தன. புதுடில்லியில் மட்டும் பாகிஸ்தான் வீரர் இன்சமாமை உருளைக்கிழங்கு என்று இரசிகர்கள் கிண்டல் செய்தனர்.

கனடாவில் இப்படித்தான் ஒரு இரசிகர் கிண்டல் செய்து வாங்கிக் கட்டினார். புது டில்லியில் இன்சமாம் கோபப்படவில்லை.

## சிந்தியா பதில்கள்

★ "யாழ் மாவட்டத்தில் மனித உரிமை மீறல்களில் பொலிசார் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை" என்று யாழ் மாவட்ட பொலிஸ் அதிகாரி கூறியுள்ளாரே?

எல்.செல்வகணபதி, யாழ்ப்பாணம்.

அங்கு புலி வேட்டையை ஆரம்பித்திருக்கும் தமிழ்க் கட்சிகள் சிலவற்றுடன் போட்டி போடவேண்டாம் என்று கூறியிருக்கிறார் போலிருக்கிறது.

★ இந்திய அணியில் புதிய புயல் ரமேஷ் தமிழரா?

இ.விக்னேஷ், நீர்கொழும்பு.

ஆம்! கிடைத்த சந்தர்ப்பத்தை லபக் என்று பிடித்துக்கொண்டார்.



ரமேஷ்

★ ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பை பெருமாள் காப்பாற்றுவாரா?

சி.கிரிதரன், வவுனியா.

எந்தப் பெருமாள் வந்தாலும் முடியாத காரியம்!

★ பொதுஜன முன்னணி தலைமைக்கு தேர்தல் வன்முறைகளுடன் தொடர்பில்லை; கீழ் மட்டத்தினர்தான் தொடர்பு என்று கூறப்படுகிறதே?

இ.யஸ்மின், புத்தளம்.

அப்படியா சங்கதி? அப்படியானால் கீழ்மட்டம்மீது மேல்மட்டம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே! தேர்தல் தினத்தன்று மட்டுமல்ல, அதற்கு முன்னரே வன்முறை தலைவிரித்தாடியதை பலரும் சுட்டிக் காட்டினரே! அது கூடவா தெரியாது?!

★ சிந்தியா! பொதுநலவாதிகள் குறைந்து வருவதற்கு என்ன காரணம்?

கே.ரவிசங்கர், களுவாஞ்சிக்குடி.

சுயநலம்தான் காரணம். சமீபத்தில் படித்த ஒரு பொதுநலக் கதை:

துறவி ஒருவர் தன் சீடர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது மூதாட்டியொருத்தி ஆசையுடன் கொஞ்சம் திராட்சைப் பழங்களை அவரிடம் கொடுத்தார்.

அதில் ஒரு பழத்தை சுவைத்த துறவி, தொடர்ந்து அத்தனை பழங்களையும் உண்டு முடித்தார்.

மூதாட்டிக்கு கொள்ளை மகிழ்ச்சி. திருப்தியுடன் சென்றார். அவர் சென்ற பின்னர் சீடர் ஒருவர்:

"குருவே! எதுவானாலும் பகிர்ந்து உண்பதுதானே தங்களது வழக்கம்? இன்று ஏன் அனைத்தையும் உண்டுவிட்டீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு துறவி கூறினார்:

"சீடர்களே! அன்புடன் மூதாட்டி கொண்டுவந்த திராட்சைப் பழங்கள் அனைத்தும் புளிப்பானவை. நீங்கள் யாரேனும் சாப்பிட்ட பின்னர் முகம் சுளித்தால், அந்த மூதாட்டி மனம் எவ்வளவு வேதனைப்படும். அதுதான் நானே அனைத்தையும் சாப்பிட்டுவிட்டேன்!"

★ 'ஹவுஸ்புல்' பார்த்தீர்களா? எப்படி?

வி.ராகவன், கொழும்பு-09.

விறு விறுப்பு என்றார்கள். விழுந்தடித்து எடுத்து போட்டுப் பார்த்தால் குறுகுறுப்புக் கூட இல்லை. சுமார்!

★ வவுனியாவில் ரெலோ, புளொட் மோதல் பற்றி என்ன நினைக்கிறீர்?

எஸ்.துஷ்யந்தன், வவுனியா.

ஜனநாயக சண்டை(?!)

★ தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும், நாற்காலி பைத்தியம் எதுவரைக்கும்?

எம்.அப்துல் றசாக், கம்பளை.

சுடுகாட்டுக்கும் அப்பால்!

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் ரசிய தலைவர் ஸ்டாலின், ஹிட்லர் மூன்று பேரும் சொர்க்கத்தின் வாசலில் நின்றனர்.

காவலாளி அவர்களை மறித்து, "நீங்கள் மூவரும் பூமியில் என்ன நல்ல காரியம் செய்தீர்கள்? நான் ஏன் உங்களை சொர்க்கத்துக்கு அனுமதிக்க வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு சர்ச்சில்: "பிரிட்டிஷ் மக்களது முன்னேற்றத்திற்காக நான் பாடுபட்டேன்!" என்று கூறினார்.


ஸ்டாலின்: "நான் ரசியாவை முன்னேற்ற உழைத்தேன்!" என்று கூறினார்.

அடுத்து ஹிட்லரின் முறை வந்தது: "டேய்! இது நான் அமரவேண்டிய நாற்காலி. அதில் நீ அமர்ந்து கொண்டு என்னைக் கேள்வி கேட்கிறாயா? மரியாதையாக நாற்காலியை விட்டு ஓடிப்போய்விடு!" என்று கூறியபடி காவலாளிமீது பாய்ந்தார் ஹிட்லர்.

★ சிந்தியா! புது நடிகைகள் வரவால் பலன் உண்டா?

சா.மனோகரன், குருநாகல்.

உண்டு! புதிது புதிதாய் இரசிக்கலாமே!



'சிவன்' படத்தில் அல்போன்ஸா

★ சமிபத்தில் படித்து சிரித்த தமாஷ்?

வி.சாலினி, வத்தளை.

"சைபருக்கு மதிப்பில்லை என்று நான் சொல்லிக் கொடுத்தது உண்மைதான். அதற்காக எனக்கு தரவேண்டிய ரியூசன் கட்டணத்தில் 500 ரூபாய்க்குப் பதிலாக 5 ரூபாய் கொடுக்கிறது கொஞ்சம்கூட நல்லாயில்லை!"

★ டியர் சிந்தியா! சாமியார்கள் எப்போது திருந்துவார்கள்?

மா.றொபேட், மன்னார்.

அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் கூறியது இது:

"சாமியார்கள் எப்போதும் சொர்க்கத்தில் இருப்பது தான் நல்லது. அவர்கள் பூமிக்கு வந்தால் மற்றவர்களுக்கு நரகமாக இருக்கிறது!"

★ டாக்டர்கள் சிலர் பணத்திலேயே குறியாக இருக்கிறார்களே?

எம்.பர்ஸான், கொழும்பு-14.

சத்திர சிகிச்சை செய்த ஒருத்தர் கட்டிலில் படுத்திருந்தார். அவருக்கு சத்திர சிகிச்சை செய்த டாக்டர் அவரைப் பார்த்து, "ஏன் இன்னும் படுத்திருக்கிறாய்? எழுந்து நட!" என்று கூறினார்.

"முடியவில்லை டாக்டர்!" என்றார் நோயாளி

உடனே டாக்டர்: "நானும் இதே சத்திரசிகிச்சையைத்தான் இரண்டு மாதத்திற்கு முன்னர் செய்து கொண்டேன். இரண்டே நாளில் வழக்கம்போல எழுந்து நடக்கக் கற்றுக் கொண்டேன். நானும் உன்னைப் போலத்தான். நம் இருவருக்கும் எந்த வித்தியாசமும் இல்லை!" என்று கூறினார்.

அதற்கு நோயாளி கூறினார்: "ஒரே ஒரு வித்தியாசம் இருக்கிறது. உங்களுக்கு சத்திர சிகிச்சை செய்தது வேறு டாக்டர். ஆனால் எனக்குச் சத்திர சிகிச்சை செய்தது நீங்கள்!"

★ சத்யராஜ், பிரபு மறுபடி சேர்ந்து நடிக்கப் போவதாகச் செய்தி பார்த்தேன். படத்தின் பெயர் என்ன?

ஏ.தங்கேஸ்வரன், தெகிவளை.

'மக்கள் நண்பன்'

★ 'படையப்பா' கலக்குவாரா?

ஆர்.வசந்த், முகத்துவாரம்.

அதற்கு என்ன தடையப்பா?!



'படையப்பா'வில் ரஜினி

★ குறுக்கு கேள்வி கேட்பது தவறா?

திருமதி வி.நவமணி, சிலாபம்.

கிறுக்குக் கேள்வியாக இருந்தால்தான் தவறு!

★ தமிழ் நாட்டின் அடுத்த முதல்வர் யார்?

அ.ஜெயரூபன், சுவிஸ்.

செல்வி ஜெயலலிதா என்று கூறினால் ஆச்சரியப்படுவீர்கள்!

★ எது கிடைத்தாலும் திருப்தி அடையாதவர்களை திருத்தவே முடியாதா?

என்.மர்லின், கொழும்பு-09.

ஆபிரிக்கப் பழமொழி என்ன சொல்கிறது கேளுங்கள்:

"ஒற்றைக் கண்ணன், கடவுளுக்கு நன்றி செலுத்துவதில்லை; அவன் குருடனைக் காணும்வரை!"

# திருமறை தரும் பொது நெறி 48

ஆண்டவர் அவ்வப்போது எரேமியாவுக்கு அருளும் செய்திகளை ஒன்று விடாமல் அவர் யூதா மக்களுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் கூறிவந்தார். ஆண்டவருடைய கருத்தையே அவர் கூறுவதாக மக்களிடம் தெரிவித்தபோதும் பெரும்பாலானோர் அவற்றை நம்ப மறுத்தனர்.

பாபிலோனிய மன்னரான நெபுகட்நேசரின் கட்டளைப்படி நாடு கடத்தப்பட்ட யூதா-இஸ்ரயேல் மக்களுக்கு ஆண்டவர் கூறிய அறிவுரைகளை எரேமியா கடிதமாக எழுதி அனுப்பினார். நெபுகட்நேசருடைய ஆட்சியை ஏற்று, சிறிதுகாலம் அந்நாட்டிலேயே அமைதியாக வாழும்படி தெரிவித்தார். அவ்வாறு நம்பிக்கையுடன் இருந்தால், இறைவனால் அருளப்பட்ட அவர்களுடைய நாட்டுக்கு மீண்டும் திரும்பி வந்து, மகிழ்ச்சியுடன் வாழலாம் என்றும் கூறியிருந்தார்.


யூதா மன்னர் யோசியாவின் மகனான செதேக்கியாவை, நெபுகட்நேசர் மன்னராக நியமித்திருந்தார். இருப்பினும் அவரும் எரேமியாவின் அறிவுரைகளுக்கு மதிப்புக்கொடுக்கவோ, நீதி நியாயப்படி நடக்கவோ இல்லை. சாட்டினான். எரேமியா எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவர்கள் நம்பவில்லை. எரேமியாவை அடித்து வதைசெய்து ஒரு வீட்டின் பாதாள அறையில் அடைத்து வைத்தார்கள்.

சிலகாலஞ்சென்றபின் மன்னர் செதேக்கியா தன்னுடைய ஏவலாளர்கள் சிலரை எரேமியாவிடம் அனுப்பி வைத்தார். அவரைப் பாதாள அறையில் இருந்து அழைத்து வருமாறு கட்டளையிட்டார். அப்போது, எரேமியாவின் வாக்குகள் பலித்துவந்ததை மன்னர் ஓரளவு உணர்ந்திருந்தார். ஆகவே தன் நாட்டு மக்களுக்கும் தனக்கும் என்ன நடக்கும் என்பதைக் கேட்டறியவே எரேமியாவைத் தன்னிடம் அழைத்திருந்தார்.

### உண்மை கூறுவது குற்றமா?

ஆண்டவர் ஏதாவது கூறினாரா என்று மன்னர் எரேமியாவிடம் வினவினார். எவ்வித பயமுமின்று எரேமியா, "பாபிலோனிய மன்னரிடம் நீர் அடிமைப்பட்டேயாக வேண்டும் என்பது ஆண்டவரின் தீர்ப்பு!" என்றார். அவருடைய வாக்குப் பொய்யானது என்று கருதும் துணிவு அப்போது மன்னரிடம் இல்லை.

இவ்வாறு எரேமியா கூறியமையினால் சிலர் சினமடைந்தார்கள். மன்னரிடம் சென்று முறையிட்டார்கள். "எரேமியா மக்களைக் குழப்புகிறான். எமது படைவீரர்கள் எரேமியாவின் வார்த்தைகளைக் கேட்டு மனம் தளர்ந்து போகிறார்கள். இத்தகைய துரோகியை சுதந்திரமாக உலாவ விடமுடியாது. இவன் உயிருடன் இருக்கலாகாது!" என்று அவர்கள் கூறினர். மன்னரும், இவ்வாறு பலர் வந்து கூறியதைக் கேட்டு மனம் மாறினார். எரேமி



## இறை வாக்குரைத்தவருக்கு சிறைத்தண்டனை

இக்காலகட்டத்தில் எரேமியா சுதந்திரமாக எங்கும் சென்று அருள்வாக்குரைத்தார்.

இதேவேளை எகிப்து நாட்டின் பார்வோன் எருசலேமைக் கைப்பற்றத் திட்டமிடுவதாகத் தகவல்கள் பரவின. அவ்வாறு எகிப்திலிருந்து படைகள் வருமானால், அப்படையை எதிர்கொள்ளக் கூடிய நிலை தம்மிடமில்லை என்பதனை உணர்ந்த பாபிலோனியர் எருசலேமை விட்டகன்றனர். பாபிலோனியர் எகிப்தின் படைகளுக்குப் பயந்து ஒடினாலும் மீண்டும் வந்து எருசலேமைத் தாக்குவார்கள்; நாடு நகர்ப்புறங்களுக்குத் தீ மூட்டுவார்கள் என்று எரேமியா கூறினார்.



எரேமியா ஆண்டவரின் வாக்கினையே எங்கும் எடுத்துரைத்தும், மக்களின் நல்வாழ்வுக்கான அறிவுரைகளை வழங்கிய வண்ணமும் இருந்தமையினால், அவர் தனக்கென ஒரு குடும்பச் சூழலை அமைத்துக் கொள்ளவில்லை. திருமணம் முடிக்காமல் இறை தொண்டிலேயே அவருடைய காலம் கடந்துகொண்டிருந்தது.

மன்னர் செதேக்கியா, மன்னர் நெபுகட்நேசரினாலேயே யூதாவின் மன்னராக நியமிக்கப்பட்டிருந்தபோதும், பொய்வாக்குரைஞர்களின் உரைகளைக் கேட்டு அடிக்கடி பாபிலோனிய ஆட்சிக்கெதிராகக் கலகம் செய்துவந்தார். இதனால் செதேக்கியா வெறுமனே மன்னர் என்ற பெயரில் அரியணையில் அமர்ந்திருந்தாலும் அவருடைய அதிகாரங்கள் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

### சிறைத் தண்டனை

இடைக்காலத்தில் நிலவிய ஓரளவான அமைதியான சூழ்நிலையைப் பயன்படுத்தி, எரேமியா பென்யமீன் நாட்டு எல்லையிலுள்ள- தனது குடும்பத்தாருக்குச் சொந்தமான ஆஸ்திகளையிட்டு அறிந்துவரப் புறப்பட்டார். ஏற்கனவே எரேமியாவுடன் பகை கொண்டிருந்து மரணமான பொய்வாக்குரைஞன் அனனியாவின் பேரன் இரிய்யா என்பவன் எதிர்ப்பட்டான். இரிய்யா, பென்யமின் நகர மெய்காப்பாளர்களின் தலைவனாக இருந்தான்; எரேமியாவை அடையாளம் கண்டுகொண்டான். அவனுடைய தோழர்கள் சிலருடன் சேர்ந்து எரேமியாவைப் பிடித்துக்கொண்டு போய், நகரக்காவல் அதிகாரியிடம் நிறுத்தினான்.

எவருக்கும் தெரியாமல் பாபிலோனியப் படைகளுடன் சேர்ந்துகொள்ளவே எரேமியா புறப்பட்டுச் செல்வதாக இரிய்யா குற்றஞ்சாட்டினான்.

### இராஜகுமாரன்

யாவை என்ன வேண்டுமானாலும் செய்யும்படி அவர்களிடம் கூறிவிட்டார்.

### பாழுங்கிணற்றில் எரேமியா

எரேமியாவை அவர்கள் பிடித்துக் கொண்டுபோய் அரண்மனையின் வெளியே ஒதுக்குப் புறத்திலிருந்த ஒரு பாழுங்கிணற்றில் இறக்கிவிட்டனர். தண்ணீரில்லாத- சேறும் சகதியும் நிறைந்த அக்கிணற்றுள் விடப்பட்ட எரேமியா இறைவனைத் துதித்த வண்ணம் இருந்தார்.

செதேக்கியா மன்னரின் அரசவை அதிகாரி ஒருவரான எபேது மெலேக்கு என்பவர், எரேமியாவின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்தவர். எரேமியா பாழுங்கிணற்றில் தள்ளப்பட்டதை அறிந்து பெருந்துயரடைந்தார். மன்னரிடம் சென்று எரேமியாவை பாழுங்கிணற்றில் கிடந்து சாகவிட்டால் அதனால் பெரும்பாவமும் பழியும் ஏற்படும் என்று எச்சரித்தார். எரேமியா கூறிய எந்தத் தீர்க்க தரிசனமும் பொய்த்ததில்லை என்பதனையும் எபேது மெலேக்கு மன்னரிடம் எடுத்துரைத்தார். அரசரும் எரேமியாவை அக்கிணற்றிலிருந்து வெளியேற்றுமாறு கூறினார்.

எபேது மெலோக்கு தன்னுடன் சிலரை அழைத்துக் கொண்டுபோய் எரேமியாவைக் கிணற்றிலிருந்து வெளியே எடுத்தார். மன்னர் செதேக்கியா மீண்டும் எரேமியாவைத் தன்னிடம் அழைத்து வருமாறு ஏவலர்களை அனுப்பினார். அரசருடனிருந்த அனைவரையும் வெளியேறுமாறு பணித்துவிட்டு, எரேமியாவிடம் இறைவாக்குக் கூறுமாறு கேட்டார். ஆண்டவரின் இல்லத்தின் மூன்றாவது வாயிலிலேயே இச் சந்திப்பு நிகழ்ந்தது.

"மன்னரே! நான் உண்மையில், ஆண்டவர் கூறியவற்றையே எப்போதும் கூறிவருகிறேன். நான் பொய்கூறவேண்டிய அவசியமில்லை. இப்போதும் நான் உண்மையினை உம்மிடம் கூறினால் உமக்கு என்மீது மீண்டும் கோபம் ஏற்படக்கூடும்!"

"இல்லை... நான் உமக்கு எத்தீங்கும் செய்யமாட்டேன். எனக்கு என்ன சொல்லப்போகிறீர்?"

"மன்னவரே! பாபிலோனியத் தளபதியிடம் நீர் சரணடைய வேண்டும். அவ்வாறானால் உமக்கு எத்தீங்கும் ஏற்படப்போவதில்லை. உம்மை இந்நாட்டினை ஆளும் தகுதியினை பாபிலோனிய மன்னர் நெபுகட்நேசரே அளித்தார். ஆனால் பொய்வாக்குரைஞர்களின் கூற்றையும், உம்மைப் பிழையான வழிகளில் இட்டுச் செல்வோரையும் நம்பி மென்மேலும் இறைவனின் ஆணைகளை மீறி நடக்கிறீர். பாபிலோனியரிடம் நீர் சரணடைந்தால் நீர் மட்டுமல்ல, அரண்மனையிலுள்ள அனைவரும் உயிர் தப்புவார்கள். நாடு நகரங்கள் எதுவும் சிதைத்தழிக்கப்படமாட்டாது. இறைவனின் கோவிலும் அழிவெதுவுமில்லாமல் பாதுகாக்கப்படும். இதுதான் ஆண்டவர் கூறிய செய்தி. இதிலிருந்து மாறுபட்டால் எல்லாம் எதிர்மாறாகவே நடந்து முடியும்!"

இவ்வாறு எரேமியா கூறிய வார்த்தைகளை மன்னர் செதேக்கியா அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் தன்னிடம் இக்கருத்துக்களைக் கூறியதையிட்டு வேறு எவரிடமும் எதுவும் கூறலாகாது என்று மன்னார் எரேமியாவிடம் கேட்டுக்கொண்டார்.

(தொடர்ந்து வரும்)

ஆகவே சோர்வடைந்து காணப்பட்டார்.

மன்னர் செதேக்கியாவிடம் எரேமியா இவ்வாறு கூறினார்:

"மன்னரே! என்னைப் பாழ்மண்டபத்துள் போட்டு அடைக்கவும், சிறையில் போட்டு வதைக்கவும், சவுக்கால் அடித்துத் துன்புறுத்தவும்- நான் செய்த குற்றம்தான் என்ன? இறைவன் என்னிடம் கூறிய உண்மைகளை அப்படியே உங்களிடமெல்லாம் கூறியது குற்றமா? இனிமேலாவது பாழ்மண்டபத்தில் போட்டு என்னை அடைப்பதை விட்டுவிடுங்கள்!"

எரேமியாவின் கூற்றுக்கு எத்தகைய பதிலுரைப்பது என்பது மன்னருக்கு முடியாதிருந்தது. காவலரை அழைத்து அரண்மனை முற்றத்திலேயே அவரைக் காவலில் வைத்திருக்குமாறு கட்டளையிட்டார். திறந்தவெளிக் கைதியாக இருந்த நிலையிலும்கூட எரேமியா சும்மா இருக்கவில்லை. தொடர்ந்து இறைவாக்கினைக் கூறியபடியே இருந்தார்.

"இந்நகரில் வாழ்பவர் அனைவரும் ஆண்டவரின் சாபத்திலிருந்து தப்பவே முடியாது. நாட்டில் பஞ்சம் ஏற்படப்போகிறது. பாபிலோனியப் படைகள் மக்கள் அனைவரையும் கொன்று குவிப்பார்கள். பாபிலோனுக்குச் சென்று வாழ்பவர்கள் மட்டுமே உயிருடன் இருப்பார்கள்!"

**திருமறை 46 விடை:** (அ) எட்டு வயது (ஆ) 31 ஆண்டுகள்.

**பரிசு பெறுவோர்:**

1. கே. மைய்னர்தாஸ், எல்ஜின் எஸ்டேட், லிந்துலை.
2. பி. வினாயகமூர்த்தி, தேசிகர் வீதி, கரைதீவு-10.
3. எம். ராஜா, ஸ்டொக்கோம் தோட்டம், அப்கொட்.
4. ப. சுகந்தகலா, இல. 52, பிரதான வீதி, உடப்புஸ்சல்லாவ.
5. வி. ஜெயசீலன், இல.48, பீட்டமன்டிஸ் வீதி, குடாப்பாடு, நீர்கொழும்பு.


**திருமறை 48 வினா:-** எரேமியாவை பாழுங்கிணற்றிலிருந்து மீட்டவர் யார்?

பெப். 20க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 48 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

---

## பயோ டேட்டா



பெயர் : வரதராஜப் பெருமாள்
தொழில் : அரசியல்
சாதனை : எட்டு ஆண்டுகால அரசியல் வனவாசம்.
சோதனை : புலிகளின் ஹிட் லிஸ்டில் இருப்பது!
முன்னாள் நண்பர்கள் : இந்திய அரசும் அமைதிப் படையும்.
இந்நாள் நண்பர்கள் : பொதுஜன முன்னணி.
மறக்க முடியாதது : முதல்வர் பதவி
மறக்க நினைப்பது : ஈழப் பிரகடனம்.
தற்போதைய முழக்கம் : ஐக்கிய இலங்கை.
குறிப்பிடத்தக்கது : பந்தா இல்லாமை தோழர்களை மதிப்பது. அடிமட்டத்தில் இருந்து சுயமுயற்சியில் முன்னேறி வந்தது!
இலட்சியம் : தலை முழுகியாகிவிட்டது!

---

## ரஜினியின் சிரிப்பில்

**த**ந்தை பெரியாரின் கருத்துக்கள் தற்காலத்தில் எடுபடாது என்று ரஜினிகாந்த் கூறியிருந்தார். அதனை சர்ச்சையாக்க வேண்டாம் என்று கலைஞர் கருணாநிதி கூறியிருந்தார். இதனை வைத்து கற்பனை பேட்டி ஒன்று காணுகிறார் கா.பூ.கந்தசாமி.

**கா.பூ.க:** வணக்கம்! கலைஞரே! நலம் நலமறிய ஆவல்.

**கலை:** குலம், குலமறிய ஆவல் என்று சாதிச் சண்டைகள் நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் குலம் என்பதே அழியாமல் எனக்கு நலம் என்பது எப்படி வரும்?

**கா.பூ.க:** சாதிக் கலவரத்தை அடக்கும் பலம் உங்களிடம்தானே இருக்கிறது?

**கலை:** பலம் இருக்கிறது என்பதற்காக தமிழ்நாட்டை வேட்டைக் களம் என்று நினைப்பவர்களல்ல நாங்கள்.

**கா.பூ.க:** சாதிக் கலவரத்திற்கு என்ன காரணம்?

**கலை:** மோதிக் கொள்வதுதான் காரணம்.

**கா.பூ.க:** கலைஞர் அவர்களே! ரஜினிகாந்த் தந்தை பெரியாரை இக் காலத்திற்கு ஏற்றவரல்ல என்பது போல பேசியுள்ளாரே?

**கலை:** அவர் தன் கருத்தைத்தான் கூறி உள்ளாரே தவிர, யார் மீதும் தன் கருத்தை திணிக்கவில்லை. யாவரும் அக்கருத்தை ஏற்குமாறு தம்பி ரஜினி பணிக்கவில்லை.

**கா.பூ.க:** ரஜினிக்கு நீங்கள் ஏன் பதில் கொடுக்கவில்லை?

**கலை:** அவர் என்னிடம் கேள்வியே தொடுக்காதபோது, நான் எப்படி பதில் கொடுப்பது?

**கா.பூ.க:** தந்தை பெரியாரை ரஜினி இகழ்ந்துவிட்டதாக திராவிடர் கழகம் குமுறியிருக்கிறதே?

**கலை:** பெரியாரை ரஜினி புகழவில்லை என்பதால் இகழ்ந்துவிட்டார் என்று அர்த்தமல்ல!

**கா.பூ.க:** உங்கள் முன்பாகவே ரஜினி கடவுள் கொள்கையை பிரசாரம் செய்துள்ளாரே?

**கலை:** கழகம் கடவுள் இருக்கிறது என்றும் கூறவில்லை, இல்லை என்றும் கூறவில்லை. ஒன்றே குலம். ஒருவனே தேவன் என்றார் திருமூலர். அதையே நமக்குச் சொன்னார் அண்ணா.

**கா.பூ.க:** ரஜினி பல கடவுள்களை பூஜிக்கிறார். ஒருவனே தேவன் என்பதை அவர் ஏற்கவில்லையே?



**கலை:** ஒருவனே தேவன் என்பது கழகத்தின் கொள்கையே தவிர, கறுப்புத் தங்கமாம் ரஜினியின் கொள்கை அல்ல.

**கா.பூ.க:** உங்கள் கனவில் அடிக்கடியார் யாரெல்லாம் வருகிறார்கள்?

**கலை:** தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் தான் என் கனவை பொன்னாக்குபவர்கள்.

**கா.பூ.க:** உங்கள் கனவில் அருணாச்சலேஸ்வரர் தோன்றித்தான் தனக்கு விருது கொடுக்க தூண்டியதாக ரஜினி கூறியுள்ளாரே?

**கலை:** தம்பி ரஜினி, என்னையும் தன்னையும் பிரித்துப் பார்ப்பதில்லை. அதன் காரணத்தால்தான் தன் கனவில் கண்டதை என் கனவில் வந்ததாக கூறியிருக்கிறார். இது பாசத்தால் கூறப்பட்டதே தவிர, மோசத்தால் கூறப்பட்ட கூற்றல்ல.

**கா.பூ.க:** தந்தை பெரியார், ரஜினி இருவரில் தற்போது உங்களுக்கு தேவையானவர் யார்?

**கலை:** இருவருமே எப்போதும் எனக்குத் தேவையானவர்கள்தான்! வெண்தாடி வேந்தர் பெரியார்! நண்பர் ரஜினியின் தாடியும் வெண்தாடிதான்! ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பவர்கள் நாம். ரஜினியின் சிரிப்பில் பெரியாரைக் காணும் பக்குவமும் எமக்குண்டு. நன்றி வணக்கம்!

---

## எதையும் தாங்கும் இதயம்

**த**ந்தை பெரியார் இக் காலத்திற்கு ஏற்றவரல்ல என்று ஜெயலலிதா பேசியிருந்தால், கலைஞர் என்ன கூறுவார்?

**கா.பூ.க:** வணக்கம். தந்தை பெரியார் பற்றி செல்வி ஜெயலலிதா கூறியுள்ள கருத்து தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?



**கலை:** எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா கூறிவிட்டு சென்றதால் இதையும் தாங்கிக் கொண்டிருக்கிறேன்.

**கா.பூ.க:** ஜெயலலிதா தன் கருத்தைத்தானே கூறியிருக்கிறார்?

**கலை:** தன் கருத்தை கூறினார் என்கிறீர்கள், அது வெண் கருத்தாக இல்லை, வேண்டாத கருத்தாக இருக்கிறதே!

**கா.பூ.க:** யார்மீதும் தன் கருத்தை அவர் திணிக்கவில்லையே?

**கலை:** திணிக்கவில்லை என்று கூறமுடியாது, திராவிட இயக்க எழுச்சியைத் தணிப்பதாக இருக்கிறது. ஆரிய மாயையை நம் மத்தியில் திணிப்பதற்கு காரியம் பார்க்கிறார் அந்த அம்மணி.

**கா.பூ.க:** உங்கள் கனவில்கூட ஆண்டவர் வருவதாக கூறியுள்ளாரே?

**கலை:** என் கனவில் எவர் வருகிறார் என்பதை இவர் எப்படி அறிந்தார்? தன்னை ஒரு ஞானி என்று இந்த நானிலம் நம்பவைக்க நாடகமாடுகிறார் அம்மணி.

**கா.பூ.க:** பழைய படங்களுக்கு விருது கொடுத்துள்ளீர்கள். செல்வி ஜெயலலிதா நடித்த படங்களுக்கு ஏன் தரவில்லை?

**கலை:** விருது தருமளவுக்கு அவர் படங்களில் பகுத்தறிவைப் பறை சாற்றும் கருத்து எதுவும் சிறு குருத்தாகக்கூட காணப்படவில்லை.

**கா.பூ.க:** ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது தானே உங்கள் கொள்கை?

**கலை:** ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதற்காக, நன்றே இல்லாத படங்களுக்கு விருது தர முடியாது!

**கா.பூ.க:** செல்வி ஜெயலலிதா பெரியாரை பற்றி கூறியதற்கு உங்கள் நடவடிக்கை என்ன?

**கலை:** திராவிட இயக்கத்தை காக்கும் நீண்ட நடை பயணம் ஒன்று நடத்தப்படும். ஆரிய அம்மணியின் வீரியமற்ற கருத்தை விளக்கி பொதுக் கூட்டங்கள் நடத்தப்படும்.

**கா.பூ.க:** பெரியாரை அவர் இகழவில்லை என்கிறார்களே?

**கலை:** காலத்திற்கு ஏற்றவரல்ல என்ற கூற்று இகழ்ச்சியின் உச்சியை தாண்டிவிட்டது. எங்களை இகழலாம். ஏன், என்னை எப்படி வேண்டுமானாலும் அந்த அம்மா இகழட்டும். எங்கள் திராவிட இயக்க தந்தையை நாக்கில் நரம்பின்றி இகழ்ந்ததை நம்மால் பொறுக்க முடியாது!

காதிலை பூ கந்தசாமி



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகளில் மின்னிப்பேசுகின்றன.
கிளை: 105, காலி வீதி வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# நெடிது

நீளமான கால்களும் மிக நீளமான கழுத்தும் கொண்ட 'பிளமிங்கோ' செந்நாரைகளே உலகில் மிகவும் உயரமான பறவைகள்.

இவை கிழக்கு ஆபிரிக்காவில் 'கிரேட் லேக்ஸ்' எனப்படும் பெரிய ஏரிகளில் இலட்சக்கணக்கில் காணப்படும். இவற்றைத் தனித்துக் காண்பது கடினம்.

இவற்றில் நான்கு வகைப் பறவைகள் உள்ளன. ஆனால் ஓரினம் மற்றோரினத்துடன் சேராது. இவற்றின் உயரம்-எழுந்து நிற்கும்போது 3 அடி 5 அங்குலமாக இருக்கும்.

'ஓடுமீனோட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு' என்பது போல் இதன் இரையான மீனை எதிர்பார்த்து நீர் நிலையில் தவமிருக்கும்போது, தனது பிரமாண்டமான கழுத்தை மீன்களுக்குக் காட்டிப் பயமுறுத்தாமல், பல வளைவுகளாக வளைத்து வைத்துக் கொண்டு குறி வைத்து காத்திருக்கிறது இந்தச் செந்நாரை.





ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

# புதிது



ஜேர்மனி ஃபிராங்பேர்ட் நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியின் தலைமைக் கட்டடம்தான் இங்கு காணப்படுகிறது. 259 மீட்டர் (849 அடி) உயரமான இக்கட்டடத்தில், போதுமான அளவு இயற்கைக் காற்றும் சூரிய வெளிச்சமும் புகுவதற்கேற்ற வசதி செய்யப்பட்டுள்ளதாம்.

முக்கோண வடிவில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் நடுவில் 160 மீட்டர் (524 அடி) உயரமான திறந்த வெளியான அமைப்பும் இருக்கிறது. இதுவே இயற்கைச் சூழலை இதில் வசிப்பவர்களுக்கு வழங்குகிறது. இது தவிர இதில் நிரந்தர வாசம் செய்யும் குடியாளர்கள் உலவியோ அல்லது நண்பர்களுடன் கூடிக்குலாவுவதற்கோ ஏற்றவாறு சுற்றுவட்டப் பூங்காக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கட்டடத்தின் மற்றுமொரு தனிச் சிறப்பம்சம் என்னவென்றால் இக்கட்டடத்தின் நிழல் சுற்றியிருக்கும் கட்டடங்களில் படிந்து உபத்திரவம் தராதாம்.

இக்கட்டடத்தை சேர் நோர்மன் ஃபோஸ்டரும் அவருடன் இணைந்தவர்களும் வடிவமைத்துள்ளனர்.

# கொடிது



தாவரங்கள் பொதுவாக அவற்றின் இலைகளிலுள்ள அமைப்பினைப் பயன்படுத்தி, சூரியக் கதிர்களின் உதவியுடன் அவற்றுக்கான உணவை [illegible] கனியுப்புகளையும் உறிஞ்சி எடுத்து இரையாக்கி வளர்கின்றன.

இருப்பினும் மாமிசம் உண்ணும் தாவரங்களும் இல்லாமலில்லை. ஆபிரிக்காவில் சிறிய வண்டினங்களையே பிடித்து இரையாக்கிக் கொள்ளும் தாவரங்கள் உள்ளன.

இவற்றின் இலைகள், கொடிகள், பூக்கள் ஆகியன அபாயகரமானவை. இத்தகைய மரம்-செடிகளின் அருகே சென்றால் அவற்றின் இலைகளாலோ கொடிகளாலோ, அல்லது பூக்களின் இதழ்களாலோ, அகப்படும் பிராணிகளை அப்படியே அமுக்கிப் பிடித்துக்கொண்டு விடுகின்றன.

ஒரு தும்பிப் பூச்சியை 'லபக்' என்று பிடித்துக்கொண்டது இத்தாவரம். அகப்பட்டுக் கொண்டால் மீளமுடியாதவாறு பெருமுட்புகளை அத்தாவரம் போட்டு, தும்பியை வளைத்துப் பிடித்துக்கொண்டுள்ள காட்சியையே இங்கு காண்கிறீர்கள்.

இத்தாவரத்தின் இலையில் ஒருவகை காப்பு சக்தி உண்டு. அதனால் கவரப்படும் தும்பிப்பூச்சியை ஒரு திராவகத்தை அரை நொடியில் வீசி வளைத்துப் பிடித்துக் கொள்கிறது. உடனடியாகவே அவ்விலையின் உட்பகுதியிலிருந்து ஒருவகைச் செந்திராவகம் சுரந்து பிடிக்கப்பட்ட தும்பியின் உடல் முழுவதும் பரவுகிறது.

இந்நிலையில் பூச்சியின் நிறம் இலையின் வர்ணத்துக்கேற்றவாறு மாற்றமடைகிறது. இத்துடன் பூச்சியின் ஊனும் உறிஞ்சப்பட்டு சீரணிக்கப்படுவதற்கும் அத்திராவகம் உதவுகிறது.

ஒரு தும்பி பிடிபட்டால் ஏறத்தாழ 10 நாட்கள்வரை அந்த இலையின் 'மூடிய கதவுகள்' திறக்கப்படமாட்டாது. அதற்கிடையில் அந்தப் பூச்சியின் சகல பாகங்களும் தாவரத்தின் இரையாகி, சீரணமாகிவிடும்.



கம்பித் தொடர்பில்லாத கைக்கடக்கமான செல்போன்கள் இப்போதெல்லாம் மிக மிகச் சாதாரணம். சில ஆயிரம் ரூபாய்களில் ஒரு நாளிலேயே நமது வீட்டு வாசலுக்கு தொலைபேசிச் சாதனம் வந்து சேர்ந்துவிடும். எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்.

ஆனால் படத்தில் காணப்படும் இத்தொலைபேசியின் பெறுமதி என்ன தெரியுமா? 66 ஆயிரத்து 429 பவுண். இலங்கை பணமதிப்பில் 74 இலட்சத்து 62 ஆயிரத்தி 448 ரூபாய்! அது மயக்கம் போட்டு விழுந்தது

இந்தத் தொலைபேசிக்கு ஏன் இத்தனை விலை என்று கேட்கத் தோன்றும்.

இது 18 காரட் தங்கத்தாலானது. இலக்கங்கள் மற்றும் ஏனைய சமிக்ஞை சாதனங்கள் வெள்ளை மற்றும் செம்மஞ்சள் வைரங்களாலானவை.

# மதிப்பு

இப்பொழுது புரிகிறதா... இதற்கேன் இவ்வளவு விலை என்று...?

இலண்டன் மாநகரிலுள்ள 'டேவிட் மொறிஸ் இன்டர்நாஷனல்' என்ற ஆபரணப் பணிமனையே இந்தத் தொலைபேசிக் கவசை 1996இல் வடிவமைத்தது. ஆனால் இதன் தற்போதைய உடைமையாளர் யார் என்பதை ஏதோ ஒரு காரணத்தால் வெளியிட மறுத்துவிட்டனர்.

உலகிலேயே இன்றுவரை அதி விலைகூடிய செல்போன் என்று உலக சாதனை படைத்துள்ள செல்போன் இதுதான்.

இதே நிறுவனம்தான் 1971ல் வெளியான ஜேம்ஸ் பொண்ட் வரிசையிலான 'டைமண்ட்ஸ் ஆர் ஃபோரெவர்' (DIAMONDS ARE FOREVER) திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட விலை உயர்ந்த ஆபரணங்களை வடிவமைத்தவர்கள்.

# பலம்



சிங்கம் காட்டில் காணப்படும் விலங்குகளை உண்டு பசி தீர்க்கும். ஆனால் எல்லா வகையான மிருகங்களையும் சிங்கம் புசிப்பதில்லை. வேறு மிருகங்களால் கொல்லப்பட்டுக் கிடக்கும் ஒரு பிராணியின் ஊனையும் சிங்கம் உண்பதில்லை.

மிருகக் காட்சிச் சாலையில் உள்ள சிங்கங்கள் விதிவிலக்கு. அவற்றுக்கு தானாகவே வேட்டையாடி இரை பிடிப்பதற்கு எவ்வித வசதியுமில்லை. இதனால் காட்சிச் சாலை ஊழியர்கள் கொண்டு வந்து கொடுப்பதைத்தான் உண்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தம்.

பெண்சிங்கங்கள் குறிப்பாக ஏதாவது ஒரு மானைத்தான் இரையாகப் பிடித்து உண்ண வேண்டும் என்று திட்டமிட்டால் அதே மானைக் குறிவைத்து எத்தனை மைல் வேண்டுமானாலும் துரத்திச் சென்று பிடித்துக் கொள்ளும்.

அந்த மானைத் துரத்திக்கொண்டு ஓடும்போது வேறோர் மான் குறுக்கிட்டாலும், அதனை ஏறெடுத்தும் பார்க்கமாட்டாது.

இதுகாலவரை ஆய்வாளர்களின் கணிப்புக்குட்பட்ட ஆகப்பெரிய சிங்கம் தென்னாபிரிக்காவின் ட்ரான்ஸ்வால் மாநிலத்திலுள்ள ஹெக்ரோன்புருட் என்ற இடத்தில் 1936ல் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டது. இதன் எடை 313 கிலோ (690 இறாத்தல்) இதுதான் உலக சாதனைச் சிங்கம்.



தகவல்- திரு திருமதி ஆனந்தன், கனடா.

## 1 வது பிறந்தநாள் வாழ்த்து

ரகுதேவ் சாம்ப்சன்
(27.01.99)

சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட ரகு-கவி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் சாம்ப்சன் தனது முதலாவது பிறந்த தினத்தை கடந்த நாளில் (27.01.99) அன்று தனது அப்பா அம்மாவுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அப்பு, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், கொழும்பு நதீசா அக்கா, கனடா அப்பா, அம்மம்மா, கொழும்பு மச்சான், மச்சாள், சாவகச்சேரியில் உள்ள அம்மப்பா, மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக இறைவன் அருளால் வாழ வாழ்த்துகிறார்கள்.